தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

# NEOP

## தேசிய அவசரகால நிலைமைகளின் போதான செயலாற்றுகைத திட்டம

ஆவணி 2017

DMC

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

## தேசிய அவசரகால நிலைமைகளின் போதான செயலாற்றுகைத் திட்டம்

முன்னெச்சரிக்கை விடுத்தல், பதில் நடவடிக்கைகள், ஒருங்கிணைப்பு, பொறுப்புக்கள் என்பன தேசிய அவசரகால நிலைமைகளின் போதான செயற்பாட்டுத் திட்டத்தினூடாகப் பிரதிபலிக்கின்றன. தனி நபர்களின் கடமைப் பொறுப்புக்கள், விதித்துரைக்கப்பட்ட பணிகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றும் ஒழுங்கு முறைகள் என்பன குறிப்பிட்ட நிறுவனத்தின் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தில் அனர்த்தப் பதில் நடவடிக்கைகள் தொடர்பான ஆக்கக்கூறில் காட்டப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம்,
தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு.

### தொடர்பு கொள்ளக்கூடிய முறைகள்

தொலைபேசி: 011 2136222, 011 2670002, 077 3957900
தொலைநகல்: 011 7634008, 011 5971219, 011 2671458, 011 2670079
மின்னஞ்சல்: eocdmc@gov.lk; eocdmc@gmail.com;
செய்மதி: 008821623112673; 008821623112897, 08821623112552

## முன்னுரை

2015ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திர இல.1933/13 மூலம் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 43வது அத்தியாயத்தின் 1வது பந்தியின் படி அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் பொறுப்புக்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ள சகல நிறுவனங்களினதும் பணிகள் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை உட்பட மேற்பார்வை செய்யும் பொருட்டு அமைச்சருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன் படி தேசிய அவசரகால நிலைமைகளின் போதான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு அமைச்சருடையதாகும்.

அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தின்படி தேசிய அவசரகால நிலைமைகளின் போதான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபைக்கு உதவும் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு உள்ளது. அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டவுடன் தேசிய அவசரகால நிலைமைகளின் போதான திட்டத்தை ஒருங்கிணைப்பதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் சட்டமூலத்தின் ஊடாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தொடர்ந்து சகல அமைச்சுக்களும் அரச துறைசார் அமைப்புக்களும் தமது நிறுவனத்துக்காகத் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் அனர்த்தங்கள் மற்றும் அதன் தாக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் பொருட்டுத் தமது நிறுவனத்தின் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தேசிய அவசரகால நிலைமைகள் திட்டம் மற்றும் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உயிர்களையும் சொத்துக்களையும் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதுடன் சேதங்களைக் குறைத்துக்கொள்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களின் உள மற்றும் உடல் ரீதியிலான ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் அத்தியாவசிய சேவைகளை உடனடியாக வழமை நிலைமைக்குக் கொண்டு வருவதற்கும் முடியும்.

பல் அனர்த்த முன்னெச்சரிக்கை முறைமை மற்றும் பதில் நடவடிக்கைத் திட்டமிடல் அபிவிருத்தித் திட்டமிடலின் ஒருங்கிணைப்பு, சமுதாயஞ்சார் அனர்த்த முகாமைத்துவம், பொதுமக்கள் விழிப்புணர்வு, நிவாரணம், உடனடி மீண்டெழல் மற்றும் பயிற்சி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் தேசிய அவசரகால நிலைமை கருமமாற்றும் திட்டம் கூட்டிணைக்கின்றது.

மாகாண, உள்ளூராட்சி, மாவட்ட, பிராந்திய மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டங்களில் - உப தேசிய நிர்வாக மட்டங்களில் உள்ள அதிகாரிகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், சமுதாயத் தலைவர்கள் போன்றோருடன் ஆலோசித்து அவர்களின் கருத்துக்கள் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆவணம் நாட்டின் பதில் நடவடிக்கை மற்றும் அவசர தயார்நிலை தொடர்பான தகைமையை விருத்தி செய்வதற்குப் பயனுள்ளதாக அமையும் என நம்புகின்றேன்.

எமக்குத் தலைமைத்துவம் வழங்கியமை தொடர்பாகக் கௌரவ அமைச்சருக்கும் இந்தத் திட்டத்தைத் தயாரிக்க வழிகாட்டிய அமைச்சின் செயலாளருக்கும் இந்தத் தேசிய அவசரச் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தலில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது நன்றிகளை இத்தால் தெரிவித்துக் கொள்வதோடு இந்த நடவடிக்கைகள் முழுவதிலும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக்

கருத்திட்டத்தினால் வழங்கப்பட்ட ஆதரவுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் அமைச்சுக்கும் அதன் முகவர் நிறுவனங்களுக்கும் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பணிப்பாளர் நாயகம்,**
**அனர்த்த முகாமைத்துவ நிலையம்**

## உள்ளடக்கம்

**முன்னுரை** **2**

**அட்டவணைப் பட்டியல்** **7**

**எண்ணிக்கைகள் பட்டியல்** **7**

**இணைப்புப் பட்டியல்கள்** **7**

**குறியீட்டுப் பெயர்களும் சுருக்கக் குறியீடுகளும்** **8**

**நிறைவேற்றுச் சுருக்கம்** **10**

**அத்தியாயம் 01** **13**

1.1 அறிமுகம் 13

1.1.1 இலங்கையில் அனர்த்த ஆபத்துக்களின் அதிகரிப்பு 14

1.1.2 தேசிய அவசர செயற்பாட்டுத் சட்டத்தில் உள்ளடங்கும் அனர்த்தங்கள் 17

1.2 பொருளடக்கம் 18

1.2.1 தேசிய அவசரகால நிலைமைகளின் போதான திட்டமொன்றின் தேவையும் அபிவிருத்திச் செயற்பாடும் 18

1.3 நோக்கம் 19

1.3.1 விடயப் பொறுப்பு 20

1.4 இலக்கும் நோக்கங்களும் 21

1.5 தேசிய அவசரகாலக் செயற்பாட்டுத் திட்டத்தின் சட்டப் பின்னணி 21

1.6 கால அட்டவணையையும் தேசிய அவசரகால நிலைமை கருமமாற்றும் சட்டத்தை நாள்வரைப்படுத்தலும். 23

**அத்தியாயம் 2** **24**

2.1 இலங்கை அவசர பதில் நடவடிக்கைச் செயற்பாடு 24

2.2 அவசர பதில் நடவடிக்கைக் கட்டங்கள் 24

2.3 அவசர பதில் நடவடிக்கையின் செயல்முறை ஓட்டம் 26

2.3.1 நிலைமையை மேற்பார்வை செய்தலும் எதிர்வு கூறலும். - 27 -

2.3.2 அவசர கண்காணிப்பு - 27 -

2.3.3 அவசரகால நிலைமைகள் மற்றும் முன்னெச்சரிக்கை தொடர்பான மதிப்பீடுகள் - 27 -

2.3.4 தகவல்கள் பகிர்ந்தளிக்கப்படல் - 27 -

2.3.5 வெளியேற்றுவதற்கான கட்டளையைப் பிறப்பித்தல் - 28 -

2.3.6 அவசர நிலைமைகளுக்குத் தயாராகுதல்/ அவசரகாலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் - 28 -

2.3.7 அனர்த்த நிலைமைகளை அறிவித்தல் - 28 -

2.3.8. தரப்பகுப்பாய்வு/அவசர நழலைமைகள் -29-

2.3.9.தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கான உதவிகள்-29-

2.3.10 பாதுகாப்பு நிலைமைகளை முகாமைத்துவம் செய்தலும் தேவைகளை மதிப்பீடு செய்தலும் - 29 -

2.3.11 அனர்த்த பதில் நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைத்தல் - 30 -

2.3.12 துரிதமாக வழமை நிலைக்கு வருவதற்கான தேவைகளை மதிப்பீடு செய்தல் - 30 -

2.3.13 உடனடியாக வழமை நிலைக்குத் திரும்புதலை நடைமுறைப்படுத்தல் - 30 -

2.4. அனர்த்தங்களின் பல்வேறு கட்டங்களில் பல்வேறு செயற்பாடுகளுக்காகப் பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்கள். - 30 -

2.4.1. அவசர நிலைமை முகாமைக்கான கட்டளை தொடர் -33-

**அத்தியாயம் 3** **-35-**

3.1 அனர்த்த முன்னெச்சரிக்கை -35-

3.1.1 முன்னெச்சரிக்கை ஒழுங்கு -35-

3.2 முன்னெச்சரிக்கை வழங்குவதற்கான தொழிநுட்ப நிறுவனங்கள் -37-

3.3 முன்னெச்சரிக்கையினை வழங்குவதற்கான காரணிகள் -38-

3.4 முன்னெச்சரிக்கை வழங்கும் போது ஊடகங்களின் வகிபங்கு -39-

3.5 முன்னெச்சரிக்கை வழங்கும்போது இராணுவம் மற்றும் காவல்துறையின் பங்கு -39-

**அத்தியாயம் 4** **- 40 -**

4.1 தேசிய மட்டத்தில் அவசரகால பதிலளிப்புகள் - 40 -

4.1.1 அவசரகால செயற்பாட்டு நிலையம் (EOC) - 40 -

4.1.2 தேசிய மட்டங்களில் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் - 41 -

4.1.3 அவசரகால பதிலளிப்புக் குழுக்களின் ஒருங்கிணைப்புகள் - 41 -

4.2 நிறுவனங்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் - 42 -

4.3 பங்குதாரர் முகவர்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் - 44 -

4.3.1 முதலாவது பதிலளிப்பு முகவர்கள் - 45 -

4.3.2 அத்தியாவசியச் சேவகைள் (ES) - 47 -

4.3.3 இலகுபடுத்தும் நிறுவனங்கள் (FA) - 50 -

4.4 அனர்த்தங்களுக்கு பதிலளிக்கின்ற பங்குதாரர் நிறுவனங்களின் பொறுப்புகள் - 52 -

4.5 உப-தேசிய மட்டங்களில் அவசரகாலச் செயற்பாட்டுப் பொறிமுறைகள் - 54 -

4.6 பாதுகாப்பு நிலையங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிவாரணம் தொடர்பான ஏற்பாடுகள் - 55 -

4.7 இறந்த உடல்களைப் பேணுதல்: அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணல் (DVI) - 56 -

4.8 முன்கூட்டிய மீட்பு நடவடிக்கைகள் - 56 -

| | |
|---|---|
| 4.8.1 அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் | - 56 - |
| 4.8.2 அனர்தத்திற்கு பின்னரான தேவை மதிப்பீடு தொடர்பான தரவுகள்/தகவல்கள் | -57- |
| 4.8.3 விரைவாக மீண்டெழும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் | - 57 - |
| 4.9 அனர்த்த பதிலளிப்புகளில் நிதி ரீதியான கருவிகள் | - 57 - |
| 4.10 வழிகாட்டல் கருவிகள் மற்றும் உடன்படிக்கைகள் | - 58 - |
| 4.11 அவசரகால பதிலளிப்பு ஒருங்கிணைப்பு வரைவுச்சட்டகம் | - 58 - |
| 4.11.1 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை | - 58 - |
| 4.11.2 தேசிய பதிலளிப்பு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு | - 59 - |
| 4.11.3 சர்வதேச உதவிகளை ஒருங்கிணைத்தல் | - 59 - |
| 4.11.4 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு (NDMCC) | - 60 - |
| 4.11.5 அவசரகால பதிலளிப்புக் குழு (ERC) | - 60 - |
| 4.11.6 மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள் | - 60 - |
| 4.11.7 கிராம சேவகர் மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவக் குழு | - 61 - |
| 4.12 அனர்த்த தகவல் முகாமைத்துவம் | - 61 - |
| 4.12.1 அடிப்படைத் தரவுகளைத் தயார்செய்தல் | - 61 - |
| 4.12.2 அனர்த்தம் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் அவற்றைப் பரப்புகின்ற செயன்முறைகள் | - 61 - |
| 4.12.3 ஊடக அறிவித்தல்கள் | - 63 - |

| | | |
|---|---|---|
| இணைப்பு 1 | பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாகத் தரவுகளைச் சேகரிக்கும் மாதிரிப் படிவம் | - 65 - |
| இணைப்பு 2 | நாளாந்த நிலைமைகள் பற்றிய அறிக்கைக்கான மாதிரிப்படிவம் | - 66 - |
| இணைப்பு 3 | வரைவிலக்கணங்கள்/ மொழிகள் | - 67 - |
| இணைப்பு 4 | அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் குழு உறுப்பினர்கள் | - 78 - |
| இணைப்பு 5 | அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் குழுவின் பொறுப்புக்கள் | - 79 - |

## புள்ளிவிபரங்கள்


| உரு. இல. | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1.1 | கடும் மழையுடன் கூடிய சராசரி நாட்கள் | 12 |
| 1.2 | வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளினால் பலியானவர்கள் எண்ணிக்கை. | 13 |
| 2.1 | இலங்கையில் அவசரகாலப் பதில் நடவடிக்கைச் செயன்முறை | 20 |


## அட்டவணைகள்


| அட்டவணை இல. | அட்டவணைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1.1. | 05 வருடகாலத்திற்குள் பாதிக்கப்பட்டவர்களின் சராசரி எண்ணிக்கை | 13 |
| 1-2 | அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் இலங்கையின் அனர்த்தங்கள் தொடர்பான பெறுபேறுகளை வகைப்படுத்தல் | 14 |
| 3-1 | முன்னெச்சரிக்கை வழங்குவது தொடர்பாகப் பொறுப்புக்கூறும் நிறுவனங்கள் | 27 |
| 4.1 | முதலாவது பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகவர் நிறுவனங்கள் | 33 |
| 4.2 | அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் | 35 |
| 4.3 | பதில் நடவடிக்கைகளுக்கு உதவும் அமைப்புக்கள் | 37 |


## பிற்சேர்க்கைகள்


| இணைப்புக்கள் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| இணைப்பு 1 | பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாகத் தரவுகளைச் சேகரிக்கும் மாதிரி | 47 |
| இணைப்பு 2 | நாளாந்த நிலைமைகள் பற்றிய அறிக்கை | 48 |
| இணைப்பு 3 | வரைவிலக்கணங்கள்/ கலைச்சொற்கள் | 49 |
| இணைப்பு 4 | அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் குழு உறுப்பினர்கள் | 57 |
| இணைப்பு 5 | அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் குழுவின் பொறுப்புக்கள் | 58 |

## குறியீட்டுப் பெயர்களும் சுருக்கக் குறியீடுகளும்

| | |
|---|---|
| AEA | அணுசக்தி அதிகாரசபை |
| CBO | சமுதாய அடிப்படையிலான அமைப்பு |
| CEA | மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| CEB | இலங்கை மின்சார சபை |
| CCCRMD | கரையோரப் பாதுகாப்பு, கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் |
| DoM | வளிமண்டலவியல் திணைக்களம் |
| DDMCU | மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு |
| DM | அனர்த்த முகாமைத்துவம் |
| DM Act | அனர்த்த முகாமைத்துவச் சட்டம் |
| DMC | அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| DRM | அனர்த்த ஆபத்து முகாமைத்துவம் |
| DRR | அனர்த்த ஆபத்து குறைத்தல் |
| DVI | அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுதல் |
| EOC | அவசர நிலைமைகளின்போது கருமமாற்றும் நிலையம் |
| EW | முன்னெச்சரிக்கை |
| ERC | அவசர நிலைமை பதில் நடவடிக்கைக் குழு |
| GA | அரசாங்க அதிபர் |
| GSMB | புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக ஆய்வு நிலையம் |
| GN | கிராம உத்தியோகத்தர் (பிரதேச நிர்வாகத்தின் கீழ்க் கிராம மட்டத்தில் செயற்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர், முன்னர் இதற்குச் சமனான கிராமத் தலைவர் ஆகிய பதவிகள் இதில் அடங்குகின்றன) |
| ID | நீர்ப்பாசனத் திணைக்களம் |
| IDMP | தாபன ரீதியான அனர்த்த முகாமைத்துவத் திட்டம் |
| INGO | சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| LAs | உள்ளூராட்சி நிறுவனம் |
| MASL | மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை |
| MDM | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு |
| MLGPC | மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு |
| MEPA | கடல் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை |
| MoH | சுகாதார அமைச்சு |
| NARA | தேசிய நீர்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர் நிலையம் |
| NBRO | தேசியக் கட்டிட ஆய்வு முகவர் நிறுவனம் |
| NCDM | இடர் முகாமைத்துவத் தேசிய சபை |
| NDMCC | தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு |
| NDMP | தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் |
| NDRSC | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் |
| NEOP | தேசிய அவசர நிலைமைகள் கருமமாற்றல் திட்டம் |
| NGO | அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| NWSDB | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை |
| PC | மாகாண சபை |
| PRDA | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| RDA | வீதி அபிவிருத்தி அதிகாரசபை |
| S A R | தேடுதல் மற்றம் மீட்பு |

| | |
|---|---|
| SLAF | இலங்கை வான்படை |
| SLDRN | இலங்கை அனர்த்த வள வலைப்பின்னல் |
| SLPA | இலங்கைத் துறைமுக அதிகாரசபை |
| SLRCS | இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் |
| SOPs | தரநிலை செயற்படு வழிமுறை |
| TAC | தொழில்நுட்ப ஆலோசனைக்குழு |
| UN | ஐக்கிய நாடுகள் |
| UNDP | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்சித்திட்டம் |
| UN ISDR | அனர்த்தத் தணிப்புக்கான ஐக்கிய நாடுகளின் சர்வதேச மூலோபாயங்கள் |
| WFP | உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் |

## நிறைவேற்றுச் சுருக்கம்

ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் மற்றும் தேசிய மட்டத்திலான அல்லது உப தேசிய மட்டத்திலான அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்காக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தினால் முறையே தேசிய அவசரகாலக் செயலாற்றுகைத் திட்டம் மற்றும் தாபன அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய அவசரகாலக் கருமமாற்றும் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடமைகள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைக்கும் போது அதிமேதகு சனாதிபதி அவர்களினால் தேசிய அவசரகால நிலைமைகள் கரும மாற்றும் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின் அளவினை மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய அளவினையும் விட அது அதிகமாக இருக்கும்போது தேசிய அவசரகாலக் கருமமாற்றும் திட்டத்தின் ஊடாகத் தேசிய மட்டத்திலான அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்களின் பொறுப்புக்கள் ஒப்பீட்டளவில் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் இனங்காணப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கான பின்னணிகள், பொறுப்புக்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகைதவிதிமுறைகள் தாபன ரீதியிலான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்களினால் மிகவும் அபாயகரமான அனர்த்த நிலைமைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் இதனால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை, உயிர்களுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் என்பன பெரிதும் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்காகக் குறிப்பிட்ட அதிகாரமுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கிடையிலான தொடர்புகள் மேம்படுத்தப்படுவதுடன் அவசரகால நிலைமைகள் மற்றும் அனர்த்தங்களின் போது தேவைப்படும் அனைத்து விடயங்களும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவத் திட்டம் அனர்த்தங்களுக்குத் தயாராகும் பின்னணியின் கீழ் இனங்காணப்பட்ட ஊழியர்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் மற்றும் பதில் நடவடிக்கைகள், வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை அவற்றுக்கான வசதிகளும் வழங்கப்படுகின்றன. மக்களையும் சொத்துக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அதற்கான அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பிராந்தியங்களுக்கிடையிலும், பிராந்தியத்திற்குள்ளும் ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும்.

தேசிய அவசரகால நிலைமைகள் செயலாற்றுகைத் திட்டத்துடன் தொடர்புபட்ட உயர் மட்ட சட்டவாக்கக் கட்டமைப்பின் கீழ் அவசர நிலைமைகள் கருமமாற்றல்களை வலுவூட்டப் போதுமான ஆவணமாக நாட்டுக்கான அனர்த்த முகாமைத்தவக் கொள்கைத்திட்டம் கருதப்படுகின்றது.

தேசிய அவசரகால நிலைமைகள் செயலாற்றுகைத் திட்டத்தின் மூலம் நாட்டில் அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தெளிவாக்கப்படுவதுடன் இலங்கையில் இடம்பெறும் வளிமண்டலவியல், நீர், பௌதிக, தொழில்நுட்ப மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்கள் தொடர்பாகவும் இந்தப் பொறிமுறை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அனர்த்த முன் பொறிமுறை ஊடாக அனர்த்தங்களுக்கு முன்னர், அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ள கால எல்லைக்குள் மற்றும் அனர்த்தங்களுக்குப் பின்னர் ஆகிய மூன்று கட்டங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அனர்த்த முகாமைத்துவ அவசரகால செயற்பாட்டு பிரிவானது மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகுகள், அனைத்து தேசிய தொழில்நுட்ப நிறுவனங்கள், மாகாணம், ஊடகம், அவசர பதிலளிப்பு குழுக்கள் ஆகியவற்றுக்கு முன்னெச்சரிக்கை தகவல்களை உடனுக்குடன் வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளதுடன் தொடர்புகளையும் ஏற்படுத்திக்கொள்ளும் என்பதுடன் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள மக்களுக்குப் பொருத்தமான முறையில் அவ்வாறான அனர்த்தங்கள் தொடர்பாக எச்சரிக்கைகளை விடுத்தல் மற்றும் பிரச்சாரங்களை மேற்கொள்ளல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. முன்னாயத்த எச்சரிக்கைகளைப் பிரச்சாரம் செய்யும்போது இராணுவம், ஊடகம், பொலிசார் ஆகியோருக்கான கடமைகள் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளதுடன் அனர்த்த முன்னெச்சரிக்கை ஒருங்கிணைப்புப் பணிகள் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் என்றால் என்ன என்பது தொடர்பாக வரைவிலக்கணம் கூறி தேசிய, மாவட்ட, பிரதேச அடிப்படையிலும் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடிப்படையிலும் நடைமுறைப்படுத்தப்படும் அவசர நிலைமைகளின் போதான கருமமாற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக விரிவான முறையில் கவனம் செலுத்தப்படும். தேசிய மட்டத்திலான பிரச்சார நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் மாவட்ட அடிப்படையிலான பிரச்சார நடவடிக்கைகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளினால் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

பதில் நடவடிக்கைகள் தொடர்பாக முன் ஆயத்தங்கள் இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதுடன் குறிப்பிட்ட நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கள் தேசிய அவசர நிலைமைகள் தொடர்பிலான சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளது. தேசிய மட்டத்திலான அவசர நிலைமைகள் பதில் நடவடிக்கை ஒருங்கிணைப்புக் கட்டமைப்பில் ஒட்டுமொத்தமான அவசரகால நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கை ஒருங்கிணைப்புத் தொடர்பான குறிப்புக்கள் காட்டப்பட்டுள்ளன. அவசரகால நிலைமைகளின் போதான செயலாற்றுகை நிலையத்தின் செயற்பாடு மற்றும் அதனைத் தொடர்ச்சியான ஆயத்த நிலையில் வைத்திருத்தலின் பொருட்டு அதற்குரிய வளங்கல் மற்றும் அவசர நிலைமைகளின் போதான தொடர்புகொள்ளும்

நிலையங்களுடன் அது 24 மணித்தியாலங்கள் பூராகவும் வாரத்தின் ஏழு நாட்களிலும் இயங்கிக்கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்வது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும்.

அனர்த்த எச்சரிக்கை உட்பட ஏனைய முக்கியமான தகவல்கள் மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அறிவிப்பதற்கான தொடர்பாடல் கட்டமைப்புக்களுடன் கூடிய உபதேசிய மட்டத்திலான நிர்வாக அலகுகளுடன் அவசரகால நிலைமைகளின் போதான நிலையங்களுடன் தொடர்பு கொண்டுள்ளதுடன் ஏனைய பிரதான தரப்பினருடனும் ஊடகத்துடனும் அது தொடர்புகொண்டுள்ளது.

அனர்த்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் இருந்த நிலைமைக்கு மீளக் கொண்டுவருதல் உட்பட அனர்த்த சம்பவம் ஏற்பட அண்மித்திருந்த சந்தர்ப்பங்களிலிருந்து அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னரான கால எல்லைவரை மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளும் தேசிய அவசர நிலைமைகள் கருமமாற்றும் திட்டத்தின் மூலம் உள்வாங்கப்படும். அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் ஆராயப்படும். தேவையான அனைத்து வளங்களையும் உள்ளடக்கிப் பயனுள்ள வகையிலும் வினைத்திறனுடனும் அனைத்து விடயங்களையும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான ஆற்றலை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ள வழிமுறையான சம்பவக்கட்டளைக் கட்டமைப்பு மற்றும் அதன் மூலமான செயற்பாடுகள் தொடர்பாக இங்கு விளக்கமளிக்கப்படுகின்றன.

அவசர நிலைமைகளின் போதான செயலாற்றுகை நிலையத்தின் தயாராக இருக்கும் நிலைமையைத் தொடர்ச்சியாகப் பேணுதல் மற்றும் அவசரகால நிலைமையின் போதான செயலாற்றுகை நிலையத்துடன் 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயற்படக்கூடிய வகையில் தேவையான வளங்களை அதிகரித்தல் மற்றும் அவசர நிலைய செயலாற்றுகை நிலையத்தின் கடமைகள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாகாணங்கள், மாவட்டங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் மாகாண சபைகளுக்கு அனர்த்த முன்னெச்சரிக்கைகளை விடுத்தல் மற்றும் மிகவும் முக்கியமான தகவல்களை வழங்குவதற்கான தொடர்பாடல் கட்டமைப்பினை வலுவூட்டிச் செயற்படுத்தல் என்பன இங்கு முக்கியமானவையாகும். இதற்காக அவசரகாலக் செயலாற்றுகை நிலையம் துணைத் தேசிய மட்டத்திலான நிர்வாகத்துடனும், ஏனைய முக்கிய தரப்பினருடனும் ஊடகத் துறையினருடனும் இணைந்து செயற்படவேண்டும். தேசிய அவசர நிலைமை செயலாற்றுகைப் பிரிவானது அனர்த்தம் இடம்பெறுவதற்கு முன்னராகவும், அனர்த்தம் ஏற்பட்டதன் பின்பும் தான் ஆரம்பிக்கும் சகல செயற்பாடுகள் மற்றும் வழமை நிலைக்குக் கொண்டுவருதல் உட்பட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணுதல் வரையிலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## அத்தியாயம் 01

### 1.1 அறிமுகம்


அவசர நிலைமைகளின் போது ஆரம்ப முதல் நிமிடங்களில் எடுக்கும் நடவடிக்கைகள் உயிர்களைக் காப்பாற்றுவதற்கும் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் வாழ்வாதாரங்களைக் காப்பாற்றுவதற்கும் மிக முக்கியமானதாக இருக்கும். அனர்த்த ஆபத்தை எதிர்நோக்குபவர்களுக்கு விடுக்கும் உடனடி எச்சரிக்கைகள் அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்து செல்வதற்கான தீர்மானங்களை எடுப்பதற்குக் காரணமாக அமையும் என்பதுடன் இதன் மூலம் உயிர் ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்ளலாம். அவசர நிலைமைகளின் போது அவர்களின் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள முன்னுரிமை அளிப்பதாக இருத்தல் வேண்டும். இரண்டாவது முக்கியமான விடயம் நிலைமையை வழமை நிலைக்குக் கொண்டு வருவதாகும். இதற்காக எடுக்கவேண்டிய பல நடவடிக்கைகள் உள்ளன.

இலங்கையில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சூறாவளி, புயல், காடுகள் மற்றும் நகர்ப்புறங்களில் ஏற்படும் தீ போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகும் நிலைமை அதிகமாக உள்ளது. மிகவும் பயனுள்ள மானிடப் பயன்பாடுகளுக்கான முன்னேற்பாடாக அனர்த்தங்களின் போது செயற்பட நேரிடும் மானிடச் சம்பவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக அனர்த்த முன் ஆயத்தங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும். அனர்த்தங்களின் போது மேற்கொள்ளப்படும் பயனுள்ள மானிடப் பதில் நடடிக்கைகள் சகல மட்டங்களிலிலும் காணப்படும் திறமைகள் மற்றும் வளங்கள் உட்படப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகவர் நிறுவனங்களின் ஆயத்தமும் மிகவும் முக்கியமானதாக விளங்கும்.

2004 சுனாமியின் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட பதில் நடவடிக்கைகளுக்காகத் தயாராகும் திட்டத்தின்போது பிரதேச மட்டத்தில்கூடச் சிறிய அனர்த்தங்களுக்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றல் அதிகரித்துள்ளது. எவ்வாறாக இருப்பினும் 2010, 2011, 2014 மற்றும் 2016, 2017ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, வறட்சி, மண்சரிவு போன்ற பாரியளவிலான அவசர கருமமாற்றும் நடவடிக்கைகளுக்காகத் தேசிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேலும் விரிவு படுத்தப்பட்டன.
அதிகரித்து வரும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தக்கூடிய அனர்த்தங்களின் மூலம் உயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆபத்துக்களைக் குறைப்பதற்காக அவசர செயலாற்றுகைகள் மற்றும் அனர்த்தங்களுக்காகத் தயாராகுதல் மிகவும் முக்கியமாகும். இதில் தேசிய, மாவட்ட பிரதேச உள்ளூராட்சி மட்டத்தில் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதற்கான செயற்பாடுகள் இதில் உள்ளடக்கப்படுகின்றன.

**1.1.1 இலங்கையில் அனர்த்த ஆபத்துக்களின் அதிகரிப்பு**

உலக மழைவீழ்ச்சி தொடர்பான அறிக்கைகள் பெறப்படும் விதத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ள பாரிய அளவிலான மழை பெய்தல் அண்மைக்கால வரலாற்றில் அதிரித்துள்ளது. காலநிலை மாற்றங்கள் தொடர்பான நாடுகளுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டறிக்கையின்படி பெரும்பாலான நிலப் பகுதியில் கடும் மழைவீழ்ச்சி ஏற்படும் நிலைமை அதிகரித்துள்ளது.




Figurவரைபடம் -1.1 பெரும் மழை பெய்த மொத்த நாட்களின் போக்கு

*மூலம்: வளிமண்டலவியல் திணைக்களம்*

2000ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் பிரதான வளிமண்டலவியல் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி 150 மி.மீற்றருக்கும் மேற்பட்ட மழைவீழ்ச்சியானது இலங்கையில் காலநிலை மாற்றங்களின் தீவிரத்தன்மையை எடுத்துக்காட்டுவதுடன் அவை தொடர்ந்தும் நீர் வளிமண்டல நிலைமைகளினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்ந்தும் அதிகரிப்பதை எடுத்துக்காட்டுகின்றது. 2016 ஆம், 2017 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கடும் மழை வீழ்ச்சி காரணமாக மிகவும் அபாயகரமான வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு என்பன ஏற்பட்டதுடன் அவை இந்தத் தீவிரமடைந்த நிலைமைகளுக்குச் சிறந்த உதாரணங்களாக உள்ளன. மறுபுறத்தில் வறட்சி ஏற்படும் நிலைமைகளும் அதிகரித்துள்ளன.


**மண்சரிவு**

பருவக்காற்று மற்றும் இடைக்காலப் பருவக்காற்றுக் காலங்களில் ஏற்படும் மழைவீழ்ச்சியுடன் ஏற்படும் மண்சரிவு இலங்கையின் மத்திய மலைநாடு எதிர்நோக்கும் பலத்த சவாலாகும். மூன்று

நிர்வாக மாவட்டங்களுக்குள் உள்ள 13,000 சதுர கிலோமீற்றருக்குள் (நாட்டின் மொத்தக் காணிகளில் 20 வீதத்துக்கும் அதிகமான அளவு) மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 42 வீதத்தினர் இந்த மாவட்டங்களில் வாழ்கின்றனர்.

காலநிலை மாற்றங்களினால் தற்செயலாக ஏற்படும் தீவிர காலநிலைத் தன்மைகளின் தாக்கத்தினால் மாற்றமடையும் பருவக்காற்று முறையும், இந்து சமுத்திரத்தில் ஏற்படும் கடும் காற்றுக் காரணமாக மிகப் பாரிய பிரதேசத்திற்குக் குறிப்பிட்ட நேரத்துக்குள் பெரும் மழை வீழ்ச்சியை ஏற்படுத்துவதுடன் இதன் மூலம் மண்சரிவுகளும் மலைச் சரிவுகளும் ஏற்படுகின்றன.

2003ஆம் ஆண்டு ஏற்பட்ட இவ்வாறான நிலைமை காரணமாக 254 பேர் உயிரிழந்ததுடன் அந்தக் கால எல்லை தொடக்கம் 2013 வரை மரணங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்துள்ளது. எவ்வாறாயினும் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரிய அனர்த்தக் குறைப்புக்களுக்கான பாரிய முயற்சிகள் மத்தியிலும் உயிர்ச்சேதங்கள், பொருட் சேதங்கள் என்பன 2014ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் அதிகரித்த நிலைமை காணப்படுகின்றது. (உருவப்படம் 1.2)




வரைபடம் **1.2:** வெள்ளம் மற்றும் மண்சரிவினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை

*மூலம்: NBRO and Desinventar database*

வெள்ளப் பெருக்கு என்பது இலங்கையில் அடிக்கடி ஏற்படும் அனர்த்தமாக உள்ளதுடன் 2000 – 2015ஆம் ஆண்டுகள் வரையிலான காலப்பகுதிக்குள் 25 மாவட்டங்களில் 23 மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பிரதானமாக ஏற்படும் வெள்ளப்பெருக்கு இந்த இரண்டு பருவப்

பெயர்ச்சிக் காற்று மழையுடன் சம்பந்தப்பட்டுள்ளது. அதாவது தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று மழை (மே மாதம் தொடக்கம் செப்டெம்பர் மாதம் வரையும்) வட கிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று மழை என இவற்றைச் சுட்டிக்காட்டலாம். பல்வேறு காரணிகளின் தாக்கத்தினால் அதாவது கடும் பருவப் பெயர்ச்சிக் காற்று மழை, நகரமயமாதல், நீர் வடிகால்கள் விரிவடைதல், கால்வாய்கள், நீரோடைகள் என்பன செவ்வனே பராமரிக்கப்படாமை என்பன இந்த நிலைமையைத் தீவிரப்படுத்தியுள்ள வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் உயிர்ச் சேதங்களும் மண்சரிவினால் ஏற்படும் உயிர் ஆபத்துக்களைப் போன்று உள்ளன. 2003 இல் ஏற்பட்ட பெரும் அழிவினை ஏற்படுத்திய பெரும் வெள்ளப் பெருக்குடன் ஒப்பிடும் போது முன் ஆயத்தம் தேடுதல், மீட்புப் போன்ற நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றகரமான நிலைமைகள் காரணமாக 2013 இல் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும் 2014ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்துள்ளது. குறிப்பு 02 ( அட்டவணை 1.1)

| **கால எல்லை** | **பாதிக்கப்பட்ட சனத்தொகை சராசரி** |
|---|---|
| 2000 - 2004 | 328,964 |
| 2005 - 2009 | 667,945 |
| 2010 - 2014 | 739,534 |

அட்டவணை **1.1.** 5 வருட இடைவெளியில் பாதிக்கப்பட்ட மக்களின் சராசரி எண்ணிக்கை.

*மூலம்: Desinvantar Database*

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இடிமின்னல்களின் எண்ணிக்கையைப் பொதுவாகப் பார்க்கும்போது அவை அதிகரித்துள்ளதை வளிமண்டலவியல் ஆராய்ச்சி நிலையம் அவதானித்துள்ளது. மிருகங்களின் தாக்குதல்கள் அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் இனங்காணப்படாவிடினும் வன சீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளதன்படி யானைகளின் வாழ்விடங்கள், யானைகள் கடக்கும் இடங்களில் மக்கள் குடியேறியுள்ளதனால் மனித – யானை மோதல் ஏற்பட்டு உயிரிழப்புக்களும் அதிகரித்துள்ளன. வீதிகள் விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதை அடுத்து எரிபொருள் உட்பட ஆபத்து நிறைந்த இரசாயனப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனால் கனரக வாகனங்கள் பயணிகளின் வாகனங்களுடன் மோதுவதனால் ஏற்படும் விபத்துக்களும் அதிகரித்துள்ளதனால் இந்த விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட வேண்டும். அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் எதிர்காலத்தில் திருத்தங்களைச் செய்யும்போது இந்த விடயம் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

**1.1.2 தேசிய அவசர கருமமாற்றும் சட்டத்தில் உள்ளடங்கும் அனர்த்தங்கள்**

| **புவிச்சரிதவியல்** | **நீர் மற்றும் வளிமண்டலவியல்** | **தொழில்நுட்பம்** | **உயிரியல் அனர்த்தங்கள்** | **மனிதர்களினால் ஏற்படும்/ மனித செயற்பாடுகளினால் ஏற்படும்** |
|---|---|---|---|---|
| மண்சரிவு | புயல் | தொழில்நுட்ப அனர்த்தங்கள் | தொற்று நோய்கள் | வெடிப்பு சம்பவங்கள் |
| சுனாமி | புயல், பேரலைகள் | வாயு இடர் | | விமானத் தாக்குதல் |
| நில அதிர்வு | வெள்ளம் | சமுத்திர அனர்த்தங்கள் | | சிவில் அல்லது உள்ளக மோதல்கள் |
| | வரட்சி | நகர்ப்புற வீதி | | காட்டுத் தீ |
| | காட்டுத் தீ | இரசாயனப் பொருட்கள் காரணமாக ஏற்படும் திடீர் விபத்துக்கள் | | பௌதிக மற்றும் இரசாயனப் பொருட்களினால் ஏற்படும் காயங்கள் |
| | கடலரிப்பு, கடல்மட்டம் உயர்தல் | கதிர்வீச்சுக்கள் தொடர்பான அவசர நிலைமைகள் | | |
| | எடனேடோ, இடிமின்னல், புயல் | உள்நாட்டு மற்றும் கடற் பகுதிகளில் எண்ணெய்க்கசிவு | | |
| | | அணு விபத்துக்கள் | | |

அட்டவணை 1-2 அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின்படி இலங்கையில் அனர்த்தங்கள் தொடர்பான பொதுவான வகைப்படுத்தல்.

போக்குவரத்தின் போதான விபத்துக்கள், விலங்குளின் தாக்குதல், கடல் மட்டம் அதிகரித்தல், கட்டிடங்கள் இடிந்து விழுதல், அணைக்கட்டுக்கள் உடைதல் போன்ற விடயங்கள் அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் உள்ளடக்காவிடினும் அவசர நிலைமைகளை ஏற்படுத்தக் கூடிய இந்த விடயங்களையும் தேசிய அனர்த்த நிவாரண கருமமாற்றும் திட்டம் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.

## 1.2 பொருளடக்கம்

இலங்கையில் அரசியல் யாப்பினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் அவசரகால நிலைமைகளைத் தேசிய சபையையும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தையும், அமைச்சின் கீழ்க் கொண்டுவந்து தேசிய அவசரகாலக் செயலாற்றுகைத் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பினை அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்குக் கையளித்துள்ளார்.

சட்டமூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அனைத்து முகவர் நிலையங்களின் உதவியுடன் தேசிய அவசரகாலக் செயலாற்றுகை திட்டத்தைத் தயாரித்துள்ளது. தேசிய மட்டத்திலான அவசரகாலக் செயலாற்றுகை தேசிய அவசரகால நிலைமைகளின் போதான சர்வதேச உதவிகளை ஒருங்கிணைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இந்தத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவசரகால நிலைமைகளின் போதான செயலாற்றுகைகளில் அமைச்சின் கடமைப் பொறுப்பும் இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் மிகவும் வேகமாக அதிகரித்து வருவதுடன் அது திடீர் அவசரகால நிலைமைகளை ஏற்படுத்துகின்றது. மக்களின் மற்றும் சமூகத்தின் அனைத்து பிரிவினதும் முன் ஆயத்த ஆற்றலை விருத்தி செய்தல், குழு அவசரகால அனர்த்த நிலைமைகளின் போது தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்காக அவசரகால நிலைமைகளின் போதான இந்தக் செயலாற்றுகை திட்டத்தைத் தயாரித்திருப்பதும் மிக முக்கியமாகும்.
தேசிய அவசரகால நிலைமைகளின் போதான செயலாற்றுகை திட்டம் தேசிய மட்டத்திலான அவசரகால நிலைமைகள் தொடர்பாகக் கருமமாற்றும் மாவட்ட மற்றும் பிரதேச அதிகாரிகளுக்கு இயற்கையாக அல்லது மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் எந்தவோர் அனர்த்தம் தொடர்பாகவும் செயலாற்றுவதற்கு குறிப்பிட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டத்துக்கமைய முறையே அவசரகால நிலைமைகளின் போதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த நேரிடும்.

### 1.2.1 தேசிய அவசரகால நிலைமைகளின் போதான திட்டமொன்றின் தேவையும் அபிவிருத்திச் செயற்பாடும்

அனர்த்த நிலைமைகளின் போது எந்தவோர் வகையிலான அனர்த்தம் அவசரகால நிலைமைகளின் போது செயற்படுவதற்காக இனங்காணப்பட்ட சகல பங்காளி முகவர் நிறுவனங்ளதும் பின்வரும் சகல விடயங்களையும் முன்னெச்சரிக்கைகள், முற்றாக இனங்காணப்பட்ட அதிகாரிகள் ஒப்படைக்கப்பட்ட தொண்டர் நிறுவனங்கள், மீட்புக் குழுக்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தனி நபர்கள், அவர்களது தேவைகளுக்கமைய உரிய தகவல்களில் பிரவேசித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீர். உணவு, தங்குமிட வசதிகளை வழங்குதல், மருத்துவ உதவிகள் போன்றவற்றைத் தகுந்த முறையிலும் நடப்புத் தேவைக்கமையவும் வழங்குதல் மிக முக்கியமாகும். பண்டங்கள், சேவைகள் தொடர்பில் சர்வதேச

உதவிகளை ஒருங்கிணைத்தல், தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் பண்டங்களை உரிய நேரத்தில் விடுவித்துக் கொள்ளல், பண்டங்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல், அனர்த்தங்கள் காரணமாகச் சேதமடைந்த மக்கள் பயன்பாடுகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை உடனடியாக வழமை நிலைக்குக் கொண்டுவருதல், அனர்த்தங்களின் பின்னரான சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல், குழந்தைகள், பெண்கள், முதியோர் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவையாகும். மிகவும் சிக்கலான அனர்த்த நிலைமைகளின்போது இந்த நிலைமைகளை மிகவும் செயற்திறனுடனும் துரிதமாகவும் மேற்கொள்வதற்காக முறையாகத் தயாரிக்கப்பட்ட இநத்தி திட்டம் மிகவம் இன்றியமையாததாகும்.

அவசரகால நிலைமைகளின் போதான தேசிய செயலாற்றுை திட்டத்தைத் தயாரிப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையமானது தேசிய சபைக்கும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கும் தமது ஒத்துழைப்பினை மேற்கொள்ளும் சில நிறுவனங்களுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயலாற்றுகை விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் தாபன அனர்த்த நிலைமைகள் கருமமாற்றும் திட்டத்தைத் தயாரிப்பதற்காகக் செயலாற்றுகை எடுகோள்களைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அது சபையின் அங்கீகாரத்துடன் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகவர் நிறுவனங்களுக்கு வழங்குதல் வேண்டும். முகவர் நிறுவனங்கள் கேட்டுக்கொண்டால் அனர்த்த முகாமைத்துவச் சட்டமூலத்தில் குறிப்பிட்டவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்துக் கொள்வதற்கு முகவர் நிறுவனங்களுக்கு உதவுதல் வேண்டும். அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்கு அது தொடர்பாக முன் கூட்டியே விளக்கமளித்தல், அடிக்கடி பயிற்சி வழங்குதல், முன் ஆயத்தங்கள் என்பவற்றின் அளவுக்கமைய அவசர கருமமாற்றும் திட்டம் வெற்றியளிக்கும்.

## 1.3 நோக்கம்

இந்தத் தேசிய அவசர நிலைமைகளின் போதான செயலாற்றுகை திட்டத்தின் மூலம் திட்டங்களும் கொள்கைகளும் விதிமுறைகளும் நிலைநாட்டப்படுவதுடன் அவசர செயலாற்றுகை முகவர் நிறுவனங்களை இனங்காணுதல், அவசர நிலைமைகளின் போதான செயலாற்றுகைகளை உறுதிப்படுத்தலும் அதற்கான பொறுப்புக்களும் கடமைகளும் ஒப்படைக்கப்படுகின்றன. அதே போன்று இந்தத் திட்டத்தின் ஊடாகச் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஊடாக வெளிவாரி ஒத்துழைப்புக்கான மூலங்கள் இனங்காணப்படுகின்றன.

இந்தத் திட்டமிடலுக்குள்:

- அதிகார எல்லைகள், ஒருங்கிணைப்பு உட்பட நாட்டின் அவசரகால நிலைமைகளின் போதான முகாமைத்துவக் கோட்பாட்டுக் கட்டமைப்பொன்றினை உருவாக்குதல்.
- இயற்கையான, மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான அனர்த்தங்களின் விளைவாக மக்களின் வாழ்க்கை, தனிப்பட்ட சொத்துக்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்புக்கள் தொடர்பில் பொறுப்புக்களைக் கையளித்தல், கடமைகள் ஒப்படைக்கப்பட்ட அரச முகவர் நிறுவனங்கள், தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட செயலாற்று விதிமுறைகள் அடங்கிய தாபன ரீதியிலான அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

### 1.3.1 விடயப் பொறுப்பு

இந்தத் திட்டத்தில் உள்ள கொள்கைகள், செயலாற்று விதிமுறைகள் மற்றும் ஏற்பாடுகள் என்பன சகல நபர்கள் மற்றும் அரச துறையின் முகவர் நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகும் என்பதுடன் அந்த அனைவரும் அவசரகால நிலைமைகளுக்காகத் தயாராகுதல், பதில் நடவடிக்கைகளை மற்றும் நாட்டுக்குள் வழமை நிலைக்குக் கொண்டுவருதல் என்பன இங்கு ஏற்புடையதாகும். இந்தத்திட்டமானது நாட்டில் எந்தவோர் பகுதியிலும் ஏற்படும் இயற்கையான அல்லது மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் தொழில்நுட்ப அனர்த்த நிலைமைகள் தொடர்பில் ஏற்புடையதாகும். இந்தத் திட்டங்களில் உள்வாங்கப்படும் அவசர நிலைமைகள் 2015ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.4 இலக்கும் நோக்கமும்

இந்தத் தேசிய அவசரகாலக் செயலாற்றுகை திட்டத்தின் நோக்கம் பயனுள்ள அனர்த்த செயற்பாட்டுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக அத்தியாவசிய சேவைகளை உடனடியாக வழமை நிலைமைக்குக் கொண்டுவருவதற்கான கட்டமைப்பினை வழங்குவதாகும். இந்த நோக்கங்களில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன:

- அவசரகால நிலைமைகளின் போது பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வழமை நிலைக்குக் கொண்டு செல்வதற்கான கருமமாற்றல்களைப் பொதுவாக முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஒருங்கிணைப்பதற்கான கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.
- அனர்த்த நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காகக் காயமடைபவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், உயிர்களைப் பாதுகாத்தல், தனியார் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்தல், அவசரகால நிலைமைகளின் போது அவற்றை முகாமைத்துவம் செய்யும் நபர்கள் மற்றும் செயற்பாட்டு விதிமுறைகளை வெவ்வேறாகக் குறிப்பிடுதல்.
- அனர்த்த முகாமைத்துவத்துக்காக அதிகார ரீதியிலான ஒருங்கிணைப்பு மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றை ஏற்படுத்தல்.
- பிரதான அனர்த்தமொன்றுக்குச் சற்று முன்னர், அனர்த்தத்தின் போது அல்லது அனர்த்தத்தின் பின்னர் அமைச்சுக்கள், அரச துறை முகவர் நிறுவனங்கள், தனியார் அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
- தேசிய மற்றும் பிரதேச ரீதியில் பதில் நடவடிக்கைகள மேற்கொள்ளும் அமைப்புக்களுக்குத் தேவையான வசதிகள் வழங்குதல்.

## 1.5 தேசிய அவசரகாலக் செயலாற்றுகைத் திட்டத்தின் சட்டப் பின்னணி

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 4(பீ)(சி) பகுதியின் கீழ் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை அவசர செயலாற்றுகையின் போதான திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பாகப் பொறுப்புக் கூறும் சபையினால் அனுமதித்த இந்தத் திட்டம் அமைச்சுக்களுக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பதுடன் அது நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தலும் வேண்டும். சட்டமூலத்தின் 8(2)(எ) பிரிவின் மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு இந்தச் சட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாகக் குறிப்பிட்ட நிறுவனங்களினால் தமது கடமைகள்/ பொறுப்புக்கள் என்பவற்றை நிறைவேற்றும்போது இருக்கும் வளங்களை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவது தொடர்பாக அதனை உறுதிப்படுத்துவதையும் தேசிய அவசரகாலக் கருமமாற்றும் சட்டத்துக்காகப் போதியளவு பிரச்சாரமொன்றைச் செய்வதையும் இது உறுதிப்படுத்துகின்றது.
அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் 10(10)வது பிரிவின்படி அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் தமது நிறுவனங்களுக்காகத் தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் சபையினால் குறித்துரைக்கப்பட்ட கருமமாற்றும் எடுகோள்களுக்கு ஏற்ப அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்துக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2015 செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமையத் தேசிய சபையும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் தேசிய அவசரகாலக் கருமமாற்றும் திட்டத்தைத் தயாரிக்கும் அமைச்சின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனால் தேசிய அவசரகால நிலைமைகள் சட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அமைச்சுக்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பு அமைச்சரைச் சார்ந்ததாகும். சட்டமூலத்தின் 11(1)ஆம் பிரிவின் கீழ் சனாதிபதிக்கு வெவ்வேறு பிரதேசங்களுக்கு அல்லது ஒட்டுமொத்தமான நாட்டுக்கு அனர்த்த நிலைமைகளைப் பிரகடனப்படுத்தலாம். இந்த அனர்த்தப் பிரகடனம் 02 மாத காலத்துக்கே வலுவிலிருக்கும் என்பதுடன் ஒரு தடவை அதனை ஆகக்கூடியது 02 மாத காலத்துக்கு நீடிக்கலாம். அந்தப் பிரகடனம் விடுக்கப்பட்டு அடுத்துவரும் முதலாவது பாராளுமன்ற அமர்வில் அது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அந்தப் பிரகடனத்தின் பின்னர் பிரதேசத்தில் உள்ள வளங்கள் பயன்படுத்தப்படல், ஒருங்கிணைத்தல், பாவித்தல், மேலதிக வளங்களைப் பெற்றுக்கொள்ளல், ஆட்களை மீட்டல், எந்தவோர் இடத்துக்கும் பிரவேசித்தல், மக்களைப் பாதுகாத்தல், மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுதல், எந்தவோர் பாதையிலும் வாகனப் போக்குவரத்தை இடைநிறுத்தல், பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் எந்தவோர் தடையையும் நீக்குதல், மற்றும் அனர்த்தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் சட்டமூலத்தில் செய்யப்பட்டுள்ளன. பின்வரும் சட்டங்களும் இலங்கையில் அவசரகால நிலைமைகளின் போதான கருமமாற்றல் முகாமைத்துவம் தொடர்பாக நடைமுறையில் இருக்கும்.

**உத்தேச வெள்ளப்பெருக்கு அனர்த்த அபாய முகாமைத்துவச் சட்டமூலம்**: வெள்ளப்பெருக்கு ஆபத்து முகாமைத்துவம் தொடர்பாக முகவர் நிலையங்களை இனங்காணுதல், பல்வேறு வெள்ளங்கள் தொடர்பாக முன்னெச்சரிக்கை விடுத்தல் என்பன.

**சமுத்திர சூழல் மாசடைவதைத் தடுக்கும் சட்டமூலம்**: சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்குத் தேசிய ரீதியாக எண்ணெய்க்கசிவு ஏற்படும்போது அது தொடர்பாக அவசரகால நிலைமை கருமமாற்றும் சட்டத்தைத் தயாரித்தல், எந்தவோர் அளவிலான எண்ணெய்க் கசிவு ஏற்படும்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியுடன் அதற்கான திட்டத்தைத் தயாரித்தல்.

**2014 ஆம் ஆண்டு 40ஆம் இலக்க இலங்கை அணு அதிகாரசபைச் சட்டமூலம்:** செயற்படக்கூடிய கதிர்வீச்சு மற்றும் அணு தொடர்பான அவசர நிலைமைகளை எதிர்நோக்குவதற்காக 58(1)(2) மற்றும் (3)ஆம் பிரிவின் கீழ் தேசிய அணு அவசர நிலைமைகள் சட்டமூலத்தைத் தயாரித்தல்.

**1865 ஆம் ஆண்டு 16ஆம் இலக்கப் பொலிஸ் கட்டளைச் சட்டம்:** அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு உரிய அதிகாரப் பிரதேசத்துக்குள் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒருவரை அரச அதிகாரி ஒருவரின் நிர்வாகத்தின் கீழ் நியமித்துக்கொள்ள அதிகாரம் வழங்கப்படுகின்றது.

**1949 ஆம் ஆண்டு 07ஆம் இலக்க இராணுவச் சட்டமூலம்:** சட்டமூலத்தின் 19(1)(சி) மற்றும் 23 எ(1)இன் கீழ் நாட்டின் தேவைக்காக இராணுவத்தை இராணுவ ரீதியில் அல்லது கடமைகளில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## 1.6 கால அட்டவணையையும் தேசிய அவசரகால நிலைமை செயலாற்றுகை சட்டத்தை நடைமுறைப்படுத்தலும்

தேசிய அவசரகால சட்டமூலம் என்பது நடைமுறையில் இருக்கும் ஓர் வியாபித்த திட்டமாகும் என்பதுடன் பாரிய இடரின் பின்னர் அல்லது சகல முகவர் நிறுவனங்களின் உதவியுடன் தொடர்ச்சியான அபிப்பிராயங்களை நடத்துதல் மூலம் கற்றுக்கொள்ளும் விடயங்கள் ஊடாக இதனை இற்றைப்படுத்த/ திருத்த முடியும்.

### அத்தியாயம் 2

## 2.1 இலங்கை அவசர பதில் நடவடிக்கைச் செயற்பாடு

''சகல அனர்த்தங்கள்'' தொடர்பான அணுகுமுறையூடாக அனர்த்தத் தொடர்கள் அதனது அளவு, கால எல்லை ஆகிய காரணங்கள் மாற்றமடையும். அனர்த்தங்கள் தொடர்பில் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆற்றலை அதிகரிக்கின்றது. தேசிய அவசரகாலக் செயலாற்றுகை திட்டத்தினால் அவசரகால நிலைமை இனங்காணப்பட்டதன் பின்னர் அது சமூகம், பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண அதிகார மட்டத்தில் முகாமைத்துவம் செய்ய முடியாவிடின் அதன் மூலம் பதில் நடவடிக்கைக்கான செயற்பாடுகளை ஆற்றல்கள் மற்றும் விதிமுறைகள் என்பன பிரதிபலிக்கின்றன. தேசிய அவசர அனர்த்த பதில் நடவடிக்கைத் திட்டமானது அமைச்சுக்கள், அரச துறை அமைப்புக்களின் கடமைப் பொறுப்புக்களை வெவ்வேறாக இனங்காண்பதுடன் தேசிய மற்றும் சர்வதேச சேவைகளையும் தொழில்நுட்ப சேவைகளையும் ஒருங்கிணைப்பதுடன் பிரதேச மற்றும் மாவட்ட ரீதியாக அவசரகாலப் பதில் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதுடன் அவற்றை வழிநடத்தியும் வருகின்றது. மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான அவசர நிலைமைகள் குறிப்பிட்ட பதில் நடவடிக்கை நிறுவனங்களின் திட்டங்களுக்குச் சமனானதாக இருக்கும். தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தயாரிக்கப்படும் நிவாரண வரைபடங்கள் அல்லது கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் தயார் செய்யப்படும் சமூக மட்டத்திலான அனர்த்த வரைபடங்களை அடிப்படையாகக் கொண்டு அவசர பதில் நடவடிக்கைகள் இடம் பெறும்.

## 2.2 அவசர பதில் நடவடிக்கைக் கட்டம்

தேசிய அவசரகாலக் செயலாற்றுகை திட்டமானது மூன்று கட்டங்களின் கீழ் அதாவது அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னர், அனர்த்தங்கள் ஏற்படும்போது, அனர்த்தங்கள் ஏற்பட்டதன் பின்னரான அவசரகால நடவடிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கும். விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் யாதெனில், இந்தத் துணைக் கட்டங்களுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் இல்லை என்பதுடன் சகல அனர்த்தங்களின் போது பணிகள் பொதுவாக ஒரு நிலைத் தன்மையைக் கொண்டிருக்கும்.


- **சம்பவமொன்று இடம்பெறுவதற்கு முன்னர்** - இந்தக் கட்டங்கள் முன் எச்சரிக்கை/ எச்சரிக்கையாக இருக்கும்படியாகக் கூறப்பட்ட நேரம் தொடக்கம் அனர்த்தம் இடம்பெற்ற சந்தர்ப்பம் வரை இருக்கும் என்பதுடன் அப்புறப்படுத்தும் பணிகள் அதி உயர் அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் சம்பவம் இடம் பெறும்போது அது பொது மக்களைப் பாதிக்காதவாறு இருக்கச் செய்ய வேண்டும். எவ்வாறாயினும் செய்திகளை அனுப்புதல் மீண்டும் வழமை நிலைக்கு வரும்வரை தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.

- **அனர்த்தம் ஏற்படும் போது:** அனர்த்தம் ஏற்பட்டதன் பின்னர் வெளியேற்றுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும்.

- **அனர்த்தம் முடிவடைந்ததன் பின்னர்**: தேடுதல், மீட்பு, மீட்புப் பணிகளில் ஈடுபடும் குழுக்களுடன் கலந்துரையாடிப் பின்னர் அந்தப் பணிகளைக் கைவிட அதிகாரிகள் தீர்மானிக்கும் வரை அந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். வெளியேற்றும் பணிகள் உரியவாறு முன்னெடுக்கப்படும். நிவாரணங்கள் மற்றும் பதில் நடவடிக்கைகளுக்கான சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் உடனடியாக வழமை நிலைக்குக் கொண்டுவருதல் இதன் மூலம் இடம் பெறும்.

**தேசிய அவசரகாலப் பதில் நடவடிக்கைகளுக்கான திட்டத்தின்படி அவசர நடவடிக்கைகளுக்கான செயற்பாடு குறிப்பிட்ட நிறுவனங்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பதில் நடவடிக்கைகளான இந்த மூன்று கட்டங்களிலும், தேசிய மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் ஒன்றோடொன்று எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பது காட்டப்பட்டுள்ளது.**

## 2.3 அவசர பதில் நடவடிக்கையின் செயல்முறை ஓட்டம்




வரைபடம் 2.1 இலங்கையில் அவசர பதில் நடவடிக்கை

2.1வது உருவப்படமானது இலங்கையின் அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாட்டினைக் காட்டுகின்றது. அது பிரதான மூன்று கட்டங்களுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளது. 1. அனர்த்தத்துக்குச் சற்று முன்னர், 2. அனர்த்தத்தின் போது, 3. அனர்த்தத்துக்கு ஓரளவு பின்னர் என்பனவாகும். இதில் தேசிய, மாவட்ட, மற்றும் பிரதேச ரீதியிலான தலையீடுகள் இடம் பெறும்.

அந்தச் செயற்பாட்டின் துணைச் செயற்பாடுகள் பின்வருமாறு:

### 2.3.1 நிலைமையை மேற்பார்வை செய்தலும் எதிர்வு கூறலும்.

வளிமண்டலவியல், நீரியல், பௌதிகவியல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்கள் தொடர்பாக முகவர் நிறுவனங்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான செயற்பாடாகும். தொழில்நுட்ப முகவர் நிறுவனங்கள் பொதுவான நீரோட்டத்துக்கு மாறான ஒன்றைக் காணும்போது அவர்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர கருமமாற்றும் பிரிவுக்கு விசேடமாக அறிவிப்பார்கள்.

### 2.3.2 அவசர பாதுகாப்பு

ஏதேனும் ஓர் நிலைமையை அதானித்ததன் பின்னர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நிலைமைகள் வழி தவறிச் செல்லும்போது அல்லது குறிப்பிட்ட தரப்பினர் எச்சரிக்கையாக இருப்பதற்காக அல்லது ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பாக மேலதிக விழிப்புடன் இருப்பதற்கு, அவசர கால கருமமாற்றும் குழுவானது பாதுகாப்பினை இடுவதற்கான நிலைமையை அறிவிக்கும்.

### 2.3.3 அவசரகால நிலைமைகள் மற்றும் முன்னெச்சரிக்கை தொடர்பான மதிப்பீடுகள்

தொழில்நுட்பக் செயலாற்றுகை பிரிவுக்குக் குறிப்பிட்ட தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் அத்தாட்சியுடன் தகவல் கிடைத்ததன் பின்னர் தொழில்நுட்பக் கருமமாற்றும் பிரிவானது பொதுவான வேலைகளின் போதான பாதகமான நிலைமைகள் தொடர்பாக மதிப்பீடொன்றை ஆரம்பிப்பதுடன் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகள் தொடர்பாக ஆயத்தமாதலை மேற்கொள்ளும். பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்ட தொழில்நுட்ப எச்சரிக்கையுடன் இருத்தல்/ எச்சரிக்கை விடுக்கும் விஞ்ஞான ரீதியிலான வகைப்படுத்தலூடாக இலக்கமிடப்பட்டதன் பின்னர் முகவர் நிலையமானது உயிர்களைப் பாதுகாத்தல், சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக அவசரகாலக் கருமமாற்றும் குழுவுக்கு முன் அறிவித்தலை மேற்கொள்ளும்.

### 2.3.4 தகவல்கள் பகிர்ந்தளிக்கப்படல்

பாதிக்கப்படக் கூடிய மக்களைச் சென்றடைவதற்காக நிறுவப்பட்ட தொடர்பாடல் ஊடகங்கள் மூலம் அவசரகாலக் செயலாற்றுகைக் குழுவானது பாதிக்கப்பட்ட மக்களுக்காக மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர், மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக மூன்று கட்டங்களில் அறிவிப்பதுடன் ஏற்படக்கூடிய நிலைமைகள் சம்பந்தமாக முன் ஆயத்தங்களைச் செய்வதற்காகவும் 1) எச்சரிக்கையுடன் இருப்பதற்காகவும் மக்கள் அறிவூட்டப்படுகின்றனர். 2)

எச்சரிக்கை விடுத்தல், உயிர்களைப் பாதுகாத்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கான நடவடிக்கைகளை எடுத்தல். 3) வெளியேற்றுதல், மாவட்ட அதிகாரிகள் ஊடாக அவசர நிலைமைகள் கருமமாற்றும் குழுவானது மக்களுக்குத் தமது பொதுவான வதிவிடங்களைக் கைவிட்டுச் செல்வதற்கு ஆயத்தமாகும்போது இனங்காணப்பட்ட பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கான தகவல்களை வழங்கும். தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பெற்றுக்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கைகள் ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு வழங்கப்படும்.

### 2.3.5 வெளியேற்றுவதற்கான கட்டளையைப் பிறப்பித்தல்

முன்னெச்சரிக்கைகள் மற்றும் வெளியேற்றுவதற்காகச் சிபார்சுகள் கிடைத்ததன் பின்னர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் வெளியேற்றுவதற்கான கட்டளையை வழங்குவார்.

### 2.3.6 அவசர நிலைமைகளுக்குத் தயாராகுதல்/ அவசரகாலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து முழுமையான முன் எச்சரிக்கை விடுத்தல் செய்திகள் கிடைத்ததன் பின்னர் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் தேசிய அவசரகாலச் செயலாற்றுகை திட்டத்தை அல்லது நிறுவனங்களின் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகரித்து வரும் அனர்த்த நிலைமைகள் சம்பந்தமாக அமைச்சர்/ செயலாளருக்கு அறிவூட்டியதன் பின்னர் தேசிய அவசரகாலச் செயலாற்றுகை திட்டத்தை அனர்த்தங்கள் தொடர்பாகப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் துணை அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை வலுவூட்ட வேண்டும்.

### 2.3.7 அனர்த்த நிலைமைகளை அறிவித்தல்

பெரும் அழிவுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்து வரும் போது குறிப்பிட்ட முகவர் நிறுவனங்களின் ஆலோசனையுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் தரப் பகுப்பாய்வுடன் அனர்த்தத்தின் அளவு துணைத் தேசிய மட்டம் மற்றும் தேசிய மட்டத்திலான அமைப்புக்களுக்கு அதைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் நிலையிலிருந்து அப்பால் சென்றிருப்பின் அமைச்சரினால் (தேசிய சபைக்கு) அல்லது ஜனாதிபதிக்கு அனர்த்த நிலைமையைப் பிரகடனப் படுத்துமாறு ஆலோசனை வழங்குவதுடன் அதன் மூலம் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு மேலதிக சக்தியை வழங்க முடியும். ஜனாதிபதி அவர்களுக்கு ஏதேனுமோர் பிரதேசம் தொடர்பாக அல்லது ஒட்டுமொத்தமான நாடு தொடர்பாக அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தலாம்.

**2.3.8. தரப்பகுப்பாய்வு/அவசர நிலைமைகள்:** பொதுமக்களிடமிருந்து மற்றும் உள்நாட்டு/ சர்வதேச முகவர் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அவசர நிலைமை கருமமாற்றும் குழு கடும் ஆபத்துள்ள பகுதிகளில் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பாகப் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களைச் சேவையில் ஈடுபடுத்தலாம். மாவட்ட மற்றும் பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளவாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காகக் குறிப்பிட்ட பிரதேச செயலகப் பிரிவுகள் / மாவட்டங்களுக்கு அறிவிக்கும்.

**2.3.9 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கான உதவிகள்**

நிலைமைகள் பகுப்பாய்வு மற்றம் அடிப்படைத் தகவல்களை உறுதி செய்து கொண்டதன் பின்னர் அவசர நிலைமைகள் செயலாற்றுகை குழுவினால், அனர்த்த நிலைமையை மாவட்ட அதிகாரிகளினால் சமாளிக்க முடியாத நிலைமை என உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் மாவட்ட அதிகாரிகளுக்கு உதவுவதற்காக மேலதிக ஆட்களை ஈடுபடுத்த இராணுவத்துடன் தொடர்பாடலை மேற்கொள்ளும். அவசர நிலைமை செயலாற்றுகை குழு தொடர்ச்சியாக நிலைமையை மேற்பார்வை செய்வதுடன் நிலைமையைத் தேசிய மட்டத்திலும் கட்டுப்படுத்த இயலாது என்ற சந்தர்ப்பத்தில் வெளிவாரி உதவிகள் தேவைப்படுவதாகத் தீர்மானிக்கப்படும் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் வெளிவிவகார அமைச்சின் ஊடாகச் சர்வதேச உதவியைக் கோருமாறு அமைச்சரை அறிவூட்டலாம்.

**2.3.10 பாதுகாப்பு நிலைமைகளை முகாமைத்துவம் செய்தலும் தேவைகளை மதிப்பீடு செய்தலும்**

பிரதேச செயலாளர்கள், கிராமிய மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களைப் பயன்படுத்திப் பாதுகாப்பு நிலைமைகளை நிறுவி அந்த நிலையத்துக்க வரும் இடம்பெயர்ந்த நபர்களைப் பதிவு செய்கின்றது. அந்த இடங்களில் உள்ள முகாமைத்துவமானது பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டம் மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை உரியவாறு நடைமுறைப்படுத்தும். தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நலையம் வெவ்வேறு இடங்களிலுள்ள தரவுகளைச் சேகரித்து அனர்த்தத்துக்கு முன்னர் சகல முகவர் நிறுவனங்களினால் இணக்கம் காணப்பட்ட பொது மாதிரிப் படிவத்தில் இவற்றை உள்ளடக்கும். உணவு மற்றும் உணவு அல்லாதவை தொடர்பாக வேகமான மதிப்பீடொன்றைச் செய்து அதனைப் பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பினால் தொழில்நுட்ப அறிவுடன் வெளிவாரி நிறுவனங்கள் / தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ளும் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பான தரவுகளையும், வகைப்படுத்தல்களையும், அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தகவல் முகாமைத்துவப் பிரிவின் அடிப்படைத் தரவுகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தியதன் பின்னர் அவசர தேவைகளைத் தீர்மானிக்கும். பிரிவு அனர்த்த முகாமைத்துவ அமைச்சாகும்.

### 2.3.11 அனர்த்த பதில் நடவடிக்கைகள் தொடர்பான ஒருங்கிணைத்தல்

அனர்த்த பதில் நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகள் தேசிய மற்றும் உப தேசிய மட்டத்தில் ஒருங்கிணைக்கப்படும். ஒருங்கிணைப்புக் கட்டமைப்பு 4வது அத்தியாயத்தின் அவசர நிலைமைகள் பதில் நடவடிக்கைள் தொடர்பான ஒருங்கிணைப்புக் கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ளது.

### 2.3.12 துரிதமாக வழமை நிலைக்கு வருவதற்கான தேவைகளை மதிப்பீடு செய்தல்

அனர்த்த நிலைமைகள் வழமையான நிலைமைக்குத் திரும்புவதற்கு ஆரம்பமானதும் அனர்த்தத்தின் பின்னரான மதிப்பீடு ஒன்றைச் சகல துறைகளையும் சேர்ந்த முகவர் நிறுவனங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

### 2.3.13 உடனடியாக வழமை நிலைக்குத் திரும்புதலை நடைமுறைப்படுத்தல்

இதற்கமைய வீடுகளுக்காக இழப்பீடு வழங்குதல், தற்காலிக வீடுகளை வழங்குதல், உணவுகளுக்காக உதவுதல், வாழ்வாதார உதவிகள் குடிநீர், நீர் வழங்கல், அத்தியாவசிய தேவைகள், உட்கட்டமைப்பு வசதிகளை மீள் நிர்மாணித்தல் என்பன உள்ளடங்கும். அதேபோல் கையளிக்கப்பட்ட உடனடியாக வழமை நிலைக்குத் திரும்பும் திட்டங்களை ஒவ்வொரு சம்பவங்களின் அடிப்படையில் மேம்படுத்தப்படுவதுடன் அது அனர்த்த தாக்கத்தின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இவ்வாறான திட்டங்களை ‘‘ஈஆர்டி’’ ஊடாக நடைமுறைப்படுத்துவதற்காகப் பொதுத் திறைசேரியின் நிதி மற்றும் சர்வதேச வளங்கள் ஊடாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொள்ளும்.

## 2.4 அனர்த்தங்களின் பல்வேறு கட்டங்களில் பல்வேறு செயற்பாடுகளுக்காகப் பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்கள்.

அனைத்துத் தரப்பினரிடமும் அவசர நிலைமைகளை முகாமைத்துவம் செய்யும்போது அதன் சிறந்த செயற்பாடான முன் எச்சரிக்கை தொடக்கம் உடனடியாக வழமை நிலைக்குத் திரும்பும் நிலைமை வரை இடம்பெற அவசர பதில் நடவடிக்கைப் பொறிமுறை உதவி புரியும் என்பதுடன் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளும் இனம் காணப்பட்டுள்ளன.

| அனர்த்த கட்டம் | செயற்பாடு | பொறுப்புக் கூறும் நிறுவனம் |
|---|---|---|
| அனர்த்தத்திற்குச் சற்று முன்னர் | தனி நபர்கள், பிரதேச சமூகம், நிறுவப்பட்ட கட்டமைப்புக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களிடமிருந்து இடர் தகவல்களைச் சேகரித்தல் | தொழில்நுட்ப முகவர் நிறுவனங்கள் |
| | மதிப்பீடு, தயார் செய்தல், தேசிய அவசர நிலைமை கருமமாற்றும் திட்டம், நிறுவன ரீதியிலான அனர்த்த முகாமைத்துவத் திட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக முன் எச்சரிக்கைகளை விடுப்பதற்கான கட்டளையைப் பிறப்பித்தல்.<br><br>பாதுகாப்பு இடங்களின் ஆயத்தம் தொடர்பாக ஆராய்தல். | தொழில்நுட்ப முகவர் நிறுவனங்கள்<br>அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்,<br>அனைத்து முகாமைத்துவ அமைச்சின் அனுமதியுடன் கிராம உத்தியோகத்தர்கள். |
| | முன் அனர்த்த எச்சரிக்கைகளைப் பகிர்தல் | அனர்த்த முகாமைத்துவ நிலையம்<br>இராணுவம்<br>பொலிசார்<br>மாவட்டச் செயலாளர்,<br>பிரதேச செயலாளர்<br>கிராம உத்தியோகத்தர்<br>ஊடகம் (வானொலி, தொலைக்காட்சி, சமூக இணையத்தளங்கள்) |
| | வெளியேற்றுவதற்கான கட்டளையைப் பிறப்பித்தல் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்<br>மாவட்டச் செயலாளர் |
| | வெளியேற்றுவதற்கான உதவிகள் | தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், கிராம உத்தியோகத்தர்,<br>கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் உள்ளவர்கள்,<br>இராணுவம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள். |
| | அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் தலைமையில் தேசிய அவசரகால நிலைமைகள் ஒருங்கிணைப்புக் குழு | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் |
| | அவசர கருமமாற்றும் குழுவின் கூட்டம் | பணிப்பாளர் நாயகம்<br>அனர்த்த முகாமைத்துவ நிலையம் |

| | | |
|---|---|---|
| அனர்த்தத்தின் போது | ஊடகங்களுக்கு அறிவூட்டல் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு |
| | தேவைகள் தொடர்பான மதிப்பீடு (உணவு மற்றும் உணவு அல்லாத) | கிராம உத்தியோகத்தர் பிரதேச மட்டத்திலான தேசிய நிவாரண சேவைகள் நிலையம் |
| | அனைத்தும் அமைதியாக இருப்பதை அறிவித்தல் | தொழில்நுட்ப முகவர் நிறுவனங்கள், அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| | மாவட்டச் செயலாளர்களுக்கு நிதி வழங்குதல் | தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் |
| | மாவட்ட, பிரதேச மட்டத்திலான கூட்டங்களை ஒருங்கிணைத்தல் | மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர் |
| | அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தலைமைதாங்கும் சர்வதேச உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்களுடனான பேச்சுவார்த்தைகள் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு |
| | சமைத்த உணவினை வழங்குதல் | பாதுகாப்பு நிலைமைகளின் முகாமைத்துவக் குழுக்களின் உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள், தொண்டர் அமைப்புக்கள் |
| அனர்த்தத்தின் போது | பாதுகாப்பு இடங்ககளில் வசதிகளும் பாதுகாப்பும் வழங்குதல் | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, பொலிஸ், உள்ளூராட்சி மன்றங்கள் |
| | உணவு அல்லாத உதவிப் பொருட்கள் உபகரணங்கள் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள |
| | அனர்த்த நிலைமைகளைப் பிரகடனப்படுத்தல் (அவசியம் ஏற்படும் போது) | அனர்த்த முகாமைத்துவச் சபை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி |
| | சர்வதேச உதவியுடன் கிடைக்கும் பொருட்களை விடுவித்துப் பெறுதல், ஏற்றிச் செல்லல் | தேசிய அனர்த்த சேவைகள் நிவாரண நிலையம் |
| | நிவாரணப் பொருட்களைப் பகிர்ந்தளித்தல் | பிரதேச செயலாளர் மாவட்டச் செயலாளர் என்பவர்களுடன் தனியார் அமைப்புக்கள் |
| | அவசர சேவைகளை வழமை நிலைக்குக் கொண்டு வருதல் | மாவட்ட, பிரதேச மட்டத்திலான |

| | | |
|---|---|---|
| | | தொழில்நுட்ப நிறுவனங்கள் |
| | பிரதேச செயலாளர்கள் கேட்கும் போது மேலதிக நிதிகளை வழங்குதல் | தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் |
| | உலர் உணவுப் பொருட்களை விநியோகித்தல் | பிரதேச செயலாளர்கள், தொண்டர் அமைப்புக்கள் |
| | அனர்த்தத்தின் பின்னரான தேவைகளை மதிப்பீடு செய்தல் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய அனர்த்த சேவைகள் நிவாரண நிலையம் |

அட்டவணை 2.1: அனர்த்தத்தின் பல்வேறு கட்டங்களில் அமைப்புக்களின் பொறுப்பு

### 2.4.1 அவசர நிலைமைகளின் போதான முகாமைத்துவத்திற்கான கட்டளையிடுதல்

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டமூலத்தின்படி அமைச்சு தனது வளங்களைப் பயன்படுத்தி அனர்த்தங்கள் தொடர்பான பதில் நடவடிக்கைகளை வழிநடத்தும் என்பதுடன் கொள்கை ரீதியிலான வழிகாட்டல்களைச் செய்வதுடன் அதற்கான உயர் நிறுவனம் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையாகும். அதிமேதகு ஜனாதிபதி இந்தச் சபையின் தலைவராக அமைச்சுடன் இணைந்து பதில் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வார்.

அதிமேதகு சனாதிபதி, அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ்க் கொண்டுவந்துள்ளதுடன் அரசியலமைப்பின் 43வது பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இதன்படி அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் நாட்டில் அனர்த்த நிலைமைகளை முகாமைத்துவம் செய்வார் என்பதுடன் அதற்கான முழுப் பொறுப்பினையும் ஏற்பார். ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பான அறிவிப்புக் கிடைத்தவுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏனைய முகவர் நிலையங்களிலிருந்து தெளிவு படுத்தல் கிடைத்தவுடன் பதில் நடவடிக்கைகளுக்கான தயார்படுத்தல், நிவாரணங்கள், ஒருங்கிணைப்பு, மதிப்பீடுகள் என்பவற்றுக்காக அரசின் சகல நிறுவனங்கள், இராணுவம், தனியார் துறையினர், ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனங்கள், சர்வதேச அமைப்புக்கள், ஊடகங்கள் என்பவை கலந்து கொள்ளும் கூட்டம் அமைச்சரின் தலைமையில் நடைபெறும்.

சர்வதேச தொழில்நுட்ப உதவியும் அமைச்சினால் ஒருங்கிணைப்பு செய்யப்படும் என்பதுடன் அதிமேதகு ஜனாதிபதி சபையின் உறுப்பினர்கள், அமைச்சர்கள் என்பவர்களுக்கு அனர்த்த நிலைமைகள் தொடர்பாகவும் பிரச்சினைகளைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சர் விளக்கமளிப்பார். அனர்த்த நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை அமைச்சர் ஊடகச் சந்திப்புக்களையும் நடத்துவார்.அனர்த்த பதில் நடவடிக்கைகள், அனர்த்த நிவாரணப் பணிகள் என்பவற்றை ஒருங்கிணைத்தலுக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின்

கீழ் ஒரு கருமமாற்றும் பிரிவு மாத்திரம் இருக்கவேண்டும் என்பதுடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரின் அனுமதி இல்லாமல் மேலதிக பிரிவொன்றை ஆரம்பிக்க இயலாது.

அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் செயலாளரால் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாக, ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் பதில் நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய தேசிய அவசரகால கருமமாற்றும் திட்டமொன்றையும் நிறுவன ரீதியிலான அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்த ஆலோசனை வழங்குவார்.

அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகளுக்கான குழுவில் தலைமையை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் ஏற்பதுடன் குழு உறுப்பினர்களுடன் இணைந்து தேசிய மட்டத்திலான பதில் நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வார். மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் குறிப்பிட்ட மட்டங்களில் அவசர கருமமாற்றும் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்குவார்கள்.

# அத்தியாயம் 03

## 3.1 அனா்த்தங்கள் பற்றிய முன்னெச்செரிக்கைகள்

உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கைகள் எந்தவொரு அனர்த்தத்தின்போதும் உயிர்களைப் பாதுகாக்கும் தீர்க்கமான ஒரு செயற்பாடென தெளிவாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், முன்னெச்சரிக்கை சேவைகள் அவசர நிலமைகளின்போது பதிலிருக்கும் பொறிமுறையின் ஒரு முக்கியமான அம்சமாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

முன்னெச்செரிக்கை செய்திகள் கீழே காட்டப்பட்டுள்ள பல்வேறுபட்ட படிமுறைகளைக் கொண்டுள்ளன.

1. அவதானத்துடன் இருத்தல்- அனர்த்தத்துக்கு உட்படக்கூடிய மக்கள் / குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கும் ஆரம்பகட்ட செய்திகள் - அனர்த்தம் ஒன்று இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறு

2. முன்னெச்செரிக்கைகள் விடுத்தல் : தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக சமீபத்தில் நிகழக்கூடிய அனர்த்தங்கள் குறித்து அனா்த்தத்துக்கு இலக்காகக்கூடிய மக்களுக்கு / குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு விடுக்கப்படும் முன்னெச்சரிக்கை செய்திகள்

3. அகல்வதற்கான கட்டளைகள் : மிகவும் பாதுகாப்புமிக்க இடங்களுக்கு செல்வதற்காக அனர்த்தத்துக்கு இலக்காகக் கூடிய மக்களுக்கு /குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு விடுக்கப்படும் கட்டளை

4. முன்னெச்சரிக்கையினை வாபஸ்பெறுதல் : முன்னெச்செரிக்கை செய்தியினை இரத்துச்செய்தல்

5. அவதானத்துடன் இருத்தலை நிறுத்திக்கொள்ளுதல் : அனர்த்தம் நீங்கியதன் பின்னர், மீண்டும் வழமை நிலைக்கு திரும்புமாறு மக்களுக்கு விடுக்கப்டும் அறிவித்தல்

### 3.1.1. முன்னெச்சரிக்கை முறைமை

தேசிய மற்றும் உபதேசிய மட்டத்தில் அனர்த்தங்களுக்கு இலக்காகக்கூடிய மக்களுக்கு உரிய காலத்தில் முன்னெச்செரிக்கைகளை விடுக்கும் முகமாக அரசாங்கத்தினால் முன்னெச்சரிக்கை முறைமையொன்று தாபிக்கப்பட்டுள்ளது. உரிய தொழினுட்ப முகவர் நிறுவனங்களுக்கு ( அட்டவணை 2.1)அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ள பல்வேறு வகையிலான அனர்த்தங்கள் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட பொறுப்புக்கூற வேண்டிய முகவர் நிறுவனங்கள் ஏற்படக்கூடிய அனர்த்த நிலமைகளை பகுப்பாய்வு செய்வதற்கும் எதர்வுறுகூவதற்கும் 24 மணித்தியாலம் பூராகவும் நம்பிக்கைமிகு முன்னெச்செரிக்கை செய்திகளை விடுக்கும் வகையிலும் தேவையான சிறந்த விஞ்ஞானரீதியிலான பின்னணியைக் கொண்டிருத்தல்

அவசியமாகும். தொழில்நுட்ப முகவர் நிறுவனங்களுக்கு அனர்த்தங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருப்பதற்கான செய்திகள் தமது நாட்டினுள்ளேயே காணப்படும் மேற்பார்வை வசதிகள் / பொறிமுறை அல்லது வலய அல்லது சர்வதேச முன்னெச்சரிகை முகவர் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கலாம். அனர்த்தத்துக்கு இலக்காகி உள்ள மக்களே சிலசமயம் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் தொழினுட்ப முகவர் நிறுவனத்துக்கு தகல் வழங்கும் மூலாதாரமாக அமையக்கூடும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர நடவடிக்கை நிலையத்துக்கு தேசிய தொழினுட்ப முகவர் நிலையம் மற்றும் சிலசமயம் சர்வதேச, வலய மற்றும் தேசிய மட்டத்திலான அமைப்புக்களிடமிருந்தும் சமூக உறுப்பினர்களிடமிருந்தும் முன்னெச்செரிக்கை செய்திகள் கிடைக்கப்பெறக் கூடும். முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை தேசிய மட்டத்திலிருந்து கீழ் மட்டத்தை நோக்கி நகர்த்தும் செயற்பாடானது நான்கு படிமுறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன, தேசிய, மாவட்ட, பிரதேச மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டம் எனவாகும். முன்னெச்சரிக்கை செய்திகள் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு, தேசிய மட்டத்திலான அவசர நிலமைகளின்போது பதிலிருக்கும் அனைத்து முகவர் நிறுவனங்களுக்கும், மாகாண மற்றும் ஊடக மற்றும் அவசர நிலமைகளின்போது பதிலிருக்கும் குழுக்களுக்கு அறிவிக்கும் பொறுப்பானது அவசர நடவடிக்கை நிலையத்துக்கு காணப்படுகின்றது. பிரதேச செயெலாளர் மட்டத்திலிருந்து மென்மேலும் மக்களுக்கு அறிவிக்கும் செயற்பாடானது நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டங்களில் விஸ்தரிக்கப்பட்டுள்ள உபதேசிய மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள பொறிமுறையொன்றின் ஊடாக இடம்பெறுதல் வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்காக அவசர நடவடிக்கை குழுவானது நம்பிக்கையான தொடர்பாடல் முறைமை சகிதம் உபதேசிய மட்டத்திலான நிருவாகத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

தொடர்பாடல் வலையமைப்பொன்றின் ஊடாக தெழினுட்ப முகவர் நிறுவனங்கள், அவசர நடவடிக்கை நிலையம், பொலிஸ் மற்றும் ஊடகம் ஒன்றோடொன்று தொடர்புபடுவதுடன், அவசர நடவடிக்கை நிலையத்துக்கு துரித கதியில் எந்தவொரு தகவலையும் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை உள்ளது.

முன்னெச்சரிக்கையானது மாவட்ட அனர்த்த முனாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் ஊடாக குறிப்பிட்ட தரப்பினருக்கு, முகவர் நிறுவனங்களுக்கு மற்றும் உரிய அரசியல் அதிகாரத்துக்கு கிடைக்கப் பெறுகின்றது. பிரதேச மட்டத்திலான முன்னெச்செரிக்கைகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது. பிரதேச செயலகங்களினால் தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களுக்கு, பொலிசாருக்கு, மாவட்டத் தரப்பினர் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு அனர்த்தங்களுக்கு உட்படக் கூடிய மக்களுக்கு முன்னெச்செரிக்கைகளை விடுப்பதற்காக குறித்த செய்திகள் வழங்கப்படுகின்றன. அவசர நடவடிக்கை குழுவானது, அனர்த்தங்களுக்கு இலக்காகக்கூடிய மக்களுக்கு மற்றும் ஒருங்கிணைப்பு முகவர் நிறுறவனங்களுக்கு உரிய காலத்தில் சரியான தகவல்களை வழங்கும் முகமாக தேசிய ஊடகங்களுடன் அந்நியோன்னியமாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. .

**3.2 முன்னெச்சரிக்கைகளை விடுப்பதற்கு அதிகாரமுடைய தொழிநுட்ப முகவர் நிறுவனங்கள்**

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கும் பொது மக்களுக்கும் உத்தியோகபூர்வமாக முன்னெச்சரிக்கைகளை விடுப்பதற்காக பின்வரும் தொழிநுட்ப நிறுவனங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1 முன்னெச்சரிக்கைகளை விடுப்பதற்று பொறுப்பாயுள்ள தொழினுட்ப நிறுவனங்கள்**

| அனர்த்தம் | பொறுப்புக்கூறும் தொழிநுட்ப முகவர் நிறுவனம் |
|---|---|
| அ (மண்சரிவு) | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு) NBRO) |
| ஆ (புயல் காற்று) | வளிமண்டலவியல் திணைக்களம் |
| இ ( வெள்ளப்பெருக்கு | நீர்ப்பாசனத் திணைக்களம் ) DOI) / மகாவலி அதிகாரசபை / கமநல சேவைகள் திணைக்களம்/ மி.ச. /தே.நீ.வ.ச. -வான் கதவுகளை திறத்தல் |
| ஈ (வரட்சி) | நீர்பாசனத் திணைக்களம் - நீர்த்தேங்கங்களின் நீர் மட்டம், வளிமண்டலவியல் திணைக்களம் - மழைவீழ்ச்சி போதாமை,கமத்தொழில் திணைக்களம் - மண்ணீர் பற்றிய தரவுகள் நீர் வழங்கல் சபை – நிலக் கீழ் நீரின் அளவு |
| உ (கைத்தொழில்ரீதியான இடர்கள் ) | மத்திய சுற்றாடல் அதிகார சபை) CEA ( |
| ஊ (சுனாமி) | வளிமண்டலவியல் திணைக்களம் |
| எ (பூமியதிர்ச்சி) | புவிச்சரிதவியல் ஆராய்ச்சி மற்றும் சுரங்கப் பணியகம் |
| ஏ (வான் தாக்குதல் ) | விமானநிலைய மற்றும் விமான சேவைகள் அதிகார சபை |
| ஐ (வெளித் தாக்கங்கள்) | மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| ஒ (கடல் அபாயம் ) | கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை |
| ஓ (நகரமய தீ) | உள்ளூராட்சி நிறுவனம் (இராணுவ தீயணைப்பு படை)பொலிஸார் |
| ஔ (வைசூரி வியாதி) | சுகாதார அமைச்சு |
| க (வெடிப்பு) | பொலிஸ் திணைக்களம் |
| ச (சிவில் அல்லது உள்ளக மோதல் ) | பொலிஸ் திணைக்களம் |
| ட) இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக ஏற்படும் திடீர் | கைத்தொழில் அமைச்சு ம.சு.அ. |

| | |
|---|---|
| விபத்துக்கள் ( நிலம் மற்றும் கடல்) | |
| ய (கதிர்வீச்சு தொடர்பான திடீர் விபத்து) | அணுசக்தி அதிகார சபை |
| ர (உள்ளக மற்றும் கடலில் ஏற்படும் எண்ணெய்க் கசிவு உள்ளிட்ட எண்ணெய்க் கசிவுகள்) | கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை |
| ழ (காட்டுத் தீ) | காடு பேணல் திணைக்களம் |
| வ (கடலரிப்பு) | கடல் பாதுகாப்பு மற்றும் கடல் வள முகாமைமத்துவ திணைக்களம் |
| ம (டொனாடோ, இடி மின்னல் தாக்குதல் மற்றும் சூறாவளி) | வளிமண்டலவியல் திணைக்களம் |

### 3.3 முன்னெச்செரிக்கைகளை விடுப்பதற்கான முதன்மைக் காரணிகள்

அவசர நடவடிக்கைக் குழுவுக்கு முன்னெச்சரிக்கைகளை விடுப்பதற்கு முன்னர்தொழில்நுட்ப நிறுவனமானது பின்வரும் முதன்மைக் காரணிகளைக் கருத்தில் கொள்கின்றது.

(1) சுனாமி : கருத்தில் கொள்ளககூடிய அளவில் கடலினுள் பூமியதிர்ச்சி ஏற்படும் சந்தர்ப்பத்தில்

(2) வெள்ளப்பெருக்கு : ஆறுகள் அல்லது நீர்நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் மட்டத்துக்கு நீர் மட்டம் அண்மிக்கும் சந்தர்ப்பத்தில்

(3) மண்சரிவு : கிடைக்கும் மழைவீழ்ச்சிக்கு ஏற்ப மண் நெகிழ்ச்சி மட்டத்தை அடைகையில்

(4) புயல் காற்று : புயல் காற்றின் எதிர்பார்க்கை பயணப் பாதையானது குறிப்பிட்டதொரு நாட்டின் ஊடாக பயணிப்பதாக 72 மணித்தியாலத்துக்கு முன்னர் அல்லது 550 கிலோமீற்றருக்கு முன்னர் அடையாளம் காணப்பட்டிருப்பின்,

(5) வரட்சி : நீண்ட ஒரு காலப்பகுதிக்கு கருத்தில் கொள்ளக்கூடிய விதத்தில் மழைவீழ்ச்சியில் குறைவு எதிர்வுகூறப்பட்டிருப்பின், அல்லது /மற்றும் நீண்டகால வறட்சி அவதானிக்கப்பட்டிருப்பின், கருத்தில் கொள்ளக்கூடிய விதத்தில் குடிநீர் அல்லது வீட்டு பாவனைக்காக பெற்றுக்கொள்ளும் நீரில் பற்றாக்குறை இருப்பின், கருத்தில் கொள்ளக் கூடிய விதத்தில் உணவு பாதுகாப்பின்மை அல்லது கருத்தில் கொள்ளக்கூடிய வித்தில் கமத்தொழிலுக்கு தாக்கம் இருப்பின்,

(6) ‘தொற்று நோய் பரவல்: மக்கள் வாழ்க்கை மற்றும் சுற்றாடலுக்கு பலத்த தாக்கம் ஏற்படக் கூடிய வகையில் யாதேனுமொரு நோய் கடுமையாகப் பரவுமாயின்,

(7) ஏனைய இடர்கள் : பின்வரும் இடர்கள் பற்றிய எதிர்வுகூறல்கள் குறிப்பிட்ட சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவதனால், முன்னதாகவே முன்னெச்செரிக்கை மேற்கொள்ள முடியாது. எவ்வாறெனினும், அத்தகையதொரு சம்பவம் நிகழ்ந்தவுடன், தாபிக்கப்பட்டுள்ள செயல்முறை மற்றும் ஊடகத்தின் மூலம் மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(8) கைத்தொழில் ரீதியிலான இடர்கள்

(9) பூமியதிர்ச்சி

(10) வெளித்தாக்கங்கள்

(11) கடல் அபாயம்

(12) தீ

(13) வெடிப்புக்கள்

(14) விமானத் தாக்குதல்

(15) சிவில் அல்லது உள்ளக மோதல்

(16) இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக ஏற்படும் திடீர் விபத்துக்கள்

(17) ரொனாடோ / பலத்த மின்னலுடனான புயல் காற்று

### 3.4 முன்னெச்செரிக்கைகளை பரப்புவதில் ஊடகத்தின் கடமை

அனர்த்தத்துக்கு இலக்காகியுள்ள மக்களுக்கு முன்னெச்செரிக்கைகளை பரப்புவதற்கும் பாதுகாப்பான விதத்தில் அகலுவதற்கும், குறிப்பிட்ட முகவர் நிறுவனங்களினால் விடுக்கப்படும் தீர்மானக் காரணிகளை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவம் பற்றிய செய்திகளை மக்களுக்கு வழங்கும் முக்கியத்துவம் தொடர்பில் ஊடகம் நிறைவேற்றும் கடமைகளை தேசிய அவசர நடவடிக்கைகள் திட்டம் புரிந்து கொண்டுள்ளது. தொழிநுட்பரீதியில் ஒட்டுமொத்த நாட்டையும் உள்வாங்குவதில் ரூபவாகினி மற்றும் சில வானொலி அலைவரிசைகள் வெற்றி கண்டுள்ளன. மின்சாரம் அற்ற பெரும்பாலான கிராமியப் பிரதேசங்களில் வானொலி வெகுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. 24 மணித்தியாலமும் செயற்படும் ஊடகங்கள் மிகவும் குறைவாகக் காணப்படுவதுடன், பெரும்பாலான அலைலவரிசைகளின் சேவையினை இரவு நேரத்தில் பெற முடியாதுள்ளது. எவ்வாறாயினும், அனர்த்த நிலமைகள் ஏற்பட்டவுடன், ஊடகங்கள் மக்களுக்கு அனர்த்தம் பற்றிய தகவல்களை வழங்குவதற்கான விசேட சேவைகளை இரவு நேரத்தில் ஆரம்பிக்கின்றன.

### 3.5 முன்னெச்சரிக்கைகளை பரப்புவதில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் பங்கு

அனர்த்தங்களுக்கு இலக்காகக் கூடிய மக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்திகளை வபரப்பவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம் இராணுவம் மற்றும் பொலிஸாருடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்கின்றது. நாடு பூராகவும் பல பிரதேசங்களில் இராணுவம் மற்றுமு் பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராணும் மற்றும் பொலிஸாருக்கு அவர்களுக்கே உரித்தான தொடர்பாடல் முறைமை காணப்படுவதுடன், இதன் ஊடாக அபாயத்துக்கு உட்படக் கூடிய மக்களை சென்றடையும் இயலுமை காணப்படுவதுடன்,அவர்களுக்கு இந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைக்க முடியும்.

# அத்தியாயம் 04

## 4.1 தேசிய மட்டத்தில் அவசரகால பதிலளிப்புகள்

பதிலளிப்புத் தயார் நிலைகளின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது. தேசிய மட்ட பதிலளிப்பு அமைப்புகளின் வகிபாகம் மற்றும் அவற்றின் பொறுப்புகள் பற்றி NEOP இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை, தனிப்பட்டவர்களது பொறுப்புகள் மற்றும் பணிக்கப்பட்ட கடமைகள் தொடர்பில் செயற்படுவதற்கான தராதர செயற்பாட்டு நடைமுறைகள் ஆகியன பற்றி நிறுவன ரீதியான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தில் தரப்பட்டுள்ளது. அனர்த்தமொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் NEOP ஐ அமைச்சு செயற்படுத்தும். அதேவேளை, தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான பதிலளிப்பு முகவர்கள் அனர்த்தத்திற்கு பதிலளிக்கும் முகமாக அவர்களுடன் சம்பந்தப்பட்ட நிறுவன ரீதியான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தைச் செயற்படுத்தல் வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, DMC, NDRSC ஆகியன சில அடிப்படை உபகரணங்களை மாவட்ட மற்றும் பிரதேச அதிகார அமைப்புகளுக்கு வழங்கியுள்ளன. சிறியளவிலான அனர்த்தங்கள் தொடர்பில் பதிலளிக்கும் முகமாக பிரதேச மற்றும் மாவட்ட அதிகார அமைப்புகளிடம் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான உபகரணங்கள் மற்றும் பயிற்றப்பட்ட ஆளணியினர் காணப்படுகின்றன. இருப்பினும் உப தேசிய அமைப்புகளின் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்ட விதமாக அனர்த்தமொன்று விருத்தியாகி நிகழ்கின்ற பட்சத்தில் அதற்கு பதிலளிக்கும் முகமாக தேசிய மட்ட முகவர்களின் உதவி நாடப்படும்.

தேசிய மட்டத்திலான அவசரகால பதிலளிப்பு ஒருங்கிணைப்பு வரைவுச்சட்டகமானது அத்தியாயம் 2 இன் உரு 2.1 இல் அவசரகால பதிலளிப்புச் செயன்முறை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. பிரதான முகவர்களின் பொறுப்புகளானது அவசரகால பதிலளிப்புச் செயன்முறை அட்டவணையின் படிமுறைகளுக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 4.1.1 அவசரகால செயற்பாட்டு நிலையம் (EOC)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் (DMC) அமைக்கப்பட்டுள்ள அவசரகால செயற்பாட்டு நிலையமானது (EOC) 24 மணித்தியாலங்களும் செயற்படக்கூடியதாகவுள்ளது. இது அதிகரித்து வருகின்ற அனர்த்த நிலைமைகள் மற்றும் தொடர்ச்சியாக பதிலளிக்கின்ற மட்டங்கள் ஆகியவற்றினை மதிப்பீடு செய்கின்றது. உப தேசிய முகவர்களின் ஆற்றல்களுக்கு அப்பால் அனர்த்தத்தின் தன்மை அதிகரித்துச் செல்லுகின்ற பொழுது, தேடுதல், மீட்டல் மற்றும் இடர் நிலையில் வாழுகின்ற மக்களை அப்புறப்படுத்தல் போன்றன தொடர்பில் உதவிகளை வழங்கும் முகமாக அவசரகால பதிலளித்தல் குழுக்களுடன் ஒருங்கிணைப்புகளை ஏற்படுத்துகிறது. மேலும் மேலதிக உதவிகளை வழங்கும் முகமாக இலங்கை விமானப் படையுடன் ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளக் கூடிய வசதிகளும் EOC இடம் காணப்படுகின்றன. DMC ஆல் தயாரிக்கப்பட்ட வரைபடங்களை EOC பயன்படுத்தி தேடுதல் மற்றும் மீட்டல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தொழில்நுட்ப முகவர்கள் தொடர்பான உதவிகளையும் இது

பெற்றுக்கொள்கிறது. ஏதாவது அவசரகால நிலைமையொன்றின் பொழுது வினைத்திறன் மிக்க முறையில் பதிலளிப்பதற்காக வளங்களை ஒருங்கிணைத்தல், தீர்மானம் மேற்கொள்ளல் செயற்பாடுகளை சிறப்பாக மேற்கொள்ளல் ஆகியவற்றின் பொருட்டு தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வுகளை மேற்கொள்ளக்கூடியளவிற்குத் தேவையான பணியாட்டொகுதியினர் EOC இல் காணப்படுகின்றனர்.

EOC ஆனது 117 என்ற அழைப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கட்டுப்பாடுகளற்ற விதத்தில் அழைப்புகளை மேற்கொள்ள முடியும். அனர்த்தம் தொடர்பான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக 24 மணித்தியாலங்களும் எவ்விதக் கட்டணமும் இன்றி இலவசமாக இவ் இலக்கத்துடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியும். இங்கு பணியாற்றுகின்ற ஆளணியினர் மூலமாக பொருத்தமான ஆலோசனைகளை வழங்கக்கூடியதாக இந்நிலையம் காணப்படுகிறது. அத்தோடு, அவசியமான மேலதிக வளங்களுடன் இணைப்புகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இது திகழ்கிறது. அனர்த்த நிலைமைகளின் பொழுது, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து கிடைக்கின்ற அழைப்புகளுக்கு உடனடியாக பதிலளித்து அவர்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதுடன் உடனடியாக பதிலளிப்புகளை வழங்கும் முகமாக தேடுதல் மற்றும் மீட்டல் குழுக்கள் அத்தோடு, சுகாதார அதிகார அமைப்புகள் போன்றவற்றுடன் தொடர்புகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் இவ் அழைப்பு நிலையம் காணப்படுகிறது.

### 4.1.2 தேசிய மட்டங்களில் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

இலங்கை விமானப்படை, இலங்கை கரையோர பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியன OCDS உடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இராணுவத்தின் SAR குழுக்கள் மற்றும் இலங்கை கடற்படையின் துரித மீட்டுப்புப் பதிலளித்தல் மற்றும் நிவாரணக் குழுக்கள் ஆகியவற்றுக்கு பாதுகாப்புப் பணியாட்டொகுதி பிரதான அலுவலகம் மூலமாக மீட்புச் செயற்பாடுகளுக்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

**இராணுவ துரித செயற்படுத்துகைப் பிரிவுகள்**

முன்னெச்சரிக்கை தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றதும் மற்றும் உதவிக்கான கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றதும் உடனடியாக தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக மாவட்ட மட்டங்களில் தனியான பிரிவுகளை இராணுவம் தாபித்துள்ளது.

### 4.1.3 அவசரகால பதிலளிப்புக் குழுக்களின் ஒருங்கிணைப்புகள்

தமது ஆளுகையின் கீழ் வருகின்ற உப பிரதேச பிரிவுகளுடன் பதிலளிப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்புகளை அவசரகால பதிலளித்தல் குழுக்களின் உறுப்பினர்கள் பொறுப்பேற்பர். களத்தில் ஏதாவது வெற்றிடங்கள் அல்லது குறைபாடுகள் இனங்காணப்படும் பட்சத்தில் அவை தொடர்பான கலந்தாலோசனைகளை தமது தலைமை நிறுவனத்துடன் மேற்கொண்டு செயற்படுவர்.

## 4.2 முகவராண்மைகளின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள்

ஏதாவது முகவரின் வழமையான பொறுப்புகள் அல்லது ஆற்றல்கள் ஆகியவற்றுக்கு அப்பால் அவசரகால நிலைமை இருக்கும் பொழுது அத்தகைய அமைப்புகளுக்கு அல்லது தனி நபர்களுக்கு வழங்கக்கூடிய பொறுப்புகளை இலகுபடுத்துவதாக NEOP இன் செயற்படுத்துகை வழிகாட்டி காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் மற்றும் நிறுவன ரீதியான தொடர்பு முறைகள் ஆகியன இதன் மூலம் தாபிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, ஆவசரகால நிலைமை மற்றும் அனர்த்தங்களின் பொழுது சகலவிதமான செயற்பாடுகளையும் இது ஒருங்கிணைக்கிறது. நிறவன ரீதியான அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களில் இனங்காணப்பட்டதன் படி ஆளணியினரையும் வளங்களையும் பயன்படுத்துவதை இது இலகுபடுத்துகிறது. அத்தோடு, பதிலளித்தல் செயற்பாட்டின் பொழுது அனர்த்தத்தின் தாக்கத்தைக் குறைக்கக்கூடிய செயல்கள் பற்றியும் இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் மக்களைப் பாதுகாத்தல், அவர்களது உடைமைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றைக் கவனத்திற்கொண்டு அனர்த்த நிலைமைகளின் பொழுது பிராந்தியத்திற்குள்ளும் பிராந்தியங்களுக்கு இடையிலும் கூட்டுறவைக் கட்டியெழுப்புகிறது.

**அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை**

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவச் சட்டமானது "அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை" ஐத் தாபிப்பதற்கான சட்ட ரீதியான வரைவுச்சட்டகத்தினை வழங்குகின்றது. இதற்கு மேதகு ஜனாதிபதி அவர்கள் தலைமை தாங்குகின்றார். அவசரகால பதிலளிப்புகள் மற்றும் நிவாரண விநியோகம் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் முகமாக இச்சபையானது அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய அனர்த்த நிவாரணங்கள் சேவைகள் நிலையம் ஆகியவற்றுக்கு பணிப்புரைகளை வழங்கும். இச்சபையின் உறுப்பினர்களான அமைச்சர்களுடன் பதிலளிப்பு நடவடிக்கைகளை சபை ஒருங்கிணைக்கும். நாட்டின் ஆற்றல்களுக்கு அப்பால் அனர்த்த நிலைமை அதிகரித்துக் காணப்படும் பொழுது அதனைக் கருத்திற்கொண்டு இலங்கை ஜனாதிபதிக்கு சபை ஆலோசனை வழங்கும். அதாவது பதிலளிப்பு அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதை மையமாகக் கொண்டு அனர்த்த நிலைமையைப் பிரகடனப்படுத்துவதற்காக இந்தக் கோரிக்கை ஜனாதிபதிக்கு விடுக்கப்படும்.

**அனர்த்த முகாமைத்துவு அமைச்சு**

2015 செப்டம்பர் 21 ஆம் திகதிய 19933/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேதகு ஜனாதிபதி அவர்களினால் அமைச்சருக்கு வழங்கப்பட்ட விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றின் பிரகாரம் இயற்கையாக அல்லது மனிதர்களினால் அனர்த்தங்கள் ஏற்படுகின்ற பொழுது அதனோடு தொடர்புடைய பதிலளிப்புகள் மற்றும் மீட்டல் மற்றும் நிவாரணச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவசரகால நிலைமையொன்றினை வெறுமனே அமைச்சினால் மாத்திரம் கையாளமுடியாது. அதற்கு பல்வேறுவிதமான மனித வளங்கள், நிதி வளங்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் போன்றன அவசியப்படுகின்றன. இதனை பல்வேறு விதமான அரசாங்க, தனியார் நிறுவனங்கள்

மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. முகவராண்மைகள், சர்வதேச மனிதாபிமான முகவராண்மைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்புடனேயே பெற்றுக்கொள்ள முடியும். மேலும் அதிகரித்து வரும் அனர்த்த நிலைமை, வழங்கப்பட்ட பதிலளிப்பு நடவடிக்கைகள், இனங்காணப்பட்ட குறைபாடுகள் ஆகியன தொடர்பில் ஜனாதிபதி, அமைச்சர்கள், ஊடகம் ஆகியவற்றுக்கு முறையான இற்றைப்படுத்தல்களை வழங்குகின்ற பொறுப்பும் அமைச்சிடம் காணப்படுகிறது.

அனர்த்த நிலைமையைப் பிரகனடப்படுத்தல், சர்வதேச சமூகங்களிடமிருந்து உடனடியாக அவசியப்படுகின்ற உதவிகள் தொடர்பிலான கோரிக்கைகளை விடுத்தல், சர்வதேச ரீதியான தொழில்நுட்ப உதவிகள் மற்றும் நிவாரண ரீதியான உதவிகளை ஒருங்கிணைத்தல் அத்தோடு, அவைகள் தொடர்பிலான கோரிக்கைகளை விடுத்தல் போன்ற விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்கான கடப்பாடு அமைச்சருக்கு உள்ளது. மேலும் மேலதிக உதவிகள் அவசியப்படும் பட்சத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலமாக வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு அத்தகைய கோரிக்கைகளை அமைச்சு விடுக்க முடியும்.

இடர் நிலையில் காணப்படுகின்ற மக்களுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முகமாக சகல அமைச்சுகள் மற்றும் பங்கீடுபாட்டாளர் முகவர்கள் ஆகியோருடன் பதிலளிப்புச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பும் அமைச்சின் ஆளுகையின் கீழ் வருகிறது.

**அனர்த்த முகாமைத்துவ நிலையம்**

இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபையின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாபிக்கப்பட்டது. இது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்குகிறது. சபையினால் வழங்கக்கூடிய செயற்பாடுகள் பற்றி இந்த சட்டம் தொடர்பான பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் சபையினால் விருத்தி செய்யக்கூடிய தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டம் மற்றும் நாட்டில் ஏற்படக்கூடிய அனர்த்தம் தொடர்பில் செயற்படும் முகமாக அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், அமைச்சுகள் ஆகிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தினைத் தயார் செய்து செயற்படுத்துவது தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்திலான பதிலளிப்புச் செயற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நியமிக்கப்பட்ட அவசரகால பதிலளிப்புக் குழுவுடன் சேர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுகளானவை அனர்த்த பதிலளிப்புச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் முகமாக மாவட்டச் செயலாளருக்கு உதவிகளை வழங்குகிறது.

மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில், இராணுவ மற்றும் பொலிஸ் தொடர்பாடல் நிலையங்கள், ஊடகங்கள் போன்ற நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எச்சரிக்கைகளை வழங்குவதற்கு ஆணை வழங்கப்பட்ட சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப முகவராண்மைகளுடன் ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு அவசியமான நடவடிக்கைகளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒருங்கிணைக்கிறது. தேடுதல் மற்றும் மீட்புச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய

தொழில்நுட்பக் குழுக்கள் உள்ளடங்கலாக சர்வதேச தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்வது உள்ளடங்கலாக ஒருங்கிணைப்புகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் இருக்கிறது.

அவசரகால செயற்பாட்டு நிலையம் 24 மணித்தியாலங்களும் செயற்படக்கூடியதாகவிருக்கிறது. இது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர அழைப்பு நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எச்சரிக்கைகளை வழங்குதல், ஏனைய முக்கிய தகவல்களை மாகாணங்களுக்கும் மாவட்டங்களுக்கும் பிரதேச செயலாளர் பிரிவுக்கும் ஏனைய பங்கீடுபாட்டாளர்களுக்கும் மற்றும் ஊடகங்கள் போன்றவற்றுக்கும் வழங்கும் முகமாக அவசியமான தொடர்பாடல் முறைகளுடன் EOC ஆனது உப தேசிய மட்ட நிர்வாகப் பிரிவுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.

**தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் (NDRSC)**

பாதுகாப்பான நிலையங்களைத் தாபித்தல், மக்களை பாதுகாப்பான நிலையங்களுக்கு அப்புறப்படுத்தும் செயற்பாடுகுளுக்கு ஒருங்கிணைத்தல், பாதுகாப்பான நிலையங்களை முகாமைத்துவம் செய்தல், துரித தேவைகள் மதிப்பீட்டினை மேற்கொள்ளல், அவசரகால நிவாரண விநியோகங்களைக் கொள்வனவு செய்யும் முகமாக மாவட்ட மற்றும் பிரதேச அதிகார அமைப்புகளுக்கு நிதியினை வழங்குதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் (NDRSC) காணப்படுகிறது. சர்வதேச நிவாரண உதவிகளைச் சேகரித்து அவற்றை விநியோகித்தல், தற்காலிக கூடாரங்கள் மற்றும் முகாம்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பது தொடர்பான தொழில்நுட்பக் குழுக்கள் ஆகிய செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும்படியும் NDRSC இற்கு வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட வீடுகள், சிறிய வியாபார நிலையங்கள் ஆகியன தொடர்பிலான மதிப்பீடுகளை மேற்கொண்டு உதவுவதற்குப் பொறுப்பாகவும் NDRSC காணப்படுகிறது. அதேவேளை. நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பான கோரிக்கைகள் பற்றிய செயன்முறையை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாகவும் NDRSC காணப்படுகிறது.

## 4.3 பங்குதாரர் நிறுவனங்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள்

அனர்த்த முகாமைத்துவமானது சர்வதேச, தேசிய, உள்ளூர் அமைப்புகளுடன் கூடிய சிக்கல் மிகுந்ததொரு செயன்முறையாகும். அவசரகார நிலைமைகளின் பொழுது இவை ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான வகிபாகங்கள் காணப்படுகின்றன. அனர்த்த நிலைமைகளின் பொழுது அவற்றுக்குப் பதிலளிப்பதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட வகிபாகங்கள், பொறுப்புக்கள் மற்றும் மத்திய கட்டளை முறை ஆகியன அவசியப்படுகின்றன.

பங்குதாரர் முகவர்களின் அவர்களது பிரதான செயற்பாடுகளை மையமாகக் கொண்டு இலகுவாக இனங்காணும் முகமாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அனர்த்த அதிகரிப்பினைக் கண்காணிக்கும் முகவர்கள் மற்றும் எச்சரிக்கைகளை விடுப்பவர்கள் ஆகியோர் தொழல்நுட்ப முகவர்கள் (TA) என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, அனர்த்தம் நடைபெற்ற இடத்தில் உயிர்களை

பாதுகாப்பதற்காகச் செல்கின்ற முகவர்கள் முதலாவது பதிலளிப்பவர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அடிப்படைச் சேவைகளை வழங்குகின்ற முகவர்கள் அத்தியாவசிய சேவைகள் (ES) என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் இலகுபடுத்தும் முகவர்கள் (FA) என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

### 4.3.1 முதலாவது பதிலளிப்பு முகவர்கள்

ஏதாவது விபத்துக்கள், அனர்த்தங்கள் அல்லது ஏதாவது பயங்கரவாத தாக்குதல்கள் போன்ற நிகழும் பட்சத்தில் அனர்த்த இடத்திற்கு முதலில் விஜயம் செய்து அவசியமான அவசரகால உதவிகளை முதலில் வழங்குகின்ற மக்கள் முதலாவது பதிலளிப்பவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

| இலக்கம் | முதலாவது பதிலளிக்கும் முகவர்கள் | இலக்கம் | முதலாவது பதிலளிக்கும் முகவர்கள் |
|---|---|---|---|
| 01 | மாவட்ட நிர்வாகங்கள் | 09 | உள்ளூராட்சி மன்றங்கள் |
| 02 | பிரதேச செயலாளர் | 10 | இலங்கைப் பொலிஸ் |
| 03 | தீ அணைப்புப் படை | 11 | இலங்கை இராணுவம் |
| 04 | கடல் சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை | 12 | இலங்கை கடற்படை |
| 05 | கடற்றொழில் அமைச்சு | 13 | இலங்கை விமானப்படை |
| 06 | ஊடகம் மற்றும் தகவல் அமைச்சு | 14 | இலங்கை விமானப்படை |
| 07 | தொண்டர் அமைப்புகள், செஞ்சிலுவைச் சங்கம் | 15 | இலங்கை கரையோரப் பாதுகாப்புப் படை |
| 08 | கடல் சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை | 16 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் |

அட்டவணை 4.1 – முதலாவது பதிலளிக்கும் முகவர்கள்

**மாவட்ட/ பிரதேச செயலகங்கள்**

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்புரையின் கீழ் மாவட்ட, பிரதேச செயலகங்கள் அவற்றுடன் சம்பந்தப்பட்ட நிறுவன ரீதியான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தைச் செயற்படுத்தும். அத்தோடு அனர்த்த நிலைமைகளுக்கு பதிலளிப்பதற்கான வளங்களை அணிதிரட்டுதல் மற்றும் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் தேசிய மட்டத்திலான முகவர்களுடன் இணைந்து பதிலளிப்புச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும்

**சுகாதார அமைச்சு**

அனர்த்தமொன்று நிகழும் பட்சத்தில் சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் ஆகியன பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர மருத்துவச் சேவைகளை வழங்கும் முகமாகவும் ஏதாவது அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் சேவைகளைப் பேணும் முகமாகவும் மருத்துவ பணியாட்களை அணிதிரட்டி அத்தகைய சேவைகளை வழங்கும்.

**உள்ளூராட்சி அமைச்சு/ தீ அணைப்புப் படை**

மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் தமது அதிகாரங்களைப் பிரயோகித்து சேவைகளை வழங்குவதற்கான ஆற்றல்களை உள்ளூராட்சி அமைச்சு மேம்படுத்துகிறது. மனவடுவுடன் சம்பந்தப்பட்ட அவசரகால மருத்துவ பதிலளிப்பு நடவடிக்கைகளை துணை மருத்துவக் குழுக்கள் மேற்கொள்கின்றன. கட்டமைப்பு சார்ந்த தீயணைப்புகள், உயர்ந்த கட்டிடங்கள் மற்றும் தொழிற்சாலைகள் போன்றவற்றில் தீயணைத்தல், தீயணைப்புச் செயற்பாடுகளுக்காக வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை அணிதிரட்டல், சுரங்கம் சார்ந்த தீயணைப்புச் செயற்பாடுகள் குறிப்பிட்ட கட்டிடத்தினுள் மாத்திரம் தீயைக் கட்டுப்படுத்தல், அதாவது தீ ஏற்படுகின்ற பொழுது அதனைப் பரவவிடாமல் தடுத்தல் போன்ற பல்வேறு விதமான சேவைகளை தீயணைப்பு அதிகாரிகள் வழங்குகின்றனர்.

**இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஈடுபாடுகள்**

ஏதாவது அவரகால நிலைமையொன்றின் பொழுது முழு நாட்டிலும் உடனடியாக பதிலளிக்கக்கூடிய விதத்தில் முக்கிய இடங்களில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக பயிற்றப்பட்ட முப்படைகளைச் சேர்ந்தவர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். அவசரகால நிலைமையொன்று தோன்றுகின்ற பொழுது அருகிலிருக்கின்ற இராணுவத்தினரை உதவிக்காகக் கோர முடியும். நாட்டில் ஏதாவது பாகத்தில் அவசர நிலைமையொன்று ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மக்கள் தொடர்புகொள்ளக்கூடிய விதத்தில் இராணுவம் மற்றும் பொலிஸாருடனான ஒருங்கிணைப்புக்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாபித்துள்ளது.

**பாதுகாப்பு அமைச்சு**

ஆயுதப் படையினர்களின் சேவைகளை பாதுகாப்பு அமைச்சு இலகுபடுத்துகின்றது. அத்தோடு மீட்பு நடவடிக்கைகள், உள்ளகப் பாதுகாப்புச் சேவைகள் ஆகியவற்றைப் பேணுவதுடன், கடலில் கரையோரப் பாதுகாப்புச் சேவை தொடர்பான நிர்வாகத்தையும் மேற்கொள்கிறது.

**பாதுகாப்புப் பிரதானியின் அலுவலகம்**

இலங்கை விமானப்படை, இலங்கை கரையோரப் பாதுகாப்புப்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியன பாதுகாப்புப் பிரதானி அலுவலகத்தினால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. மீட்புச் செயற்பாடுகளை இலங்கை இராணுவத்தின் SAR குழுக்கள் மற்றும் இலங்கை கடப்படையின் துரித பதிலளிப்பு, மீட்டல் மற்றும் நிவாரணக் குழுக்கள் மேற்கொள்வதுடன் அவை தொடர்பான உதவிகளையும் வழங்குகின்றன.

**விசேட துரித பதிலளிப்புக் குழு**

எண்ணெய் கசிதல்கள், அபாயகரமான பொருட்களுடன் சம்பந்தப்பட்ட விபத்துகள், இரசாயண மற்றும் கைத்தொழில் சார் விபத்துகள், கதிர்வீச்சுடன் தொடர்புடைய விபத்துகள் போன்ற நிகழ்கின்ற பட்சத்தில் அவை தொடர்பில் வினைத்திறன் மிக்க துரிதமாக பதிலளிக்கும் முகமாக தேசிய மட்டத்தில் பயிற்றப்பட்ட துரித பதிலளிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பம் சார் அனர்த்தமொன்றின் பின்னர் அபாயகரமான ஆயுதங்கள், நச்சுப்பொருட்கள்,

கேடு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் ஆகியவற்றை அழிப்பதற்கான ஆணை பெற்ற தொழில்நுட்ப முகவர்கள் CEA, பொலிஸ், இராணுவம் மற்றும் பொருத்தமான ஏனைய முகவர்கள் ஆகியோருடன் கூட்டிணைந்து செயற்படுவர்.

நாட்டின் எப்பாகத்திலும் ஏதாவது அவசரகால நிலைமையொன்றின் பொழுது பதிலளிக்கும் முகமாக முப்படைகளைச் சேர்ந்த பயிற்றப்பட்ட தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். அவசரகால நிலைமையொன்றின் பொழுது இராணுவத்தின் SAR குழுக்களே அருகிலுள்ளன. உதவிக்காக உடனடியாக இவற்றுடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியும்.

**இலங்கைப் பொலிஸ்**

ஏதாவது அனர்த்த நிலைமை ஏற்படுகின்ற பொழுது அது தொடர்பான தகவல்கள் நாடெங்கிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முதலில் கிடைக்கும். சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களானவை முதலாவது பதிலளிப்பாளர்கள் அவ்விடத்திற்கு வரும் வரை நிலைமைகளை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். தேவையை அடிப்படையாகக் கொண்டு மேலதிக உதவிகளை EOC ஐத் தொடர்புகொண்டு பொலிஸ் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஊடக மற்றும் தகவல் அமைச்சு**

மக்கள்நேய, அபிவிருத்தி மைய, சுயாதீன, பொறுப்புவாய்ந்த ஊடகக் கலாசாரத்தை இலங்கையில் தாபிக்கும் முகமாக கொள்கைகளையும் உபாயங்களையும் உருவாக்கி இலகுபடுத்தி நடைமுறைப்படுத்தி மேற்பார்வைகளை மேற்கொள்ளல். அனர்த்த நிலைமைகள் சுமுகமாகும் வரை அனர்த்த முகாமைத்துவ அமைச்சானது ஊடக சந்திப்புக்களை மேற்கொள்வதற்கான உதவிகளை ஊடக அமைச்சு வழங்கும்.

**கடற்றொழில் அமைச்சு**

517,000 சதுர கி.மீ. ஐக் கொண்ட பொருளாதார வலயம் (EEZ) மற்றும் 489,000 ஹெக்டயர்களைக் கொண்ட உவர் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடித் துறைகள் ஆகியவற்றுக்கு முழுமையாக அங்குள்ள மீன்பிடித்துறை நிர்வாகத்திற்குப் பொறுப்பாக அமைச்சு காணப்படுகிறது. ஆழ்கடலில் மீன்பிடிக்கின்ற மீனவர்களுடனான தொடர்புகளை கடற்றொழிலமைச்சு பேணி வருகிறது. ஏதாவது அனர்த்தமொன்று நிகழும் பட்சத்தில் கடற்றொழில் திணைக்களத்துடன் தொடர்புகைள EOC மேற்கொள்கின்றது. மீன்பிடித் துறைமுக முகாமையாளர்கள் அத்தகைய எச்சரிக்கைகளை மீன்பிடி சமூகத்திற்குத் தெரிவிக்கின்றனர்.

### 4.3.2 அத்தியாவசியச் சேவைகள் (ES)

அனர்த்த நிகழ்வொன்றின் பொழுது நீர், தொடர்பாடல், மின்சாரம், வீதி வலையமைப்பு ஆகியன மக்களுக்கு உணவுப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் வழங்குவதற்கு மிகவும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய சேவை வழங்கல்களில் நீண்டகாலத் தடையேற்படுகின்ற பொழுது அது பாதிக்கப்பட்ட மக்களை

பகுதியாகவோ அல்லது முழுமையாகவே பாதிக்கக்கூடியதாக இருக்கின்றது. அத்தியாவசியச் சேவைகள் பின்வருமாறு:

| இலக்கம் | அத்தியாவசிய சேவைகள் (ES) | இலக்கம் | அத்தியாவசிய சேவைகள் (ES) |
|---|---|---|---|
| 01 | இலங்கை மின்சார சபை | 07 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை |
| 02 | இலங்கை மின்சாரக் கம்பனி | 08 | |
| 03 | போக்குவரத்து அமைச்சு | 09 | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேல் மாகாணம் |
| 04 | இலங்கை புகையிரதம் | 10 | இலங்கை ரெலிகொம் |
| 05 | போக்குவரத்துச் சபை | 11 | சுகாதார சேவைகள் |
| 06 | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 12 | கழிவு சேகரித்தல் மற்றும் அகற்றுவதற்கான உள்ளூராட்சி மன்றங்கள் |

அட்டவணை 4.2 – அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அமைப்புகள்

**இலங்கை மின்சார சபை**

நாடெங்கிலுமுள்ள சகலவிதமான வாடிக்கையாளர்களுக்கும் மின்சாரத்தை உற்பத்தி செய்து பரிமாற்றத்குட்படுத்தி விநியோகிப்பதற்குப் பொறுப்பான தேசிய நிறுவனமாக இலங்கை மின்சார சபை காணப்படுகிறது. அனர்த்த நிலைமையொன்று தொடர்பில் அறிவிக்கப்படுகின்ற பொழுது பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. மீட்புக் குழுக்களுக்கும் மற்றும் தற்காலிக பாதுகாப்பு வீடுகளுக்கும் மின்சாரத்தை அதாவது, அவசர இணைப்புகளை மின்சார சபை வழங்குகிறது.

**இலங்கை மின்சாரக் கம்பனி (LECO)**

நீர்கொழும்பு முதல் அளுத்தகம வரையிலும் பலப்பிட்டிய முதல் காலி வரையிலுமான கரையோரப் பகுதிகளுக்கு வாடிக்கையாளர்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு பொறுப்பாக இது காணப்படுகிறது. கடும் தாக்குதல்கள் ஏற்படுகின்ற பொழுது மின்சார சேவையானது தன்னியக்க முறையில் உடனடியாக நிறுத்தப்படுகிறது. மேலதிக அச்சுறுத்தல்கள் இல்லாத பொழுது மீண்டும் உடனடியாக மின்சாரம் வழங்கப்படுகிறது.

**போக்குவரத்து அமைச்சு (இலங்கைப் புகையிரதம் மற்றும் இலக்கை போக்குவரத்துச் சபை)**

போக்குவரத்துடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் இலங்கை புகையிரதத் திணைக்களம், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, விமானநிலையம், விமானச் சேவைகள் நிறுவனம் ஆகியவற்றின் கீழ் வருகின்ற கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கி அவற்றை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்வதற்கான பஸ்களை வழங்கும் முகமாக மாவட்ட மற்றும் பிரதேச செயலக அமைப்புகளுக்கு உதவுதல், புகையிரதச் சேவைகளைப் பாதிக்கக்கூடிய முன்னெச்சரிக்கைகள் வழங்கப்படுகின்ற போது புகையிரதத் திணைக்களமானது தனது சேவைகளை இடைநிறுத்துகிறது.

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

வீடு, கைத்தொழில் மற்றும் விவசாயத் தொழிற்துறை தொடர்பில் நாட்டில் அதிகரித்து வரும் நீர் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நீர் வழங்கலை அதிகரிப்பதற்கான திட்டங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் காணப்படுகிறது. அனர்த்தத்தின் காரணமாக நீர் விநியோகம் தடைப்படும் பட்சத்தில் அவ்விடங்களுக்கு நீரை வழங்குவதற்கான திட்டங்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் காணப்படுகிறது. மற்றும் தனது சேவைப் பிரதேசத்தில் வீடுகளுக்கு தற்காலிகமாக நீரை வழங்குவதற்கான ஆற்றல்களும் இவர்களிடம் காணப்படுகின்றன.

**நீர் வளங்கள் சபை**

காணப்படுகின்ற நில நீரின் அளவு குறிப்பாக உலர் வலயத்தில் காணப்படுகின்ற நில நீரின் அளவை மதிப்பீடு செய்து அதன் தன்மையை நீர் வளங்கள் சபை கண்காணித்து வருகின்றது. நீர் வழங்கல் சபையானது நில நீர் வளங்கள் காணப்படுகின்ற அதாவது, உலர் வலயத்தில் நில நீர் வளங்கள் காணப்படுகின்ற இடங்களை இனங்கண்டு வரட்சியான காலப்பகுதியில் அந்த நீரை விநியோகிப்பதற்கான முறைகள் இதனிடம் காணப்படுகிறது.

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பு மற்றும் தரம் ஏ, தரம் பீ வகைகளை உள்ளடக்கிய வீதிகளை வடிவமைத்து அவற்றைப் பேணுதல், புதிய நெடுஞ்சாலைகள், பாலங்கள், கடுகதி வீதிகள் ஆகியவற்றை உருவாக்கி அவற்றை தற்போதைய வலையமைப்புடன் இணைத்துப் பேணுவதற்கான பொறுப்புகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் காணப்படுகிறது. வீதிகளில் ஏதாவது தடைகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை உடனடியாக அகற்றுவதற்கான விசேட பேணுதல் குழுக்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளன.

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்**

மக்களை அகற்றுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற பெரும்பாலான வீதிகள் மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்ற வீதிகள் ஆகியன பெரும்பாலும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களினாலேயே பேணப்பட்டு வருகின்றன. அனர்த்தமொன்று நிகழ்ந்ததன் பின்னர் எவ்வித தங்குதடைகளுமின்றி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியச் சேவைகளை வழங்குவதை உறுதிசெய்யக்கூடியதாக இவ்வீதிகள் காணப்படல் அவசியமாகும்.

**தொலைத்தொடர்பாடல் சேவைகள்**

ஸ்ரீலங்கா ரெலிகொம் பீ.எல்.சீ (SLTL) ஆனது தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் தொடர்பில் தீர்வுகளை வழங்குகின்ற முன்னணி நிலையமாகும். இதுவே நாட்டின் புரோட்பேண்ட் மற்றும் ஏனைய முக்கியமான உட்கட்டமைப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனமாகவும் காணப்படுகின்றது. அனர்த்தமொன்றின் பொழுது இடர்பாடுகளை எதிர்கொண்டு காணப்படுகின்ற மக்களைத் தேடிக் கண்டுபிடித்தல் மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்கின்ற பொழுது காத்திரமான தொலைத்தொடர்பாடல் வசதிகள் காணப்படுவது முக்கியமானதாகும். பிரதான

அனர்த்தமொன்று நிகழ்கின்ற பொழுது மின் துண்டிப்புகள் ஏற்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் சிறப்பான தொலைத்தொடர்பாடல் முறைகளை மீள்நிறுவுவது அவசியமாகும்.

### 4.3.3 இலகுபடுத்தும் நிறுவனங்கள் (FA)

| இலக்கம் | இலகுபடுத்தும் நிறுவனங்கள் (FA) |
|---|---|
| 01 | இலங்கை சுற்றுலாச்சபை |
| 02 | விவசாய அமைச்சு |
| 03 | கல்வி அமைச்சு |
| 04 | நிதி அமைச்சு |
| 05 | வெளிநாட்டலுவல்கள் அமைச்சு |
| 06 | இலங்கைச் சுங்கம் |
| 07 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் |
| 08 | இலங்கை துறைமுக அதிகாரசபை |
| 09 | நீர் வளங்கள் சபை |
| 10 | விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் |

அட்டவணை 4.3: பதிலளிப்புச் செயற்பாடுகளுக்கு உதவுகின்ற அமைப்புகள்

**கல்வி அமைச்சு**

பாடசாலைக் கட்டிடங்கள் தற்காலிக தங்குமிடங்களாக அல்லது பாதுகாப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாணவர்களது கல்வி பாதிக்கப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் கல்வி நடவடிக்கைகளை வேறு இடங்களில் மேற்கொள்வது முக்கியமாகும். பாடசாலைக்குச் செல்லுகின்ற வழிமுறைகளில் அல்லது அவ்விடங்களில் ஏதாவது பாதிக்கக் கூடிய விடயங்கள் ஏற்படாத பட்சத்தில் மாணவர்களுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்தக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மிகக் கவனமாக மேற்கொள்ளப்பட்டு பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது உட்சாகப்படுத்தப்படல் வேண்டும்

**வெளிநாட்டலுவல்கள் அமைச்சு**

மீட்டல் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஆகியன தொடர்பில் சர்வதேச உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை இவ் அமைச்சு வழங்கி வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலமாக உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்புக்களை இது மேற்கொள்கின்றது.

**இலங்கைச் சுங்கம்**

வருமானம் சேகரித்தல், சட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்குப் பிரதான பொறுப்பாக இலங்கைச் சுங்கம் இருக்கின்றது. சர்வதேச சமூகங்களிடமிருந்து கிடைக்கின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை எவ்வித தாமதமுமின்றி அனர்த்த முகாமைத்துவ அமைச்சு பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை இதனால் நல்கமுடியும்.

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

கப்பல் சரக்கு தொடர்பான பொருட்களை விநியோகித்தல், பேணுதல், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள், வழிகாட்டுதல் சேவைகள், கப்பலில் பொருட்களை ஏற்றுதல் மற்றும் இறக்குதல், பொருட்களை அகற்றுதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை காணப்படுகிறது.

**நிதி அமைச்சு**

நிவாரணச் செயற்பாடுகளுக்கு அவசியமான மேலதிக நிதியை இது வழங்குகிறது. உலர் உணவுகள் மற்றும் தேடுதல் மற்றும் மீட்புச் செயற்பாடுகளுக்கு அவசியமான பொருட்கள் போன்ற அத்தியவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதை துரிதப்படுத்தும் முகமாக அவசரகாலக் கொள்வனவுச் செயன்முறைகளை விருத்திசெய்வதற்கான வழிகாட்டிகளையும் இது வழங்குகிறது.

**விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள்**

சர்வதேச மனிதாபிமான முகவராண்மைகளிடமிருந்து கிடைக்கப் பெற்ற பொருட்களைத் துரிதமாக விடுவிக்கும் முகமாக அவரசகால நிலைமைகளின் பொழுது விமான நிலையத்தைத் தயார்நிலையில் வைத்திருக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**

நாட்டின் பாதகாப்பு மற்றும் சமூக ஒழுங்கு மற்றும் பொருளாதார ரீதியான அபிவிருத்திகள் ஆகியவற்றை மேம்படுத்துகின்ற அதேவேளை, நாட்டிற்குள் வருகின்ற மற்றும் நாட்டிலிருந்து வெளியேறுகின்ற நபர்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் பிரஜாவுரிமை சார்ந்த சேவைகளை வழங்குதல் போன்றவற்றை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் ஒழுங்குபடுத்தி வருகின்றது. மீட்பு மற்றும் தேடுதல் குழுக்கள் ஆகியன இலங்கைக்கு வருகின்ற பொழுது அவர்களையும் அவர்களது உபகரணங்களையும் துரிதமாக நாட்டினுள் பிரவேசிப்பதற்கு உதவி செய்வதன் மூலம் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு இது உதவுகின்றது.

**சர்வதேச/ தேசிய மனிதாபிமான முகவராண்மைகள்**

அவசரகாலப் பதிலளிப்புக் குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டதன் பிரகாரம் MDM மற்றும் DMC ஆகியன கூட்டிணைந்து நிலைமை பற்றி அறிந்துகொள்வதுடன், மனிதாபிமான முகவராண்மைகள் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு NDRSC மற்றும் மாவட்ட அதிகார அமைப்புகள் ஆகியற்றின் மூலமாக அவர்களது பதிலளிப்பு மற்றும் நிவாரணச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வசதிப்படுத்துகிறது. ஐ.நா. முகவராண்மைகள், செஞ்சிலுவை அமைப்பு, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன தனது சொந்த பொறிமுறை மூலம் தமக்குரிய விடயப்பரப்புகள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசியமான உதவிகளை சர்வதே ரீதியாக வழங்கி வருகின்றன.

**தொண்டர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் (NGO)**

தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் பல்வேறு விதமான அனுபவங்களை தன்னகத்தே கொண்ட பல தொண்டர் அமைப்புகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் காணப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றுவதற்கும் அத்தகைய பாதுகாப்பு நிலையங்களை முகாமைத்துவம் செய்வதற்குமான, பிரதேச செயலாளர் மேற்கொள்வதற்கான உதவிகளை இவர்களினால் வழங்க முடியும்.

## 4.4 அனர்த்தங்களுக்கு பதிலளிக்கின்ற பங்குதார முகவர்களுக்கான பொறுப்புகள்

அனர்த்த நிலைமைகளுக்குப் பதிலளிக்கும் முகமாக நிறுவன ரீதியான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தில் காணப்படுகின்ற அவசரகாலப் பதிலளிப்புத் திட்டத்திற்கு ஏற்ப நடவடிக்கைகளை சகல தேசிய மற்றும் உப தேசிய மட்டத்திலான முகவர்கள் மேற்கொள்ள வேண்டும். தேசிய மற்றும் உபதேசிய மட்டத்திலான முகவர்களுக்கான பொறுப்புகள் பற்றி அட்டவணை 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

| **நடவடிக்கைகள்** | **பொறுப்பான பங்கீடுபாட்டாளர் முகவர்கள்** |
|---|---|
| சகல செயற்பாடுகள் தொடர்பான பொதுவான ஒருங்கிணைப்புகள் | • மாகாண, உள்ளூராட்சி மன்ற, மாவட்ட, பிரதேச, கிராம சேவகர் மட்டங்களைச் சேர்ந்த நிர்வாக ரீதியான தலைவர்கள்<br>• தேசிய மட்டத்த<br>•<br>• ில் அனர்த்த முகாமைத்துவ நிலையம்<br>• |
| தேடுதல், மீட்பு மற்றும் பாதுகாப்பு | • முப்படைகள், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு<br>• உள்ளூராட்சி மன்றங்களின் தீ அணைப்புச் சேவைகள்<br>• சமூகத் தொண்டர் குழுக்கள்<br>• அரச சார்பற்ற நிறுவனங்கள்/ சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| தொடர்பாடல் வசதிகளை பழைய நிலைக்குக் கொண்டுவரல் | • ரெலிகொம் மற்றும் ஏனைய தொலைத் தொடர்பாடல் முகவர்கள் |
| மின் விநியோகத்தை பழைய நிலைக்குக் கொண்டுவரல் | • இலங்கை மின்சாரசபை/ LECO |
| அவரசகால நிலைமைகளின் பொழுது வீதிகளை பயணிக்கக் கூடியதாக மாற்றுதல், திருத்துதல், மாற்றீட்டு வீதிகளை இனங்காணல் போன்றன. | • RDA, PRDA, உள்ளூராட்சி மன்றங்கள் |

| நடவடிக்கைகள் | பொறுப்பான பங்கீடுபாட்டாளர் முகவர்கள் |
|---|---|
| நீர் விநியோகம் மற்றும் ஏனைய முறைகளை விநியோகித்தல் மற்றும் துப்பரவாக்கல் வசதிகளை உரிய நிலைமைக்கு கொண்டுவரல் | • தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை<br>• உள்ளூராட்சி மன்றங்கள் |
| சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணுவதற்கு உதவுதல் | • இராணுவம், பொலிஸ், துணை ஆயுதப் படைகள், தீயணைப்புச் சேவைத் திணைக்களம் போன்றன. |
| தற்காலிக வீடுகள், மிருகங்களுக்கான இல்லங்கள், ஏனைய வசதிகள் | • இராணுவம், பொலிஸ், துணை ஆயுதப் படைகள், தீயணைப்புச் சேவைத் திணைக்களம், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக மைய அமைப்புகள் NDRSC<br>• தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை |
| முதலுதவி, மருத்துவ உதவிகள், இறந்தவர்களின் உடல்களை அகற்றுதல், சுகாதார மற்றும் துப்பரவாக்கல் சேவைகள் | • மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சு, அரசாங்க மற்றும் தனியார் வைத்தியசாலை, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், அரச சார்பற்ற நிறுவனங்கள், தீயணைப்புப் படைகள், சமுதாயங்கள் |
| நிவாரணச் செயற்பாடுகள், சமைத்த உணவுகள், உலர் உணவுகள் போன்றன. | • NDRSC, NGOs, INGOs, CBOs, சமுதாயங்கள் போன்றன, பொருத்தமாயின் சமூக சேவைகள் திணைக்களம் |
| துரித தேவைகள் மதிப்பீடுகள் | • மாவட்ட அதிகார அமைப்புகள் மற்றும் DMC ஆகியவற்றின் உதவியுடன் NDRSC |
| அபாயகரமான, நச்சுத்தன்மை வாய்ந்த, பாதகமான இரசாயனப் பதார்த்தங்களை அகற்றுதல் | • மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பொலிஸ், இராணுவம், AEA, தீயணைப்புச் சேவைகள் மற்றும் ஏனைய பொருத்தமான முகவரகங்கள். |
| சர்வதேச உதவிகள் மற்றும் நிவாரணப் பொருட்களைப் பெற்றக்கொள்வதற்கான ஏற்பாடுகள்<br><br>சர்வதேச தேடுதல்கள் மற்றும் மீட்புக் குழுக்கள் | • அனர்த்த முகாமைத்துவ அமைச்சு<br>• விமான நிலையம், விமானச் சேவைகள், சுங்கத் திணைக்களம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் உதவியுடன் NDRSC<br>• DG/DMC |

அட்டவணை 4.4: பதிலளிக்கும் அமைப்புகளின் பொறுப்புக்கள்

## 4.5 உப-தேசிய மட்டங்களில் அவசரகாலச் செயற்பாட்டுப் பொறிமுறைகள்

உப-தேசிய மட்டத்திலான அவசரகாலச் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட நிறுவன அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட மட்டங்களில் அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்வதற்காக திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் பொறுப்பாகவிருப்பர். அனர்த்தங்களுக்குப் பதிலளிக்கும் முகமாக உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மாவட்ட அனர்தத முகாமைத்துவக் குழுக்களை மாவட்ட செயலாளர்கள் அழைப்பதற்கான உதவிகளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு (DDMCU) வழங்கும். அவசரகால நிலைமைகளின் பொழுது அவசர உதவிகளை வழங்குவதில் பிரதேச செயலாளர்கள் முக்கிய வகிபாகத்தை மேற்கொள்கின்றனர். ஏனெனில், இவர்கள் மூலமாகவே தமது நிர்வாகப் பிரிவினுள் பாதிக்கப்பட்ட மக்களுக்க உதவிகள் வழங்கப்படுகின்றன. முன்னெச்சரிக்கைகளை வழங்குதல், அவசரகால நிலைமைகளின் பொழுது மக்களை அப்புறப்படுத்தல், முகாமைத்துவம், நிவாரணப் பொருட்களை வழங்குதல் ஆகியன தொடர்பான தராதரச் செயற்பாட்டு நடைமுறை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். அத்தோடு, அதிகாரிகளுக்கான பொறுப்புக்கள் பற்றியும் திட்டத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். பாரிய அனர்த்தமொன்று நிகழும் பட்சத்தில் பிரதேச மட்டத்தில் EOC கள் தாபிக்கப்படும். மாவட்ட அலுவலகத்தில் பணியாற்றுகின்ற ஏனையவர்களின் உதவியுடன் DDMCU பணியாளர்களினால் இது செயற்படுத்தப்படும்.

மாகாண அல்லது உள்ளூராட்சி மட்டங்களில் அரசியல் தலைமைத்துவத்தின் நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதல்கள் எவ்வப்போது அவசியப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவை தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையின் பொழுது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகார அமைப்புகளுடன் வளங்களைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் உள்ளூர் மட்டத்தில் காணப்படுகின்ற ஏனைய உதவிச் சேவைகள் ஆகியன தொடர்பிலான ஊடாட்டத்தை சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகார அமைப்புகளுடன் பிரதேச செயலாளர் மேற்கொள்வார் (மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள்).

அனர்த்தங்களுக்குப் பதிலளிக்கும் வழிமுறையானது அனர்த்தங்களின் தன்மையில் தங்கியுள்ளது. மாவட்டத்தின் ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டதாக அனர்த்தத்தின் தன்மை காணப்படும் பட்சத்தில் தேசிய மட்டத்திலிருந்து உதவிகள் வழங்கப்படும். பொதுமக்கள் மத்தியில் சிறப்பான ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்தும் முகமாக அடிப்படைத் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கும் முகமாக ஊடகங்களுடனான ஊடாட்டத்தை DDMCU ஏற்படுத்துகிறது.

கிராம சேவகர் மட்டத்தில் அனர்த்தங்களுக்கு பதிலளிக்கும் முகமாக முன்னணி வகிபாகத்தை கிராம சேவகர் மேற்கொள்கின்றார். இவர் கிராம சேவகர் மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவக் குழு, உப குழுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், சமுதாய மைய அமைப்புகள் மற்றும் தனியார்த்துறை அமைப்புகள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பங்கீடுபாட்டாளர்களுடனான ஊடாட்டத்தை மேற்கொள்கின்றார்.

## 4.6 பாதுகாப்பு நிலையங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிவாரணம் தொடர்பான ஏற்பாடுகள்

தேசிய மட்டத்திலான நிவாரணச் செயற்பாடுகளை தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் நிலையம் (NDRSC) ஒருங்கிணைக்கிறது. பிரதேச மட்டத்தைச் சேர்ந்த NDRSC அலுவல் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் பணியாற்றுகின்ற ஏனைய அரசாங்க அதிகாரிகளின் உதவியுடன் அனர்த்தத்திற்கு முன்னர் இனங்காணப்பட்ட இடங்களில் பாதுகாப்பு நிலையங்களைத் தாபித்து அவற்றைப் பேணி வருகின்றனர். கிராம சேவகரினால் அல்லது NDRSC அலுவலரினால் பெயர் நியமனம் செய்யப்பட்ட நபர் ஒருவர் பாதுகாப்பு நிலையங்களில் குடியிருக்கின்ற மக்கள் தொடர்பான தரவுகளை தனித்தனியாகப் பிரித்து அவற்றைப் பதிவுப் புத்தகத்தில் பேணி வருகின்றனர். வெளியேற்றும் நிலையமானது செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பிரதேச அதிகாரிகளினால் பயனாளிகளுடைய பதிவுப் புத்தகமொன்று பேணப்படுகிறது. அத்துடன் இடம்பெயர்ந்த நபர்களுக்கு உதவும் முகமாக அவசியமான வளங்கள் சேகரிக்கப்படுகின்றன. மருத்துவம், உணவு, தங்குமிட வசதி, நீர், துப்பரவர்ககல் வசதிகள் போன்ற மேலதிக உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக இந்நிலையங்களில் காணப்படுகின்ற தரவுகள் பிரதேச மற்றும் மாவட்ட அதிகார அமைப்புகளினால் பயன்படுத்தப்படுகின்றன.

அடிமட்டத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் உதவியுடன் NDRSC ஆனது மேலதிக நிதி ரீதியான உதவிகளை திறைசேரியிடம் சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரசபைகளுக்கு வழங்குகிறது. மேலும் உணவுப் பொருட்கள் சாராத ஏனைய தேவைகள் தொடர்பில் அரசாங்கம் மற்றும் ஏனைய மனிதாபிமான நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் அவற்றைத் திரட்டுவற்கான பணிகளை NDRSC மேற்கொள்கிறது.

பிரதேச மட்டத்தில் பணியாற்றுகின்ற NDRSC அதிகாரியானவர் கிராம சேவர் பிரிவில் பணியாற்றுகின்ற கிராம சேவகர் மற்றும் ஏனைய அதிகாரிகளின் உதவியுடன் பாதுகாப்பு நிலையங்களுக்கு அவசியமான சேவைகளை வழங்குகின்றனர். ஆயுதப் படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் பாதுகாப்புச் சேவையுடன் உணவு மற்றும் தங்குமிடம் தொடர்பான சேவைகளையும் வழங்குகின்றனர். அத்தோடு, முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கும் உதவிகளை வழங்குகின்றனர். கிராம சேவகரானவர் கிராம மட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்களை ஒழுங்கமைப்புச் செய்து அதன் மூலம் நிலையங்களை முகாமைத்துவம் செய்வதுடன், நிலையத்தில் உணவுகளையும் சமைக்கின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான கழிவு முகாமைத்துவம் மற்றும் அப்புறப்படுத்தப்பட்ட மக்கள் தங்கியுள்ள நிலையங்களிலுள்ள கழிவுகளை அகற்றுதல் ஆகிய செயற்பாடுகளை மீண்டும் அவர்கள் தமது பழைய இடத்திற்குச் செல்லும் வரை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்கின்றன.

## 4.7 இறந்த உடல்களைப் பேணுதல்: அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணல் (DVI)

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை இனங்காணும் செயன்முறையானது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் மிகவும் பொருத்தமான செயற்பாடாகும். இருப்பினும் இவற்றின் பொருத்தப்பாடுகள், நடைமுறைத்தன்மை, இச்செயன்முறையின் பயன்பாடு ஆகியன அடையாளங்காணப்பட்ட இறந்த உடல்களுடன் தொடர்புபடுத்தி அவை தொடர்பான நெறிமுறைகளை மையமாகக் கொண்டு பரிசீலிக்கையில் சந்தேகத்திற்கிடமானதாகவே காணப்படுகின்றது. உதாரணமாக, (i) விரல் அடையாளங்கள், (ii) பற்கள் தொடர்பான பதிவுகள் (iii) மரபணுச் சோதனை (DNA). இலங்கையில் வாழ்கின்ற பெரும்பாலான மக்கள் ஆகக் குறைந்த மருத்து உதவிகளைக் கூட பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். அத்தகைய நிலைமைகளில் விரல் அடையாளங்கள், பற்கள் தொடர்பான பதிவுகள், மரபணு ஆகியவற்றின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களை இனங்காண்கின்ற முறை தொடர்பில் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். ஏனெனில், சிறியளவிலான மக்கள் கூட இத்தகைய தகவல்களைப் பேணிவருவதில்லை. மருத்துவ ரீதியான தகவல்கள், தனிப்பட்ட சொத்துக்கள், புகைப்படங்கள் ஆகியன அடுத்த நெறிமுறைகளாகும்.

சாத்தியப்பாடுள்ள சந்தர்ப்பங்களில் இவை தொடர்பில் ஆராய்வதற்காக குழுவொன்றினை நியமிக்க முடியும். இத்தகைய முன்னெடுப்புகளுக்கு உதவுகின்ற நன்கொடையாளர் ஒருவரை இனங்கண்ட பின்னர் அவசியமான பயிற்சிகள் மற்றும் ஆற்றல் விருத்திகள் ஆகியவற்றைக் கொண்ட பொருத்தமான முறையொன்றை உதவுவதற்காக உருவாக்க முடியும்.

## 4.8 முன்கூட்டிய மீட்பு நடவடிக்கைகள்

முன்கூட்டிய மீட்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற பொழுது "Build Back Better" அணுகுமுறைகளையோ மற்றும் அனர்த்தத்திற்குப் பின்னரான மீட்புத் தேவைகள் தொடர்பானவற்றையோ NEOP மேற்கொள்வதில்லை. இருப்பினும் அனர்த்தத்திற்குப் பின்னரான தேவை மதிப்பீட்டினை முன்னெடுத்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பில் NEOP செயற்படுகின்றது.

### 4.8.1 அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்

பல்வேறு சந்தர்ப்பங்களில் முறிந்த மரங்கள், மண் சரிவுகள், கற்பாறைகள், பாதிப்படைந்த அல்லது அழிவடைந்த மதகுகள் ஆகியவற்றின் காரணமாக வீதிகளில் பயணம் செய்வது தடைபடுகின்றது. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்லல், நிவாரணப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் வழங்குதல் போன்ற அத்தியாவசிய சேவைகள் தடைப்படுகின்றன. எனவே, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள பாதைகளை உடனடியாக சீர்செய்வது அவசியமாகும். அவசரகால சேவை செயற்பாடுகளை இலகுபடுத்தும் முகமாக வீதிகளைச் சீரமைக்கும் பணிக்குப் பொறுப்பாக வீதி

அபிவிருத்தி அதிகாரசபை, PRDA மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் ஆகியன பொறுப்பாகவுள்ளன.

சில இடங்களில் அனர்த்தத்தின் பொழுது உடனடியாக நீர் மாசுற்றுக் காணப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு தூய நீர் விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்வது அவசர தேவையாகும். அதேபோல், மின் விநியோகம் மற்றும் தொடர்பாடல் முறைகள் ஆகியவற்றையும் உடனடியாக மீள வழங்குவது அவசியமாகும்.

### 4.8.2 அனர்தத்திற்குப் பின்னரான தேவை மதிப்பீடு தொடர்பான தரவுகள்/ தகவல்கள்

அனர்த்தத்திற்குப் பின்னரான தேவை மதிப்பீடானது அவசரகால செயற்பாட்டுக் கட்டத்திற்கு உட்பட்டதாக இல்லாத பொழுதிலும் இறந்தவர்கள் தொடர்பிலான தனித்தனியான தரவுகள், காணாமற்போன மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான தரவுகள், தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்பான செலவுகள் போன்றன உள்ளடங்கலாக சகலவிதமான பதிவுகள் மற்றும் அவசர செயற்பாடுகள் ஆகியன அனர்த்தத்திற்குப் பின்னரான தேவை மதிப்பீட்டினைத் தயார் செய்வதற்கு முறையாக பதியப்படல் வேண்டும்.

### 4.8.3 முன்கூட்டிய மீண்டெழல் நடைமுறைப்படுத்தல்

வீடுகளுக்கான நட்டஈடுகள், தற்காலிக தங்குமிடங்கள், உணவு ரீதியான உதவிகள், வாழ்வாதார உதவிகள், குடிநீர் விநியோகம், அத்தியாவசிய சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மீளமைத்தல் ஆகியன இவற்றுள் உள்ளடங்கும். சம்பந்தப்பட்ட அனர்த்தத்தின் தாக்கத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு குறித்துரைக்கப்பட்ட முன்கூட்டிய மீண்டெழல் திட்டங்களை விருத்திசெய்தல் முடியும். பொருத்தமான நடைமுறைகள் மூலம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனர்த்தத்தின் பொழுது உதவும் முகமாக பணம் ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்க முடியும். அத்தகைய திட்டங்களை ERD மூலமாக நடைமுறைப்படுத்துவதற்கான திறைசேரி நிதி மற்றும் சர்வதேச ரீதியான உதவிகள் ஆகியவற்றை அணிதிரட்டுவது தொடர்பான நடைமுறைகளை அமைச்சு மேற்கொள்ள முடியும்.

## 4.9 அனர்த்த பதிலளிப்புகளில் நிதி ரீதியான கருவிகள்

அனர்த்தத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட அனர்த்தச் செயற்பாடொன்றின் பொழுது திறைசேரி மூலமாக அவசியமான நிதியை இலங்கை அரசாங்கத்தினால் ஒதுக்க முடியும். இலங்கை அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டமானது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிவாரண ரீதியான முயற்சிகள் மற்றும் NDRSC இனால் மதிப்பீடு செய்யப்பட்ட அனர்த்தத்துடன் தொடர்புடைய ஏனைய நட்டஈட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை இலகுபடுத்த முடியும்.

இருப்பினும் மேலதிக வளங்கள் அவசியப்படும் பட்சத்தில் அனர்த்த நிமையைப் பிரகடனப்படுத்துவதன் ஊடாக (Cat DDO) மூலம் அவசியமான நிதியை கடனாகப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் அரசாங்கத்திற்கு உள்ளது.

அனர்த்த நிலைமையின் பொழுது அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்கின்ற செயற்பாட்டினை துரிதப்படுத்தும் முகமாக நிதி அமைச்சின் கொள்வனவுப் பிரிவின் உதவியுடன் அவசரக் கொள்வனவுச் செயற்திட்டத்தை NDRSC முன்னெடுக்க முடியும்.

## 4.10 வழிகாட்டல் கருவிகள் மற்றும் உடன்படிக்கைகள்

அனர்த்த நிவாரண பதிலளிப்புச் செயற்பாடுகளின் பொழுது ஆகக் குறைந்த SPHERE தராதரங்களுக்கு உடன்பட்டு தம்மாலான உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளை NEOP மேற்கொள்கின்றது. அனர்த்தத்தின் பொழுது விமான நிலையத்தைத் தயாராக வைத்திருப்போம் (GARD) இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் காணப்படுகின்ற ஏனைய வழிகாட்டிகளைப் பயன்படுத்த முடியும்.

ஆசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கிடையிலான அரசாங்கங்கள் மத்தியில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அனர்த்த நிலைமையொன்றின் பொழுது சார்க் பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகள் ஒன்றுக்கொன்று உதவ முடியும். அவசர பதிலளிப்புத் தொடர்பிலான சார்க் உடன்படிக்கைக்கு உட்பட்டு NEOP தனது பணிகளை மேற்கொள்கிறது.

## 4.11 அவசரகால பதிலளிப்பு ஒருங்கிணைப்பு வரைவுச்சட்டகம்

மாறுபட்ட மட்டங்களில் காணப்படுகின்ற அவரச பதிலளிப்பு ஒருங்கிணைப்பு வரைவுச்சட்டகமானது முன்னெச்சரிக்கைக் கட்டத்திலிருந்து ஆரம்ப மீண்டெழல் கட்டம் வரை அவசியமான வினைத்திறன் மிக்க பதிலளிப்புகளை அர்ப்பணிப்புடன் இத்தகைய நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. அனர்த்தத்தின் பொழுது வினைத்திறன் மிக்க பதிலளிப்புக்களை மேற்கொள்ளும் முகமாக அவசரகால செயற்பாட்டு முறை தாபிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட சகல மக்களும் ஒன்றாகக் கூட்டிணைந்து அனர்த்தத்தின் பொழுது செயற்படல் வேண்டும். மாறுபட்ட மட்டங்களிலான பதிலளிப்புச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து அவசியமான வழிகாட்டிகளை பின்வரும் குழுக்கள் அர்ப்பணிப்புடன் வழங்கும்.

### 4.11.1 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்திற்கான உச்ச அமைப்பு இந்த சபை என்ற முறையில் அனர்த்த நிலைமையொன்றின் பொழுது சகல உறுப்பினர்களும் அதிகூடிய அர்ப்பணிப்புடன் பதிலளிக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தக் கூடிய விதத்தில் அவசியமான ஒரங்கிணைப்புக்களை இச்சபை மேற்கொள்ளும். அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் சபையின் விசேட கூட்டமொன்றினைக் கூட்டி செயலக ரீதியான உதவிகளை வழங்குவார்.

#### 4.11.2 தேசிய பதிலளிப்பு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு

NEOP மற்றும் நிறுவன ரீதியன அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் ஆகியவற்றை செயற்படுத்த ஆரம்பித்ததன் பின்னர் அனர்த்த நிலமைகளை மதிப்பீடு செய்யும் முகமாகவும் அதிகாரிகளுக்கு வழிகாட்டிகளை வழங்கும் முகமாகவும் அமைச்சின் செயலாளர்கள், அனர்தத்தை முகாமைத்துவம் செய்வதுடன் தொடர்புடைய அமைப்புகளின் திணைக்களத் தலைவர்கள், ஆயுதப் படையினர், அனர்த்த முகாமைத்துவக் குழுக்களின் பணிப்பாளர் நாயகங்கள், NBRO, வானிலை திணைக்களப் பணிப்பாளர், NDRSC, அமைச்சின் தகவல் முகாமைத்துவப் பிரிவு (IMU) ஆகியவற்றுடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தலைமையில் கூட்டமொன்றை நடத்துவார்.

#### 4.11.3 சர்வதேச உதவிகளை ஒருங்கிணைத்தல்

நாட்டினால் தனியாக சமாளிக்கக் கூடிய ஆற்றல்களுக்கு அப்பால் அனர்த்தத்தின் அளவு காணப்படும் பட்சத்தில் அதிகரித்து வரும் அனர்த்த நிலைமை மற்றும் அவசியமான அவசரகால உதவிகள் ஆகியன தொடர்பில் எடுத்துரைக்கும் முகமாக ஐ.நா. முகவராண்மைகள், நன்கொடைச் சமூகங்கள், சர்வதேச உதவி நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், மனிதாபிமான அமைப்புகள் ஆகியவற்றுடன் கூட்டமொன்றை அமைச்சர் நடத்துவார். தேடுதல் மற்றும் மீட்டல் தொடர்பான சர்வதேச உதவிகளை பணிப்பாளர் நாயகம்/ அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஆகியன ஒருங்கிணைக்கும். சர்வதேச மருத்துவ உதவிகளை ஒருங்கிணைத்தல், மருந்துகள் உள்ளடங்கலான ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும். சர்வதேச சமூகங்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நிவாரணப் பொருட்கள் (உணவு மற்றும் உணவு சாராத பொருட்கள்), தற்காலிக பாதுகாப்பு நிலையங்களைத் தாபித்தல் ஆகியவற்றை NDRSC இன் பணிப்பாளர் ஒருங்கிணைப்பார்.

ஜனாதிபதி அவர்களினால் அனர்த்த நிலைமை பிரகடனப்படுத்தப்படும் பட்சத்தில் சர்வதேச சமூகங்களிடமிருந்து உடனடி உதவிகளைக் கோருவதற்கான கோரிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் விடுக்கலாம். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மூலமாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் உதவிகளைக் கோரி இலங்கையின் நட்பு நாடுகளின் தூதரகங்கள் மூலமாக கோரிக்கைகளை விடுக்கலாம். அரசாங்கம் தீர்மானிக்கும் பட்சத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வெளிநிலை வளங்கள் திணைக்களம் (ERD) மூலமாக வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலமாக மேலதிக உதவிகளை நாட முடியும். சர்வதேச உதவிகளுக்கான கோரிக்கை வெளியிடப்பட்டதன் பின்னர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் சிறப்பான பதிலளிப்பு ஏற்பாடுகளுக்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்தலாம்.

### 4.11.4 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு (NDMCC)

தேசிய மட்ட அரச துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள், பட்டயக் கணக்காளர்கள் சங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வியியலாளர்கள், ஊடகத் துறையினர், ஐ.நா. முகவராண்மைகள், அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நன்கொடை நிறுவனங்கள் ஆகியோர் NDMCC இன் உறுப்பினர்களாகவிருப்பர். இக்கூட்டங்களுக்கு செயலாளர் தலைமை தாங்குவார். அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமை தாங்குவார். செயலக ரீதியான செயற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேற்கொள்ளும். பட்டியலை இற்றைப்படுத்தல், உறுப்பினர்களுடைய தொடர்புகொள்ளக் கூடிய விபரங்களை இற்றைப்படுத்தல் ஆகியவற்றை முறையாக இது மேற்கொள்ளும். NDMCC உறுப்பினர்களுடனான அவசர கூட்டமொன்று அனர்த்த நிலைமைகளை முகங்கொள்ளக் கூடிய நிறுவனங்களின் தயார் நிலைமைகளை மதிப்பீடு செய்யும் முகமாக MDM செயலாளரின் தலைமையில் நடைபெறும். நிலைமை சுமுகமாக வந்ததன் பின்னர் சிறப்பான நடைமுறைகளை இனங்காணும் முகமாகவும் எதிர்காலத்தில் மேலும் மேம்படுத்தும் வகையில் குறைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்யும் முகமாகவும் சாதாரண கூட்டமொன்று நடைபெறும். இக்கூட்டத்திற்கான செயலக ரீதியான உதவிகளை DG/DMC வழங்கும்.

### 4.11.5 அவசரகால பதிலளிப்புக் குழு (ERC)

அவசர செயற்பாடுகள் பணிப்பாளர் மற்றும் ஏனைய பணிப்பாளர்கள் ஆகியோருடன் கலந்தாலோசனைகளை மேற்கொண்டு அவசரகால செயற்பாட்டுக் குழுவிற்கு அவசியமான நிறுவனங்களை DG/DMC இனங்காணும். அத்தோடு, தேசிய சபை அல்லது இடைக்கால முகாமைத்துவக் குழு (IMC) ஆகியவற்றின் ஒப்புதலைப் பெறும். சபையினால் அல்லது IMC இனால் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்கள் ERC மற்றும் DG/DMC ஆகியவற்றுக்கான பிரதிநிதி ஒருவரை பெயர் நியமனம் செய்யும் படி கோரப்படும். மேலும் இவர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கப்படுவதுடன், சகல உறுப்பினர்களுக்குமான செயலாற்றுகை நியதிகளும் வழங்கப்படும். அவசரகால செயற்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முகமாக அவசர பதிலளிப்புக் கூட்டமொன்று DG/DMC தலைமையில் நடைபெறும். உரிய நேரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்துகொள்ளும் முகமாக தமது மத்திய முகவர்கள் மூலமாக பதிலளிப்புச் செயற்பாடுகளை ERC ஒழுங்கமைக்கும்.

### 4.11.6 மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள்

அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளில் காத்திரமாக ஈடுபடுகின்ற முகவர்களின் பிரதிநிதிகள் மாவட்ட/ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். இக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான கடிதத்தை மாவட்ட/ பிரதேச செயலாளர் வழங்குவார். பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பான ஒருங்கிணைந்த

பதிலளிப்புக்களை வழங்கும் முகமாக சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புகள் ஆகியவற்றுடன் முறையான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் நடத்தும். அவசியமானவிடத்து சம்பந்தப்பட்ட ஆளணியினர் தொடர்பான தகவல்கள் மற்றும் மேலதிகச் செயற்பாடுகளுக்கான தேசிய ஒழுங்கமைப்புத் தேவைகள் ஆகியன கருத்திற்கொள்ளப்படும்.

### 4.11.7 கிராம சேவகர் மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவக் குழு

கிராம மட்டத்தில் பணியாற்றுகின்ற அரசாங்க அதிகாரிகளின் உதவியுடன் கிராம சேவகர் உரிய நேரத்தில் மக்கள் வெளியேற்றப்படுகின்றார்கள் மற்றும் உணவு வழங்கல் உள்ளடங்கலாக பாதுகாப்பு நிலையங்கள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றன என்பனவற்றை உறுதிசெய்துகொள்வார். பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் காத்திரமாகச் செயற்படுகின்ற சமுதாய மட்டக் குழுக்கள் உதவிகளை வழங்கலாம். குறிப்பிட்ட நிலையத்திலுள்ள பெண்கள், சிறுவர்கள் மற்றும் அங்கவீனமுற்றவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

## 4.12 அனர்த்த தகவல் முகாமைத்துவம்

### 4.12.1 அடிப்படைத் தரவுகளைத் தயார்செய்தல்

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் உள்ளடங்கலாக அவசரகால செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேம்படுத்துவதற்கு அனர்த்தத்தினால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள்தொடர்பான சிறப்பான அனர்த்த வரைபடங்கள் மற்றும் தனித்தனியான தரவுகள் ஆகியன அவசியப்படுகின்றன. சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப முகவர்களுடன் கூட்டிணைந்து அனர்த்த முகாமைத்துவ நிலையமானது வரைபடங்களைத் தயாரித்த பொழுதிலும் பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் தொடர்பான விடயங்கள் இவ்வரைபடத்தில் உள்ளடக்கப்பட்ட பொழுதிலும்கூட கள மட்டத்தில் அவசரகால செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இவ்வரைபில் போதாமைகள் காணப்படுகின்றன. அவசரகால செயற்பாடுகளின் பொழுது பயன்படுத்துவதற்காக அடிக்கடி நிகழ்கின்ற (வெள்ளப் பெருக்கு, மண் சரிவுகள்) விபரங்களை உள்ளடக்கி சிறப்பான அனர்த்த வரைபடங்களை அனர்த்த முகாமைத்துவக் குழு தயாரித்துள்ளது. அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கின்ற கிராமசேவகர் பிரிவு மட்டத்திலான தனித்தனியான தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் உதவி பெற்றுக்கொள்ளப்படும். அடிப்படைத் தரவுகளைத் தயாரிக்கும் முகமாக சிறந்த அம்சங்களையுடைய உயரிய வரைபடங்கள் அதாவது, அனர்த்தம் தொடர்பான வரைபடங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை DMC உறுதிசெய்துகொள்ளும்.

### 4.12.2 அனர்த்தம் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் அவற்றைப் பரப்புகின்ற செயன்முறைகள்

உயிரிழப்புக்கள், காணாமற்போனவர்கள், காயமடைந்தவர்களின் எண்ணிக்கை, அவர்களின் குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோர் தொடர்பான தரவுகளை

EOC சேகரிக்கும். அத்துடன் அன்றாட அடிப்படையில் நிலைமை தொடர்பான அறிக்கைகளையும் வழங்கும். பாரியளவில் அனர்த்தம் நிகழும் பட்சத்தில் விசேட நிலைமை அறிக்கைகள் EOC இனால் வழங்கப்படும்.

உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்கள் தொடர்பிலான தேவைகளைத் தீர்மானிப்பதற்கு அவசியமான தரவுகளையும் NDRSC சேகரிக்கின்றது. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் தொடர்பான தகவல்களை அவர்களுக்கு உதவும் முகமாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு சேகரிக்கின்றது. DMC ஆனது ஏனைய நிறுவனங்களுடன் கலந்தாலோசனைகளை மேற்கொண்டு அனர்த்தத்துடன் தொடர்புடைய தரவுகளைச் சேகரித்து பொதுவான தரவு மையமொன்றை விருத்திசெய்தல் வேண்டும். ஒரேவிதமான விடயங்கள் பல இடங்களில் இடம்பெறுவதைத் தவிர்க்கும் முகமாக அடிமட்டத்திலிருந்து முறையாக தரவுகளைச் சேகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அடிமட்ட பதிலளிப்புகள் வினைத்திறன் மிக்க முறையில் இடம்பெறுவதற்கு அவசியமான இலகுபடுத்தல்களும் வழங்கப்படும். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலமாக சகல முகவர்களினாலும் இணங்கப்பட்ட வடிவமைப்பு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படும்.

EOC இனால் வழங்கப்பட்ட விழிப்பூட்டல்கள், எதிர்வுகூறல்கள், எச்சரிக்கைகள் மற்றும் நிலைமை தொடர்பான இற்றைப்படுத்தல்கள் ஆகியவற்றை DMC பேணவேண்டும். சாதாரண நிலைமைகளில் அல்லது அனர்த்த நிகழ்வுகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கின்ற பொழுது, சுற்றாடல் தொடர்பான எச்சரிக்கைகள் கிடைக்கின்ற பொழுது நிலைமை தொடர்பான அறிக்கைகள் EW வினால் அனுப்பிவைக்கப்படுகின்றன அல்லது அதற்குக் கிடைக்கப் பெறுகின்றன.

வினைத்திறன் மிக்க பதிலளிப்பு மற்றும் நிவாரணத் திட்டமிடல் ஆகியவற்றின் நிமித்தம் பயன்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட பொருட்களை EOC வழங்கும் முகமாக அனர்த்த நிகழ்வொன்று நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் DMC இனால் அவசரகாலத் திட்டமிடல் பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். காணி அளத்தல் திணைக்களம், ஏனைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்து அவசரகாலச் செயற்பாடுகள் மற்றும் நிவாரணப் பணிகள் ஆகியவற்றுக்கு உதவும் முகமாக ஒரங்கிணைப்புக்களை DMC மேற்கொள்ளல் வேண்டும்.

அனர்த்தங்கள், பதிலளிக்கும் நிறுவனங்களின் செலவுகள், தொடர்பு முறைகள் மற்றும் போக்குகள் ஆகியவற்றை இனங்கண்டு சபைக்குச் சமர்ப்பித்தல், தொடர்பான தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் அமைச்சர் மற்றும் கொள்கைத் தீர்மானம் தொடர்பான செயலாளர் ஆகியோர் அவசரகால செயற்பாடுகளை எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு மேம்படுத்தல் வேண்டும். அனர்த்தம் தொடர்பான தரவுகளை அவற்றின் துல்லியத்தன்மையை மேம்படுத்தும் முகமாக அடிப்படைத் தரவுகளுடன் ஒப்பீடு செய்து DCS இன் உதவி நாடப்படும். அனர்த்தம் தொடர்பான திட்டங்களை மையமாகக் கொண்டு உடனடி அத்தியாவசியத் தேவைகள் (உணவு மற்றும் உணவு சாராத பொருட்கள்),

அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் தேவைப்படும் அத்தகைய பொருட்களின் அளவு, அனர்த்தம் நிகழ்ந்ததன் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களது எண்ணிக்கைக்கு ஏற்ப தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தேவையான அளவினைச் சீர்செய்தல் ஆகிய பணிகளை DCS இனால் தயாரிக்கப்பட்ட பாதிப்புறு நிலையில் வாழ்கின்ற மக்கள் தொடர்பான அடிப்படைத் தரவுகளை மையமாகக் கொண்டு NDRSC மேற்கொள்ளும். தரம் குறைந்த பொருட்கள் விநியோகிக்கப்படுவதைத் தடுக்கும் முகமாக உணவு சாராத நிவாரணப் பொருட்கள் தொடர்பிலான தராதரங்களை நிர்ணயம் செய்வது அவசியமாகும். தேவைகள் தொடர்பான பட்டியலை தேசிய மற்றும் சர்வதேச மனிதாபிமான நிறுவனங்கள், ஐ.நா. முகவராண்மைகள், நன்கொடையாளர்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

அனர்த்தம் தொடர்பான தரவுகள் அல்லது தகவல்களானவை சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரினால் நியமிக்கப்படுகின்ற அதிகாரி ஒருவரினால் மாத்திரமே ஊடகங்களுக்கு விநியோகிக்கப்படல் வேண்டும்.

### 4.12.3 ஊடக அறிவித்தல்கள்

நாட்டின் அனர்த்த நிலைமை தொடர்பான துல்லியமான தரவுகள் மற்றும் மக்கள் மீது அது ஏற்படுத்திய தாக்கம், உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார ரீதியிலான சொத்துக்கள் போன்ற தகவல்களைத் துல்லியமாக ஊடகங்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் ஆளுகையின் கீழ் வருகின்ற ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றின் பொறுப்பாகும். அனர்த்தமொன்று நடைபெற்று முதல் 3 நாட்களுக்குள் 12 மணித்தியாலங்களுக்கு ஒரு முறையும் அதன் பின்னர் ஒரு நாளைக்கு ஒரு முறையும் ஆகக் குறைந்தது ஊடக அறிக்கைகள் வழங்கப்படல் வேண்டும்.

அனர்த்தத்தின் கடும் தன்மைக்கு ஏற்ப அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஊடக சந்திப்புக்களை ஏற்பாடு செய்ய முடியும். அமைச்சின் ஆளுகையின் கீழ் வருகின்ற நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தரவுகளை வழங்காதிருப்பதை அமைச்சு உறுதிசெய்தல் வேண்டும்.

மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக அவசரகால நிலைமை அல்லது விசேட நிகழ்வொன்றின் பொழுது விசேட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மேற்படி தரப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## இணைப்புக்கள்


| இணைப்பு இல. | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| இணைப்பு 1 | பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாகத் தரவுகளைச் சேகரிக்கும் மாதிரிப் படிவம் | 47 |
| இணைப்பு 2 | நாளாந்த நிலைமைகள் பற்றிய அறிக்கைக்கான மாதிரிப்படிவம் | 48 |
| இணைப்பு 3 | வரைவிலக்கணங்கள்/ மொழிகள் | 49 |
| இணைப்பு 4 | அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் குழு உறுப்பினர்கள் | 57 |
| இணைப்பு 5 | அவசர நிலைமைகளின் போதான பதில் நடவடிக்கைகள் குழுவின் பொறுப்புக்கள் | 58 |

# இணைப்பு 1 - பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாகத் தரவுகளைச் சேகரிக்கும் மாதிரிப் படிவம்

Disaster management Center
(DMC)

## Ministry of Disaster Managemet
## Disaster Situation Repor As at ....... Hrs On .................

National Disaster Relief Service Center,
NDRSC

| N0 | පරිපාලන ප්‍රදේශය நிர்வாகப் பிரிவு Administrative purview – දිස්ත්‍රික්කය மாவட்டம் District | පරිපාලන ප්‍රදේශය நிர்வாகப் பிரிவு Administrative purview – ප්‍රා.ලේ. කො பி.செ.பிரிவு Division | ආපදාව அனர்த்தம் Disaster | ආරම්භක දිනය அனர்த்தம் ஆரம்பித்த திகதி Date of commenced | බලපෑමට ලක්වූ பாதிக்கப்பட்ட Affected – පවුල් සංඛ්‍යාව குடும்பங்கள் Families | බලපෑමට ලක්වූ பாதிக்கப்பட்ட Affected – පුද්ගලයින් நபர்கள் Persons | මිය යෑම මரணங்கள் Deaths | තුවාලවූ පුද්ගලයින් காயமடைந்தோர் Injured Persons | අතුරුදහන්වූ පුද්ගලයින් காணாமல் போனோர் Missing Persons | නිවාස හානි சேதமடைந்த வீடுகள் Houses Damaged – පූර්ණ හානි முழு Fully | නිවාස හානි சேதமடைந்த வீடுகள் Houses Damaged – අර්ධ හානි பகுதி Partially | වෙනත් හානි வேறு Other Damages – කුඩා හා මධ්‍ය පරිමාණ ව්‍යාපාරික ස්ථාන சிறு மற்றும் மத்திய முயற்சிகள் Small, Medium, Enterprises Damages | වෙනත් හානි வேறு Other Damages – ඉතා වැදගත් යටිතල පහසුකම් වලට වූ හානි அடிப்படைக் கட்டமைப்புக்கள் Damages to critical Infastructure | ආරක්ෂිත ස්ථාන பாதுகாப்பான அமைவிடம் Safe Location – ආරක්ෂිත ස්ථාන සංඛ්‍යාව எண்ணிக்கை Nos | ආරක්ෂිත ස්ථාන பாதுகாப்பான அமைவிடம் Safe Location – පවුල් සංඛ්‍යාව குடும்பங்கள் Families ; | ආරක්ෂිත ස්ථාන பாதுகாப்பான அமைவிடம் Safe Location – පුද්ගලයින් நபர்கள் Persons |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | |
| මුළු එකතුව/மொத்தம்/Total | | | | | | | | | | | | | | | | |

Assistant Director (District)- DDMCU

National Disaster Relief Service Officer,
NDRSC (District)

District Secretary

# இணைப்பு 2- நாளாந்த நிலைமைகள் பற்றிய அறிக்கைக்கான மாதிரிப்படிவம்

ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
இடர் முகாமைத்துவ நிலையம்
DISASTER MANAGEMENT CENTRE

තත්ත්ව වාර්තාව - ශ්‍රී ලංකාව / நிலைமை அறிக்கை - இலங்கை/ Situation Report - SriLanka
දිනය /திகதி / Date : …………….. at ….. hrs

ලේකම් - ආපදා කළමනාකරණ අමාත්‍යාංශය / செயலாளர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு Secretary, Ministry of Disaster Management

ආපදා කළමනාකරණ ගරු අමාත්‍යතුමාගේ පුද්ගලික ලේකම් /கௌரவ அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் Private Secretary to the Hon. Deputy Minister of Disaster Management

| පළාත மாகாணம் Province | # | පරිපාලන ප්‍රදේශය நிர்வாகப் பிரிவு Administrative purvie | | ආපදාව அனர்த்தம் Disaster | ආරම්භක දිනය அனர்த்தம் ஆரம்பித்த திகதி Date of commenced | බලපෑමට ලක්වූ பாதிக்கப்பட்ட Affected | | මිය යෑම් மரணங்கள் Deaths | තුවාලවූ පුද්ගලයින් காயமடைந்தோர் Injured People | අතුරුදහන්වූ පුද්ගලයින් காணாமல்போனோர் Missing People | නිවාස හානි சேதமடைந்த வீடுகள் Houses Damaged | | වෙනත් හානි வேறு Other Damages | | ආරක්ෂිත ස්ථාන பாதுகாப்பான அமைவிடம் Safe Location | | | වෙනත් කරුණු வேறு குறிப்புக்கள் Remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | දිස්ත්‍රික්කය மாவட்டம் District | ප්‍රා.ලේ. කො பிரதேச செய.பி DS Division | | | පවුල් සංඛ්‍යාව குடும்பங்கள் Families | පුද්ගලයින් நபர்கள் People | | | | පූර්ණ හානි முழுமையாக Fully | අර්ධ හානි பகுதியளவு Partially | කුඩා හා මධ්‍ය පරිමාණ ව්‍යාපාරික ස්ථාන සිறு மற்றும் மத்திய முயற்சிகள் Small, Medium, Enterprises Damages | ඉතා වැදගත් යටිතල පහසුකම් වලට වූ හානි அடிப்படைக் கட்டமைப்புக்கள் Damages to critical Infastructure | ආරක්ෂිත ස්ථාන සංඛ්‍යාව எண்ணிக்கை Nos | පවුල් සංඛ්‍යාව குடும்பங்கள் Families | පුද්ගලයින් நபர்கள் Persons | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | දිස්ත්‍රික් එකතුව மாவட்ட கூட்டுத்தொகை District Total | | | | | | | | | | | | | | | | | |
| | පළාත් එකතුව மாகாண கூட்டுத்தொகை Province Total | | | | | | | | | | | | | | | | | |
| මුළු එකතුව மொத்தக் கூட்டுத்தொகை GRAND TOTAL | | | | | | | | | | | | | | | | | | |

රාජකාරි භාර නිළධාරි / கடமை அதிகாரி / Duty Officer : 011 2670002
මාධ්‍ය ප්‍රකාශක / **செய்தி தொடர்பாளர்கள் / Media Spokesmen :**
ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය /அனர்த்த முகாமைத்துவ நிலையம்/ Disaster Management Centre
හදිසි ඇමතුම් / தொலைபேசி / Hot Lines: 117, 0112670002, 0112136136
ෆැක්ස් / தொலை நகல் / Fax: 0112670079
විද්‍යුත් තැපැල් / மின்னஞ்சல் / Email: eocdmc@gmail.com
වෙබ් අඩවිය / இணையம் / Web: www.dmc.gov.lk

………………………………………………….
Duty Officer
For Director General

# இணைப்பு 3- வரைவிலக்கணங்கள்/ துறைசார் சொற்கள்

**துல்லியமான வரைவிலக்கணங்கள்**

**விழிப்பு நிலை** : நிகழக்கூடிய அனர்த்தம் தொடர்பில் பாதிப்புறும் நிலையில் வாழும் மக்களுக்கு அறிவிக்கும் ஆரம்பத் தகவல்கள்.

**அனர்த்தம்**[1] : ஒரு சமுதாயத்தின் அல்லது சமூகத்தின் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாத் தடுக்கும் காரணிகள். இதன் காரணமாக பரந்தளவில் மனித, பொருட்கள், பொருளாதார, சுற்றாடல் ரீதியான இழப்புகள் ஏற்படுதல். இதனால் ஏற்படும் தாக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட சமூகம் அல்லது சமுதாயம் தமது சோந்த வளங்களைப் பயன்படுத்தி இசைந்து செல்ல முடியாதளவிற்கு அதன் ஆற்றல்களை விட விஞ்சிச் செல்லுதல்.

**முன் எச்சரிக்கை முறை**[1] : அனர்த்தமொன்றினால் அச்சுறுத்தப்பட்ட தனி நபர்கள், சமுதாயங்கள், அமைப்புகள் ஆகியன தம்மை தயார் செய்து பொருத்தமான முறையில் செயற்படுவதற்கும் நிகழக்கூடிய பாதிப்பினை அல்லது இழப்பினைக் குறைப்பதற்குப் போதியளவு நேரத்தைக் கொண்ட வகையில் அர்த்தமுள்ள முன்னெச்சரிக்கைத் தகவல்களை உரிய நேரத்தில் உருவாக்கி அவற்றை பரப்புரை செய்வதற்கு அவசியமான ஆற்றல் தொகுதிகள்.

**அவசரகால நிலை:** உடனடிச் செயற்பாடு அவசியப்படுகின்ற எதிர்வுகூற முடியாத உடனடி நிகழ்வு அல்லது அபாயம். இது மனிதர்களினால் உருவாக்கப்பட்ட அல்லது இயற்கையினால் உருவாக்கப்பட்ட இயற்கை அல்லது தொழில்நுட்ப ரீதியான அனர்த்தங்களாகவிருக்கலாம். இவை பாரியளவில் தாக்குதிறன் கொண்டதுடன், இவற்றுக்கு முகங்கொடுத்துள்ள மக்களை/ கட்டிடங்களை/ஏனைய பொருட்களை பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள மக்களினால் சமாளிக்க முடியாதளவிற்கு அவர்களது ஆற்றலையும் விஞ்சி பாரியளவில் தாக்குதிறன் உடையதாகக் காணப்படும்.

**அவசரகால நிலை முகாமைத்துவம்**[1] : அவசரகால நிலைமையுடன் தொடர்புடைய சகல அம்சங்கள் பற்றிய அமைப்புகள் மற்றும் வளங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பொறுப்புகள் பற்றியன. குறிப்பாக தயார் நிலைகள், பதிலளித்தல், ஆரம்ப மீண்டெழல் படிமுறைகள்.

வெளியேறுவதற்கான உத்தரவு: பாதிப்புறு நிலையில் வாழுகின்ற சமூகங்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கான எச்சரிக்கை.

இடையூறு[1] : உயிர் இழப்புக்களை, காயங்களை அல்லது ஏனைய சுகாதார ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய, சொத்துக்களைப் பாதிக்கின்ற, வாழ்வாதாரத்தையும் சேவைகளையும் இழக்கச் செய்கின்ற, சேவைகளுக்கும் சமூகப் பொருளாதார நிலைமைகளையும்

பாதிக்கச் செய்கின்ற அல்லது சுற்றாடலுக்குப் பாதகத்தை ஏற்படுத்துகின்ற அபாயகரமான அம்சம், பொருட்கள், மனித செயற்பாடு, நிலை.

**தயார் நிலை**[1] : அரசாங்கங்களினால், பதிலளித்தல், மீண்டெழல் தொடர்பான தொழில்வாண்மை மிக்க அமைப்புகள், சமுதாயங்கள், தனி நபர்கள் ஆகியவற்றினால் நிகழக் கூடிய அல்லது தற்போது காணப்படுகின்ற இடையூறு அல்லது நிலைமைகள் தொடர்பில் வினைத்திறன் மிக்க முறையில் பதிலளித்தல், மீண்டெழல்.

**மீண்டெழல்**[1] : அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களது வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை நிலை ஆகியவற்றை பொருத்தமான வசதிகளுடன் மீள் கட்டமைத்தல் அல்லது மேம்பாடடையச் செய்தல். இவற்றுள் அனர்த்த இடர் காரணிகளுடன் தொடர்புடையவற்றைக் குறைக்கின்ற முயற்சிகளும் உள்ளடங்கும்.

**அறிவுறுத்தல்** : பாதிப்புறு நிலையிலுள்ள சமூகங்கள் பாதுகாப்பாகச் செல்லும்படி ஆலோசனை வழங்குதல்.

**எச்சரிக்கை** : நிகழக்கூடிய அனர்த்தம் தொடர்பில் பாதிப்புறு நிலையிலுள்ள சமூகங்களுக்கு எச்சரிக்கைவிடுக்கும் தகவல்கள்.

**மீளப்பெறல்** : எச்சரிக்கையை மீளப்பெற்று பாதுகாப்பாகத் திரும்புதல்.

[1]*United Nations International Strategy for Disaster Reduction (UNISDR)*

**காற்று அனர்த்தம்**

இரசாயனப் பதார்த்தங்கள், சில வகையான பொருட்கள், உயிரியல் சார்ந்த பொருட்கள், பாதகமான ஏனைய பொருட்கள் ஆகியன புவியின் வளிமண்டலத்தில் விடப்படுவதன் காரணமாக காற்றுத் தொடர்பான அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இவை மனித உயிர்களுக்கு அல்லது ஏனைய உயிரினங்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன், இயற்கைச் சுற்றாடலையும் பாதிக்கின்றது. அடிப்படை மாசுறுதலுக்கு உதாரணமாக, வாகனங்களிலிருந்து வெளியிடப்படும் காபன் மொனோ ஒட்சைட் மற்றும் நிலக்கரி எரிதலின் காரணமாக வெளிவிடப்படும் சல்பர் டை ஒட்சைட் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும்.

**வான் தாக்குதல்**

விமானங்கள் மூலமாக மேற்கொள்ளப்படும் தாக்குதல் வான் தாக்குதல் எனப்படும். இராணுவ விமானங்கள் மூலமாக நிலத்தில் இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் இவற்றுள் உள்ளடங்குகின்றன. குறிப்பாக விமானங்களிலிருந்து போடப்படும் குண்டுகள் இவற்றில் உள்ளடங்குகின்றன.

**இரசாயன விபத்துகள்**

மனித சுகாதாரத்திற்கு மற்றும்/ அல்லது சுற்றாடலுக்கு குறுகிய கால அடிப்படையில் அல்லது நீண்டகால அடிப்படையில் வெளியிடப்படும் பாதகமான பதார்த்தம் அல்லது பதார்த்தங்களின் விளைவாக ஏற்படுவனவற்றை இரசாயன விபத்துக்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் மக்களுக்கு நோயை ஏற்படுத்தக்கூடிய, காயங்களை விளைவிக்கக்கூடிய, அங்கவீனத்தை அல்லது இறப்பை ஏற்படுத்தக்கூடிய தீ, குண்டு வெடிப்புகள், கசிவுகள் அல்லது நச்சுத்தன்மை வாய்ந்த அல்லது பாதகமான பொருட்கள் வெளியிடப்படுகின்ற நிகழ்வுகள் போன்றன இவற்றுள் உள்ளடங்கும்.

நச்சுப் பதார்த்தங்கள் களஞ்சியப்படுத்தப்படுகின்ற பொழுது, போக்குவரத்துச் செய்யப்படுகின்ற பொழுது, அவை பயன்படுத்தப்படுகின்ற பொழுது இரசாயன விபத்துகள் ஏற்படலாம். பாரியளவில் இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்தல், அவற்றைக் களஞ்சியப்படுத்தி வைத்தல் போன்ற கைத்தொழில் சார்ந்த விபத்துகள் மிகவும் கடுமையான விபத்துகளாலம்.

**சிவில் அல்லது உள்நாட்டு யுத்தம்**

நாட்டில் தற்சமயம் காணப்படுகின்ற சட்டத்திற்கு எதிராக மக்கள் அல்லது அரசாங்கம் வன்முறை சார்ந்த முறையில் சண்டையிடுவதானது சிவில் அல்லது உள்நாட்டு யுத்தம் என அழைக்கப்படும்.

**கரையோர அரிப்பு**

அலையினல் அல்லது சுழியினால், வடிகால் அமைப்பினால் நிலப்பகுதி அல்லது கடற்கரைப் பகுதி அல்லது மணற்குன்றுப் படிவுகள் ஆகியன அகற்றப்படுதல் கரையோர அரிப்பு எனப்படும். காற்று, புயலினால் ஏற்படும் காற்று அல்லது வேகமாக அசைகின்ற இயந்திரப் படகுகள் ஆகியவற்றினால் கரையோர அரிப்பு ஏற்படுகின்றன. படிவுகள் மற்றும் கற்பாறைகள் போன்றவற்றுக்கு நீண்டகால அடிப்படையில் பாதகங்கள் ஏற்படலாம். அல்லது கரையோரப் படிவுகள் தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மீள் விநியோகிக்கப்படலாம். ஓர் இடத்தில் அரிப்பு ஏற்படும் பொழுது அதன் படிவுகள் வேறொரு இடத்தில் சேர்கின்றன. நீரியில் சார்ந்த தாக்கம், உராய்வு, அரிப்பு போன்றவற்றின் காரணமாகவும் இது ஏற்படலாம். இவற்றினால் தீவுகள், கடற்கரைகள், மணல் குன்றுகள் போன்றன உருவாக்கப்படலாம் அல்லது அழிக்கப்படலாம். இது அப்பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள், கடற்பயனம் போன்றவற்றைப் பாதிக்கலாம்.

**புயல் மற்றும் கடும் காற்றுகள்**

வெப்ப வலய அல்லது உப வெப்ப வலய நீர் நிலைகளில் புயல் தோன்றுகின்றது. மத்தியில் குறைவான அழுத்தம், சுழற்சியான மழை, கடும் காற்று ஆகியவற்றுடன் கூடிய வெப்ப அகடு, முன் சாராத சமநேர அளவு புயல் ஆகிய பண்புகளினால் இது வர்ணிக்கப்படுகிறது. வெப்ப வலய பிராந்தியங்களில் கடலின் மேற்பரப்பின் மீது உயர்வான வெப்பநிலை ஏற்படுவதன் காரணமாகவும்

பாரிய சுற்றளவில் கடும் வேகத்தில் காற்று பயணிப்பதன் காரணமாகவும் புயல் தோன்றுகிறது (வட பகுதியில் கடிகாரச் சுழற்சிக்கு எதிரான திசையிலும், தென் பகுதியில் கடிகார சுழற்சித் திசையிலும் இது நிகழ்கிறது). இதன் மத்தியில் மிகவும் குறைவான அமுக்கம் காணப்படுகிறது. அதன் வேகத்தின் பரப்பளவிற்குச் சமமான அளவில் அதன் தாக்கம் காணப்படுகிறது. இதனால் கட்டடங்களுக்கும் ஏனைய கட்டமைப்புகளுக்கும் ஏற்படுகின் பாதிப்பானது காற்றின் வேத்தில் தங்கியுள்ளது.

இலங்கையில் அடிக்கடி வேகமாக வீசுகின்ற மற்றொரு வகையான காற்று சூரைப் புயல் எனவழைக்கப்படும். மிக வேகமாக சுழற்சியாக வீசுகின்ற காற்று நிலத்தை அல்லது திறந்த நீர் நிலைகளை அடைகின்றது. சூரைப் புயலுக்கும் புயலுக்கும் இடையிலான வேறுபாடு என்னவெனில், சூரைப் புயலானது ஒரு குறிப்பிட்ட பிரதேசம் சார்ந்த குறுகிய காலத்தில் வீசுவதாகும்.

சில இடங்களில் காற்றுச் சுரங்கங்கள் காணப்படுகின்றன. இவற்றின் மூலமாக ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கி காற்று வேகமாக வீசுகின்றது.

**வரட்சி**

மக்கள், மிருகங்கள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றுக்கு நீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்ற வழமைக்கு மாறான கீழ் படிவுகளின் விரிவான காலப்பகுதி வரட்சி எனப்படும். ஏனைய அனர்த்தங்களிலிருந்தும் வரட்சியானது மாறுபட்டதாகக் காணப்படுகிறது. இது மிக மெதுவாகவே விருத்தியடைகின்றது. சில நேரங்களில் பல வருடங்கள் கூட எடுக்கலாம். இதன் ஆரம்பத்தைக் கண்டறிவது சற்றுக் கடினமாகும். வரட்சியானது பல வருடங்களுக்குத் தொடரக் கூடியவாறாகவிருந்த போதிலும், சில நேரங்களில் குறுகியதாகக் காணப்பட்ட போதிலும் கடும் வரட்சியானது குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழுகின்ற மக்களுக்குக் குறிப்பிடக் கூடிய பாதிப்பினை ஏற்படுத்தலாம். வரட்சியை வெறுமனே ஒரு பௌதீகக் காரணியாக மாத்திரம் வர்ணிக்க முடியாது. ஏனெனில், மனித செயற்பாடுகளின் காரணமாக இதன் தாக்கம் அதிகரிக்கலாம். நீர் தொடர்பான தேவைகளுக்கேற்பவும் தாக்கம் மாறுபடலாம். வரட்சியை 3 விதமாக வகைப்படுத்தலாம். அவையாவன, விவசாயம் சார்ந்த வரட்சிகள், வானிலை சார் வரட்சிகள், நீரியல் சார் வரட்சிகள். இவை ஒவ்வொன்றுக்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றன. நிவாரணம் வழங்குதலின் அடிப்படையில் விவசாய உற்பத்திகளுக்கு தொடர்ச்சியாக இரண்டு பருவ நிலைகளின் பொழுது ஏற்படுகின்ற இழப்பு வரட்சி என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

**நிலநடுக்கம்**

புவியின் மேலோடு சடுதியாக அசைவதும் அதனோடு நிலம் அதிர்வதும் நிலநடுக்கம் எனப்படும். நிலநடுக்க மாணிகளை அவதானிப்பதன் மூலம் நில நடுக்கம் அளவிடப்படுகிறது. கனப்பொழுதில் ஏற்படும் பரிமாணத்தின் அடிப்படையிலேயே பொதுவாக நிலநடுக்கங்கள் அளவிடப்படுகின்றன. பொதுவாக 5 இற்கு மேற்பட்ட அளவில் நிலநடுக்கம் ஏற்படுகின்ற போது அது முழு உலகிற்கும்

அறிக்கையிடப்படுகிறது. 5 ஐ விடக் குறைவான நில நடுக்கங்கள் பொதுவாக தேசிய அளவில் மாத்திரமே அறிக்கையிடப்படுகின்றன. இவை நிலநடுக்க அவதானிப்புக்களை மையமாகக் கொண்டு அளவிடப்படுகிறது. இது ரிச்டர் அளவிலும் அளவிடப்படுவதுண்டு. இவை இரண்டும் இவற்றின் பரிமாணத்தின் அடிப்படையில் மற்றும் எண்ணிக்கையின் அடிப்படையில் மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றன. 3 அல்லது அதனை விடக் குறைவான நிலநடுக்கங்கள் பெரும்பாலும் புலப்படாதவையாகக் காணப்படுகின்றன. 7 அல்லது அதனை விட அதிகமான பரிமாணங்களைக் கொண்ட நிலநடுக்கங்கள் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியவை. இவற்றின் ஆழத்தின் அடிப்படையில் தாக்கத் திறன் மாறுபடுகின்றது.

**தொற்றுநோய்**

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழுகின்ற சமூகத்தைச் சேர்ந்த அதிகமானவர்களை ஒரே நேரத்தில் துரிதமாகவும் வேகமாகவும் தாக்குகின்ற தொற்றுநோய்களானது கொள்ளைநோய் அல்லது தொற்றுநொய் எனப்படும். நிரந்தரமாக இப்பிரதேசத்தில் இந்நோய் காணப்படாத போதிலும் கூட ஒருவரிலிருந்து மற்றவருக்குத் தொற்றுவதாகவிருக்கிறது. குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள மக்களை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகமாக இந்நோய் தாக்கி வருகிறது.

**வெடி பொருட்கள்**

திடீரென பாரியளவில் கடும் சக்தி வெளியிடப்படுகின்ற பொழுது வெடிப்புகள் ஏற்படுகின்றன. இதன் பொழுது வெப்பநிலை அதிகமாக உயர்வடைவதுடன் வாயுக்களும் வெளிவிடப்படுகின்றன. சிலநேரங்களில் கடும் சத்தமும் கேட்பதுண்டு. உள் பகுதியில் ஏற்படுகின்ற அமுக்க அதிகரிப்பின் காரணமாக பாரிய சத்தத்துடன் வெடிப்புகள் ஏற்படுவதுண்டு. இதன் பொழுது பாரியளவில் சிகப்பு மற்றும் செம்மஞ்சல் நிறங்கள் கலந்த தீ எற்படுவதுண்டு. அத்தோடு கறுப்பு மற்றும் சாம்பல் நிறத்திலான புகை மண்டலமும் ஏற்படுவதுண்டு.

**தீ** (சட்டத்தில் பட்டியலிடப்பட்டதன் பிரகாரம் நகரம் மற்றும் காட்டுத் தீ சார்ந்த விளக்கங்கள் கீழே உள்ளடக்கப்பட்டுள்ளன)

தீயினால் அடிக்கடி அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. தீயினால் மக்களுக்கு ஏற்படும் தாக்கங்களில் பெரும்பாலும் அவர்களது தோல் எரிதலுக்கு உட்படுகிறது. இதன் தாக்கு திறன் பெரும்பாலும் வெப்பத்தின் அளவு மற்றும் எவ்வளவு நேரம் என்பவற்றில் தங்கியுள்ளது. எக்ரோலீன் போன்ற நச்சு வாயுக்களை தீ ஏற்படுத்தலாம் (நிறமற்ற எக்ரிட் ஆனது எரிச்சலை ஏற்படுத்தக்கூடிய மணத்தைக் கொண்டதாகவிருக்கும், பாதிப்படைந்த பிரதேசத்திலிருந்து கடும் துர்நாற்றமும் வீசுலாம்). மேலும் காபன் மொனோ ஒட்சைட் மற்றும் சயனைட்டும் உருவாக்கப்படுகிறது. வெப்பத்தின் கடும் தாக்கத்தினால் அல்லது எரிதலினால் பௌதீக ரீதியான கட்டமைப்புகள் பாதிக்கப்படுகின்றன. மின்சாரம் போன்ற அத்தியவசிய சேவைகள் மீது இது தாக்கத்தை

ஏற்படுத்தலாம். இதனால் பாதிப்பு மென்மேலும் அதிகரிப்பதற்கான வாப்புகள் உள்ளன. நீர் மாசுறுதல், மண்ணரிப்பு, வளி மண்டலம் மாசுறுதல், சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் பாதிப்புகள் ஏற்படுதல் போன்ற எதிர் மறையான தாக்கங்களும் தீயினால் ஏற்படலாம். தீயினை பல்வேறு விதமாக நாம் வகைப்படுத்த முடியும்: காட்டுத் தீ, நகரத் தீ போன்றன.

**நகரத் தீ** : கட்டிடங்கள், வீடுகளுக்கு ஏற்படும் தீ அல்லது பல கட்டிடங்களை அல்லது வீடுகளைத் தாக்கக் கூடியளவில் பாரிய பிரதேசத்தினுள் பரந்து பரவுகின்ற தீ நகரத் தீ எனப்படும். மக்கள் வசிக்கின்ற பாரிய பிரதேசம் ஒன்றை இது தாக்குகின்ற போது இது சவால் மிக்கதாகக் காணப்படுகிறது. குறிப்பாக கட்டிடங்களுக்கு இடையில் இடைவெளியற்ற நிலையில் காணப்படுகின்ற பொழுது மக்கள் மிகவும் செறிவாகவுள்ள சேரிகள், குடிசைகள் போன்ற பிரதேசங்களில் வாழுகின்ற பொழுதும் ஏற்படுகின்ற தீ கடும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**காட்டுத் தீ** : ஒரு நாட்டுப்புறப் பகுதியில் அல்லது காட்டுப் பிரதேசத்தில் மரங்கள் அடர்த்தியாகக் காணப்படுகின்ற இடங்களில் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு தீ ஏற்படுவதுமுண்டு. இதன் காரணமாக தாவரங்கள் அழிகின்றன. ஏனைய தீக்களிலிருந்தும் காட்டுத் தீயானது மாறுபட்டதாகக் காணப்படுகிறது. இது இதன் அளவிலும் வேகத்திலும் அதன் மூலத்திலிருந்து பரவுகின்ற விதத்திலும் அதன் ஆற்றலிலும் திசைகளை மாற்றுகின்ற வடிவத்திலும் வீதிகள், ஆறுகள் மற்றும் தீ தடுப்புப் பிரதேசங்கள் ஆகியவற்றைத் தாண்டிப் பரவுகின்ற விதத்திலும் ஏனைய தீயிலிருந்து வேறுபட்டதாகக் காணப்படுகிறது. காட்டுத் தீயானது அது தூண்டப்படுகின்ற விதம், அது பரவுகின்ற வேகம், எரிதலுக்கு உட்படுகின்ற பொருட்கள், தீ ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிலவும் வானிலை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. மனிதர்கள் தீ மூட்டுவதனாலும் காட்டுத் தீ ஏற்படுகிறது.

### வெள்ளப்பெருக்கு

பொதுவாக நீரில் மூழ்கியிருக்காத பிரதேசமொன்றில், மக்கள் குடியிருப்புகள் மீது பாரியளவிலான நீர் செல்வது வெள்ளப்பெருக்கு எனப்படும். இதன் காரணமாக குறிப்பிட்ட பிரதேசம் தற்காலிகமாக நீரில் மூழ்கின்றது. ஏனைய சந்தர்ப்பங்களில் இவ்வாறு காணப்படுவதில்லை. குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவை விட அதிகமானளவு நீர் அப்பிரதேசத்தினுள் வருகின்ற போது பௌதீக ரீதியாக வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது. வெள்ளப்பெருக்கானது அதன் ஆழத்திலும் நீரில் மூழ்கியிருக்கின் கால அளவின் அடிப்படையிலும் மாறுபட்டதாகக் காணப்படலாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டே ஒரு வெள்ளப் பெருக்கு சிறியதா அல்லது பெரியதா என்பது கணிக்கப்படுவதுடன், அதனால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களும் கருத்திற்கொள்ளப்படுகின்றன. வெள்ளப்பெருக்கினை பல வகைகளாக நாம் வகுக்க முடியும்.

**திடீர் வெள்ளம்** : குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றில் குறுகிய காலப்பகுதியின் பொழுது அதிகளவு கடும் மழை பெய்வதனால் இது ஏற்படுகிறது. மழை பெய்கின்ற பொழுது அல்லது மழை விட்டதன் பின்னர் ஒருசில நிமிடங்களில் அல்லது மணித்தியாலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. குறிப்பாக மலைப் பிரதேசங்களில் இது ஏற்படுகிறது.

ஆற்று வெள்ளம்: கடும் மழை பெய்வதன் காரணமாக ஆறுகள் பெருக்கெடுப்பதனால் இயற்கையாக அல்லது பருவக் காலத்தின் பொழுது ஆற்று வெள்ளம் ஏற்படுகிறது. நீரேந்துப் பிரதேசங்களில் பெய்கின்ற மழை நீரை ஆறுகள் அல்லது கால்வாய்கள் தம்மகத்தே கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட பிரதேசமொன்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. நீர் நிலைகளுக்கருகில் அல்லது தாழ் நிலப் பிரதேசங்களில் மக்கள் குடியிருப்புகள் காண்பபடுகின்ற பொழுது வெள்ளப் பெருக்கினால் ஏற்படக்கூடிய இடர்களும் அதிகமாக இருக்கின்றன.

**நீர்த் தேக்கத்துடன் தொடர்புடைய வெள்ளப்பெருக்கு:** வழிந்தோடும் நீருக்கு எதிராக அதனைத் தடுக்கக் கூடிய விதத்தில் அல்லது வேகத்தைக் குறைக்கக் கூடிய விதத்தில் கட்டுப்படும் அணை அல்லது அணைக்கட்டானது நீர்த்தேக்கத்தை அல்லது ஒரு குளத்தை உருவாக்குகின்றது. இதன் மூலம் விவசாயம் அல்லது மின்னுற்பத்தி, நீர் விநியோகம் மற்றும் ஏனைய தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. இங்கு நீர் வடிகால் காணப்படுகிறது. இதன் வழியேயே நீர் வழிந்து செல்கின்றது. அவ்வப்போது அல்லது தொடர்ச்சியாக இதன் மூலம் நீர் வழிந்துசெல்கின்றது. நீர்த் தேக்க வாயில்கள் திறக்கப்படும் பொழுது நீர் வழிந்தோடும் பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் எதிர்பாராத வெள்ளங்களை எதிர்கொள்ள முடியும். அணை அல்லது அணைக்கட்டு அல்லது நீர் வடிகால் ஆகியன உடைகின்ற பொழுது நீர் வழிந்தோடும் பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது உயிர்களை இழக்கலாம், உடைமைகளை இழக்கலாம் அல்லது பாரிய பாதிப்புக்களை எதிர்கொள்ளலாம். சிவில் சமூகத்திற்கும் சுற்றாடலுக்கும் இவ்விதமான அணைகள் உடைவதன் காரணமாக பெரும் பாதிப்புகள் ஏற்படலாம் என்பதைக் கருத்திற்கொண்டு சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் “அணைக்கட்டுக்களானது அபாயகரமான சக்திகளை தம்மகத்தே கொண்ட நிர்மாணிப்புகள்” என பரிசீலிக்கப்படுகின்றன.

**நகர்ப் பிரதேச வெள்ளப்பெருக்கு** : நிலத்தின் மேற்பகுதியானது நீரை உறிஞ்சும் தன்மை குறைவடைவதனாலும் நிலத்தின் மேற்பகுதியில் நீரை உறிஞ்சாத பொருட்கள் பதிக்கப்பட்டிருப்பதன் காரணமாகவும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென ஈர நிலங்கள் நிரப்பப்பட்டிருப்பதாலும் போதியளவு நீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வழிமுறைகளையும் கல்வெட்டுக்களையும் மேற்கொள்ளாத நிலையில் வீதி நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுவதனாலும் வெள்ளப் பெருக்கினால் ஏற்படக் கூடிய அபாயங்களைக் கருத்திற் கொள்ளாமல் காணிகள் ஒதுக்கப்படுவதன் காரணமாகவும் நகரப் பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. மேலும் சனத்தொகை வளர்ச்சியடைந்ததன் காரணமாக குறைவாக வருமானமுடைய மக்கள் வெள்ளம் தேங்கியிருக்கக் கூடிய ஒதுக்குப்புற இடங்களில் குடியமைப்புகளை அமைத்துள்ளதன் காரணமாகவும் வெள்ளப் பெருக்கு அபாயம் அதிகரித்துள்ளது.

**பிரதேச வெள்ளப்பெருக்கு** : போதியளவு வடிகால் வசதிகள் இன்மையின் காரணமாகவும் அல்லது வழிந்து செல்லக்கூடிய நீரைத் தேக்கி வைப்பதற்கு வசதிகள் இன்மையின் காரணமாகவும் இது

ஏற்படுகிறது. கிராமப் புறங்களைப் பொறுத்தவரையில், ஈர நிலங்கள் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுவதன் காரணமாகவும் வெள்ளம் தேங்கியிருக்கக் கூடிய இடங்களில் வீதிகள் நிர்மாணிக்கப்படுவதன் காரணமாகவும் இவை ஏற்படுகின்றன.

**கரையோர வெள்ளப் பெருக்கு** : கரையோரப் பகுதியின் உயரைத்தை விட நீர் மட்டம் அதிகமாகக் காணப்படுகின்ற பொழுது அதாவது, அலை அல்லது சூறாவளி போன்றவற்றினால் இவ்வித நிலைமைகள் ஏற்படுகின்ற பொழுது வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. இது சுமுக நிலைக்குத் திரும்புவதற்கு ஒருசில நாட்கள் முதல் ஒருசில வாரங்களாகலாம்.

**கைத்தொழில் சார் அனர்த்தங்கள்**

விபத்து, கவனயீனம், தேர்ச்சியின்மை ஆகியவற்றின் காரணமாக கைத்தொழில் சார் நிறுவனங்களில் ஏற்படக் கூடிய விபத்துகள் கைத்தொழில் சார் அனர்த்தங்கள் எனப்படும். இவை கைத்தொழில் சார் விபத்துக்களாகும். இவற்றின் மூலம் பாரியளவில் பாதிப்புகள், காயங்கள் அல்லது உயிருக்கும் உடைமைக்கும் இழப்புகள் ஏற்படலாம். நான்கு விதமான கொள்கைகளின் அடிப்படையில் கைத்தொழில் சார் விபத்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில், கைத்தொழில் நிறுவனங்களானது மாறுபட்ட மூல் பொருட்கள், இடைப்பொருட்கள், கழிவுப் பொருட்கள் மற்றும் இறுதி உற்பத்திகள் ஆகியவற்றைப் பிரயோகிக்கின்றன. தீ, வெடிப்புகள், நச்சு அல்லது இரசாயனப் பதார்த்தங்களின் வெளியீடு, சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் ஆகியன இவற்றுடன் கருத்திற்கொள்ளப்படுகின்றன. தீ, வெடிப்பு, நச்சுப் பொருட்கள் அல்லது இரசாயனப் பதார்த்தங்களை வெளியிடல் ஆகியன தனியான காப்பீடுகளாகக் கருதப்படுகின்றன. சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தனியாகக் கருத்திற்கொள்ளப்படாத பட்சத்திலும் இங்கு இவை காற்று அனர்த்தம், தீ அனர்த்தம், இரசாயன மற்றும் வரட்சி சார் அனர்த்தங்கள் ஆகியவற்றுடன் இணைத்துக் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

**மண் சரிவு**

மண் சரிவானது புவிச்சரிதவியலுடன் தொடர்புடைய விடயமாகும். இது நிலம் தாழிறங்கல், கற்கள் விழுதல், சரிவுகளில் ஏற்படும் பிரச்சினைகள், ஆழம் குன்றிய சிதை குளங்கள், மண் கரைந்து செல்லல் போன்ற பல்வேறு வகையான நில அசைவுகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. மண் சரிவு ஏற்படுவதற்கான பிரதான காரணி புவியீர்ப்புடன் தொடர்புடையதாகக் காணப்பட்ட போதிலும் மூல சரிவின் ஸ்திரத்தன்மையைத் தாக்குகின்ற ஏனைய பல காரணிகளும் உள்ளன. குறிப்பிட்ட நில மேற்பரப்புப் பிரதேசத்தில் கட்டியமைக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள சரிவுகள் பாதிப்புறும் நிலையில் காணப்படுவதுண்டு. உண்மையில் மண் சரிவொன்று ஏற்படுவதற்கு முன்னர் அதனைத் தூண்டக் கூடிய காரணிகள் இருத்தல் வேண்டும். நில நீர் அகற்றப்படுதல், ஆகழ்வுப் பணிகள், சுங்கக் கற்கள் கரைந்து செல்லல், இயற்கை வாயுக்களைத் தோன்றியெடுத்தல், நில நடுக்கம் போன்ற காரணிகளினால் நிலம் தாழிறங்கும் பொழுது அமிழ்தல் ஏற்படுகின்றது. கடும்

மழையின் காரணமாக சிதை குளங்கள் கழுவிச் செல்லப்படுவதுடன் மண் கழுவிச் செல்லப்படுதல் மற்றும் அமிழ்தல் ஆகியன ஏற்படுகின்றன. மலைப் பிரதேசங்களில் அவ்வப் போது மேற்கொள்ளப்படும் முறையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளும் மண் சரிவிற்கு காரணியாகின்றன. உதாரணமாக, முறையாக நிலத்தை வெட்டாமை. மேலும் NDRO வின் பிரகாரம் ஒரு நாளைக்கு 100 மி.மீ. ஐ விட அதிகமாக மழை பெய்கின்ற பொழுது அது மண் சரிவைத் தூண்டக் கூடியதாகவுள்ளது.

**மின்னல் தாக்குதல்கள், கடும் இடி, புயல்**

மின்னலானது உயர் மின்னழுத்தமுடைய கண்களுக்கு புலப்படக் கூடிய மின் வெளியேற்றமாகும். இது இடி மின்னற்புயலினால் உருவாக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து கடும் சத்தத்துடன் கூடிய இடி ஏற்படுகின்றது. இதன் மின்னழுத்த வெளியீடானது மேகங்களுடன் கூடிய மின்னேற்றப்பட்ட பிரதேசங்கள் அல்லது மேகங்களுக்கு இடையில் மற்றும் புவியின் மேற்பரப்பில் தோன்றக் கூடியதாகும். வளிமண்டலத்தினுள் காணப்படுகின்ற மின்னேற்றப்பட்ட பிராந்தியங்கள் தற்காலிகமாக தமது பிரதேசத்தினுள் மின் வெளிச்சம் ஏற்படுகின்றது. இது நிலத்திலுள்ள பொருள் ஒன்றைத் தாக்குகின்ற பொழுது பொதுவாக மின் தாக்குதல் எனவழைக்கப்படுகின்றது. மின்னல் தாக்குதலினால் உயிர் இழப்புகள் ஏற்படலாம்., கட்டிடங்களுக்கும் ஏனைய பொருட்களுக்கும் பாதிப்புகள் ஏற்படலாம். மின்னல் தாக்குதலானது குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அடிக்கடி நிகழ்ந்தாலும் கூட எந்தவொரு இடத்திலும் இது இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**கடல் சார் அனர்த்தம்**

கடல் சார் சுற்றாடலைத் தாக்கக் கூடிய அல்லது அச்சுறுத்தக்கூடிய இயற்கையான அல்லது மனிதர்களினால் உருவாக்கப்பட்ட நிலைமைகள் அல்லது நிகழ்வுகள் கடல்சார் அனர்த்தங்கள் எனப்படும். இவற்றுள் கடலின் மேல் பரப்பில் செல்கின்ற கப்பல்கள் அல்லது நீர் மூழ்கிக் கப்பல்கள், கடல் பயணம் அதாவது, இலங்கை கடல் பரப்பினுள் மேற்கொள்ளப்படுகின்ற கடற் பயணம் ஆகியவற்றுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் இது உள்ளடக்கும். கப்பலில் இருந்து வெளியேற்றப்படுகின்ற ஆபத்துக்களை வெளியேற்றக் கூடிய இரசாயனப் பதார்த்தம் அல்லது ஏனைய ஆபத்தான பதார்த்தங்கள் மூலம் இவை ஏற்படலாம். காயங்களை அல்லது நோய்களை அல்லது பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு ஆபத்துக்களை விளைவிக்கக் கூடிய வெடிபொருட்கள், தீப்பற்றக்கூடிய பொருட்கள், நச்சுப் பதார்த்தங்கள், துருப்பிடிக்கக் கூடிய பதார்த்தங்கள், ஒட்சிசன் ஏற்றப்பட்டவை, எரிச்சலை அல்லது ஏனைய விதமான பாதகங்களை ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் இவற்றுள் உள்ளடங்குகின்றன. உடல் ரீதியான அல்லது சுகாதார ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் ஆபத்தான பொருட்களென வகைப்படுத்தப்பட்டுள்ளன. மூச்சுத் திணறலை ஏற்படுத்தக் கூடிய வாயுக்கள் மற்றும் எரிதலினால் வெளிப்படும் தூசுக்கள், காற்றின் தாக்கம் ஏற்படுகின்ற பொழுது துரிதமாக தீப்பற்றக் கூடிய வாயுக்கள் போன்றன ஆபத்துக்களை விளைவிக்கக் கூடியவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடலில் ஏற்படக் கூடிய சுழிகளும் கடல் சார் அனர்த்தங்களாகக் கருதப்படுகின்றன.

**அணுவாயுத ரீதியான அனர்த்தங்கள்**

சர்வதேச அணுசக்தி நிறுவனத்தினால் அணுவாயுத ரீதியான அனர்த்தங்கள் இவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன (மக்களுக்கும் சுற்றாடலுக்கும் ஏனைய வசதிகளுக்கும் பாரியளவிலான பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வு). உதாரணமாக, தனி நபர்களுக்கு உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியவை, சுற்றாடலுக்கு வெளியே ஏற்படும் பாரியளவிலான கதிரியக்கங்கள் அல்லது அணு உலைக் கசிவுகள்.

**நிலத்திலும் கடல் சார் பகுதிகளிலும் ஏற்படுகின்ற எண்ணெய்க் கசிவுகள்**

திரவப் பெற்றோலிய ஹைட்ரோ காபன் சுற்றாடலில் வெளியிடப்படுவது எண்ணெய்க் கசிவுகள் எனப்படும். குறிப்பாக மனித நடவடிக்கை காரணமாக கடல் சார் பிரதேசங்களில் ஏற்படும் எண்ணெய்க் கசிவுகளும் அதனால் ஏற்படும் மாசுறுதலும் இதனுடன் உள்ளடங்கும். பொதுவாக எண்ணெய்க் கசிவானது கடல் சார் பகுதிகளிலும் கரையோர நீர் நிலைகளிலும் ஏற்படுவதையும் இப்பதனம் குறிப்பினும் கூட இவ்விதமான எண்ணெய்க் கசிவுகள் நிலப் பகுதிகளிலும் ஏற்படலாம். தாங்கிகள் மற்றும் கரையோரப் பகுதிகளிலுள்ள மேடைத் தளங்கள், குளங்களைத் தோன்றுதல், தூய்மையாக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (கெசோலைன், டீசல் போன்றவை), அவற்றின் உப உற்பத்திப் பொருட்கள் பாரிய கப்பல்களினால் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருட் கசிவுகள் அல்லது வேறு விதமான எண்ணெய் சார் கழிவுப் பொருட்கள் போன்றவற்றின் காரணமாக வெளியிடப்படுகின்ற மசகு எண்ணெயின் காரணமாகவும் இவை ஏற்படலாம்.

**கதிரியக்க ரீதியான அவசரகால நிலை**

அபாயகரமான கதிரியக்க ரீதியான பாதகங்களை ஏற்படுத்தக் கூடிய பொருட்கள் சுற்றாடலுக்கு வெளியிடப்படுவது கதிரியக்க ரீதியான அவசரகால நிலை எனப்படும். கதிரியக்க ரீதியான பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அல்லது போக்குவரத்துச் செய்யப்படுகின்ற எவ்விதமான இடங்களிலும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறலாம்.

**சுனாமி** (**Seismic Wave**) நீருக்குக் கீழ் ஏற்படுகின்ற நில நடுக்கம், எரி மலை வெடிப்புகள், ஏனைய நீருக்குக் கீழான வெடிப்புகள், மண் சரிவுகள், பனிக்கட்டியாறு கரைதல், விண்கற்களின் தாக்கம், ஏனைய தாக்கங்கள் ஆகியவற்றின் காரணமாக பாரிய அளவிலான நீர் இடம்பெயர்கின்ற பொழுது அதன் காரணமாக தொடர்ச்சியான சுனாமி அலைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. சுனாமி அலைகள் கடல் பகுதியில் அதிகூடியவேகத்துடன் பயணித்த பொழுதிலும் அவை ஆழம் குறைந்த நீர்ப் பகுதிக்கு வருகின்ற பொழுது வேகம் குறைவடைகின்ற அதேவேளை அலையின் நீளமானது மென்மேலும் ஆழமாகின்றது. 7 றிட்ச்டர் அளவிற்கு மேல் நில நடுக்கம் ஏற்படுகின்ற பொழுது பொதுவாக சுனாமி ஏற்படுகிறது. அத்தோடு கடல் நீர் செங்குத்து வடிவில் உயர்த்தப்படல் வேண்டும். மேலும் இது கரையை நோக்கித்தள்ளப்படுதலும் வேண்டும்.

**குறிப்பு:**

2005 ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் உயிரியல் சார் அனர்த்தங்கள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் இந்த NEOP இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன ரீதியான பொறுப்புகளின் கீழ் ஏனைய அனர்த்தங்கள் தொடர்பில் நடைமுறையில் இருக்கின்ற பொறிமுறைகள் போல் இந்த அனர்த்தம் தொடர்பான விடயங்களையும் கையாண்டு அதற்குரிய பதிலளிப்புகளை மிக எளிமையாக மேற்கொள்ள முடியும். இது தொடர்பான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய இயற்கையாக நிகழ்கின்ற விடயங்களை உயிரியல் சார் அனர்த்தங்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது. உதாரணமாக, வைரஸ், பக்ரீரியா, தாவரங்கள், பூச்சிகள், விலங்குகள், பறவைகள் மற்றும் சில வேளைகளில் மனிதர்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும் இவற்றுள் உள்ளடங்கும். இவற்றுள் உயிரினங்களும் அவை சார்ந்த நச்சுப் பதார்த்தங்களும் உள்ளடங்கும் (உதாரணமாக, நச்சுப் பொருட்கள்) அல்லது நோய்க் காவிகளினால் உருவாக்கப்படுகின்ற நோய்கள், உதாரணம் நச்சுப் பதார்த்தங்களைக் கொண்ட வன உயிரினங்கள், பூச்சுக்கள், நச்சுத் தன்மையுடைய தாவரங்கள், ஒட்டுண்ணிகள், பக்ரீரியா, வைரஸ் போன்றவற்றைக் காவிச் செல்லும் நுழம்புகள் போன்றன. இவற்றுள் மருத்துவ ரீதியான கழிவுகள் அல்லது நுண்ணுயிர்களின் மாதிரிகள், வைரஸ், நச்சுப் பதார்த்தங்கள் (உயிர் மூலங்களிலிருந்து) ஆகியனவும் உள்ளடங்கும். உயிரினங்களின் சுகாதாரத்திற்கு இவை அச்சுறுத்தல்களாகத் திகழ்கின்றன குறிப்பாக மனிதர்களின் சுகாதாரத்திற்கு. விலங்குகளுக்கு பாதகங்களை ஏற்படுத்தக் கூடிய பாதார்த்தங்களையும் கொண்டதாக இவை காணப்படுகின்றன. இந்த வார்த்தைப் பிரயோகம், அதனோடு தொடர்புயை குறியீடுகள் ஆகியன பொதுவாக எச்சரிக்கையின் நிமித்தம் பயன்படுத்தப்படுகிறது. எனவே இவற்றை முகங்கொடுக்கக் கூடியவர்கள் இப்பதார்த்தங்களைப் பற்றி அறிந்து உரிய முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தல் சிறப்பாகும்.

**இணைப்பு 4 அவசரகால நிலைமைகளின்போது செயலாற்றுகை குழு உறுப்பினர்கள்**

| இல. | உறுப்பினர்கள் |
|---|---|
| 1. | பணிப்பாளர் - செயலாற்றுகை- பாதுகாப்புப் பதவியணித் தலைமை அதிகாரி |
| 2. | பணிப்பாளர் - செயலாற்றுகை - இலங்கை இராணுவத் தலைமையகம் |
| 3. | பணிப்பாளர் - செயலாற்றுகை - இலங்கைக் கடற்படைத் தலைமையகம் |
| 4. | பணிப்பாளர் - செயலாற்றுகை - இலங்கை விமானப்படைத் தலைமையகம் |
| 5. | பணிப்பாளர் நாயகம் - அரசாங்கத் தவகல் திணைக்களம் |
| 6. | பணிப்பாளர் நாயகம் - மத்திய சூழல் அதிகாரசபை |
| 7. | கட்டளை அதிகாரி – வெளிக்களப் படையணித் தலைமையகம் இலங்கைப் பொலிஸ் |
| 8. | மாவட்டச் செயலாளர் - மாட்டச் செயலகம், கொழும்பு |
| 9. | இரசாயன ஆயுதங்கள் தொடர்பான தேசிய சமவாயத்தின் தலைவர் |
| 10. | தலைவர் - தேசிய அணுசக்தி அதிகாரசபை |
| 11. | பணிப்பாளர் - தேசிய அனர்த்த நிவாரணங்கள் சேவைகள் நிலையம் |
| 12. | தலைமைத் தீயணைப்பு அதிகாரி – தீயணைப்பு சேவைகள் திணைக்களம், கொழும்பு 10 |
| 13. | தலைமைப் பொறியியலாளர் - இலங்கை மின்சாரசபை |
| 14. | பிராந்தியத் தலைமை அதிகாரி – சிறீலங்கா டெலிகொம் லிமிட்டட் |
| 15. | பணிப்பாளர், பயிற்சி – கொழும்பு மாநகர சபை |
| 16. | பணிப்பாளர், பராமரிப்பு – வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை |
| 17. | பாதுகாப்பு முகாமையாளர் - இலங்கைத் துறைமுக அதிகாரசபை |
| 18. | முகாமையாளர் - கொழும்பு சிட்டி |
| 19. | தலைமை மருத்துவ அதிகாரி – சுகாதாரம், கொழும்பு மாநகர சபை |
| 20. | பிரதிப் பணிப்பாளர் - இலங்கைக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் |
| 21. | தேசிய ஒருங்கிணைப்பாளர் - டிபிஆர்டி, சுகாதார அமைச்சு |
| 22. | தலைமை அதிகாரி, கருமமாற்றல் - இலங்கை மின்சார சபை |
| 23. | பணிப்பாளர் நாயகம் - தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு |
| 24. | பணிப்பாளர் நாயகம – வளிமண்டலவியல் திணைக்களம் |
| 25. | பணிப்பாளர் நாயகம – நீர்ப்பாசனத் திணைக்களம் |
| 26. | பொது முகாமையாளர் - இலங்கைக் காணிகள் சீர்திருத்த ஆணைக்குழு |
| 27. | செயலாளர் - கல்வி அமைச்சு |
| 28. | மாகாணப் பணிப்பாளர் - மாகாணக் கல்வித் திணைக்களம் (மேல்) |
| 29. | செயலாளர் - உள்நாட்டலுவல்கள் அமைச்சு |

**இணைப்பு 5**

**அவசரகால நிலைமைகளின் போதான குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள கடமைப் பொறுப்புக்கள்**

இயற்கையாக அல்லது மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் விசேட அனர்த்தங்கள் தொடர்பாகப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும் அல்லது பொறுப்புள்ள பங்காளி முகவர்

நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் குழு உறுப்பினர்கள் அடிக்கடி கூடுகின்றனர். விரிவான கடமைப் பொறுப்புக்கள் ஊடாக ஆலோசனை வழங்குதல், வழிநடத்தல், ஒத்துழைப்பு வழங்குதல், வசதிகளைச் செய்துகொடுத்தல் விசேட அவசர கருமமாற்றும் நடவடிக்கைகளின் போதும் மற்றும் பின்வரும் பதில் நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகள் சம்பந்தமாகவும் இவை மேற்கொள்ளப்படும். தேவைகளுக்கு ஏற்ப குழுவின் உறுப்பினர்கள் வெவ்வேறாகக் கூடிப் பல்வேறு அனர்த்தங்கள் தொடர்பாகப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். அவர்களது கடமைப் பொறுப்புக்கள் பின்வருமாறு.

1. நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் அறிவித்தவுடன் உடனடிப் பதில் நடவடிக்கைக் குழுக்களை நியமித்தல்.
2. அனர்த்தங்கள் தொடர்பாகப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகக் குறிப்பிட்ட தாபன ரீதியிலான அனர்த்த முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
3. தேசிய அவசர நிலைமை கடமையாற்றும் குழுவுக்கான ஆலோசனைகளை வழங்குதல்.
4. அவசரகால கருமமாற்றும் குழு தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் செயற்பட்டு முகவர் நிறுவனத்தின் சார்பாகப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். உடனடியாக வழமை நிலைக்குக் கொண்டுவருதல் மற்றும் பதில் நடவடிக்கைகள்.
5. உறுப்பினர் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவோர் விடயத்துக்குள் வரும் எந்தவோர் நிலைமையையும் வழமைக்குக் கொண்டுவர உதவுதல்.
6. முன்னெச்சரிக்கை விடுத்தல் தொடர்பான உடனடிப் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
7. பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாத்தல், பரிசீலித்தல், அனர்த்தத்துக்கு உள்ளான இடத்தைப் பாதுகாத்தல்.
8. மானிட வளங்கள், உபகரணங்கள் மற்றும் ஒருங்கிணைப்பு.
9. முகவர் நிறுவனத்தின் சார்பாகப் பதில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைப் பாதுகாத்தல் மற்றும் உறுதிப்படுத்தல்.
10. தேடுதல், மீட்பு, அப்புறப்படுத்தல் என்பவற்றை ஒழுங்கு செய்தல்.
11. அவசர நிலைமை பதில் நடவடிக்கை, அணு, கதிர்வீச்சு, விமான நிலையங்களினூடாக வரும் பயணிகளினால் தொற்றுநோய் பரவுவதைத் தடுத்தல், தடுத்துவைத்தல்.
12. முதலுதவிகள், உடனடிச் சுகாதார வசதிகள், காயமடைந்த, சுகவீனமுற்றவர்களுக்கான சிகிச்சையளிப்பு.
13. பொருத்தமான ஏனைய பணிகள்.